PUBLIC LIBRARY
JAFFNA

பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா. 7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | ஆனி 27 | ஞாயிற்றுக்கிழமை | (11.07.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 205

ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

# அமெரிக்கப் புலனாய்வு அதிகாரிகள்

# யாழ்.குடா நாட்டுக்கு இரகசிய விஜயம்

## இராணுவ புலனாய்வு அதிகாரிகளுடன் பலாலியில் இரு நாள் மந்திராலோசனை

(திருநெல்வேலி)

**அமெரிக்காவின் புலனாய்வுத் துறை அதிகாரிகள் ஐவர் அடங்கிய குழு, யாழ்.குடாநாட்டிற்கு இரு நாள் இரகசிய விஜயம் ஒன்றை மேற்கொண்டுவிட்டு கொழும்பு திரும்பியுள்ளதாகத் தெரியவருகின்றது.**

நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்த இவர்கள் யாழ்பலாலி படைத்தளத்தில் நேற்று வரை தங்கியிருந்து புலனாய்வுத் துறை அதிகாரிகளுடன் ஆலோசனைகளை நடத்தியுள்ளனர்.

சமாதான காலத்தில் புலனாய்வுத் துறையினரின் பங்கு பணிகள்;

மக்களுடனான தொடர்புகளை புலனாய்வுத் துறையினர் பேணுகின்ற விதம்;

பொது மக்களின் எதிர்பார்ப்புகளை அறிந்து கொள்ளும்விதம்;

இராணுவச் சமநிலையைப் பேணுதல் ஆகியன தொடர்பில் விரிவான கலந்துரையாடல்களை

(10ஆம் பக்கம் பார்க்க)

## கச்சேரிக்கு அண்மையில் கிளைமோர் குண்டு மீட்பு

(திருநெல்வேலி)

கசசேரிக்கு அண்மையில் காணப்பட்ட கிளைமோர் குண்டு ஒன்று நேற்றுச் செயலிழக்க செய்யப்பட்டது. கச்சேரிக்கு அண்மையில் படையினர் முகாம் அமைத்திருந்த இடத்தில் தற்போது காவலரண் ஒன்று காணப்படுகின்றது. இதில் இடையிடையே படையினர் காவல் கடமையில் ஈடுபடுவதுண்டு.

இந் நிலையில் நேற்றைய தினம் இப் பகுதியூடாகச் சென்ற பொது மக்கள் கிளைமோர் குண்டொன்றினைக் கண்டுள்ளனர். இதனையடுத்து இது தொடர்பில் படையினருக்கு அறிவிக்கப்பட்டதன் பேரில் 51ஆவது படையணியினரால் பிற்பகல் 2.45 மணியளவில் குண்டு செயலிழக்கச் செய்யப்பட்டது. (த-43)

## சுகாதார ஊழியர் வெற்றிடத்துக்கு ஆயிரம் பேர் ஆட்சேர்க்கப்படுவர்

(வவுனியா)

வடக்குக் கிழக்கு மாகாண சுகாதார சேவையில் நிலவும் சுகாதார சிற்றூழியர் வெற்றிடத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படவுள்ளது.

இதற்கான அனுமதியை அரசாங்கம் வழங்கியுள்ளதாக வடக்குக்கிழக்கு மாகாண ஆளுநர் அசோக ஜெயவர்த்தனா தெரிவித்துள்ளார்.

வடக்குக் கிழக்கில் நிலவும் சுகாதார ஊழியர் வெற்றிடத்திற்கு ஆயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இதில் தற்போது சுகாதாரத் தொண்டர்களாகப் பணியாற்றுவோருக்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளதாக ஆளுநர் அசோக ஜெயவர்த்தனா மேலும் குறிப்பிட்டுள்ளார்.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் ஆளுநரைச் சந்தித்த போதே அவர் இத்தகவலை வெளியிட்டுள்ளார். (த-13)

## அவசர கால நிலையை மீண்டும் பிரகடனப் படுத்துக

### ஹெல உறுமய ஜனாதிபதியிடம் கோரிக்கை

(கொழும்பு)

நாட்டின் பாதுகாப்பினை உறுதி செய்வதற்காக அவசரகால நிலைப் பிரகடனத்தை அமுல்படுத்துமாறு ஹெல உறுமய ஜனாதிபதியைக் கோரியுள்ளது.

ஹெல உறுமயத் தலைவர் வண. எல்லாவல மேதானந்த தேரர் இது பற்றித் தெரிவிக்கையில்;

கடந்த புதனன்று இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலைப் போன்ற சம்பவங்களால் நாட்டின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலளிக்கக் கூடிய பயங்கரவாதிகளுக்கெதிராகச் சரியான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பேற்று எட்டு மாதங்களான நிலையில் நாளுக்கு நாள் நாட்டின் பாதுகாப்பு நிலைபரம் மோசமடைந்து வருகின்றது.

தலைநகரில் தற்கொலைதாரிகள் புகுந்துள்ளனர். அவர்களின் அச்சுறுத்தலுக்கான முதல் அறிகுறியே தற்கொலைத் தாக்குதல். இராணுவத்தினர் மீது கொழும்பு நகரினுள் தொடுக்கப்படும் கொலைத் தாக்குதலைத் தடுக்க அரசாங்கம் தவறிவிட்டது.

புலிகளைப் பலவீனப்படுத்த ஐ.தே.க அரசும் தற்போதைய அரசும்

(10ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.ம.சு.முன்னணி ஆதரவாளர் மீது

## குண்டுத் தாக்குதலுக்கு இலக்கான

# ஐ.ம.சு.முன்னணி ஆதரவாளர் மீது நேற்றிரவு சூடு;ஐவர் படுகாயம்

## ஐ.தே.க. ஆதரவாளர் 10 பேர் கைது

(கொழும்பு)

ஹெக்கிராவல பகுதியில் நேற்றிரவு மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப்பிரயோகத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆதரவாளர்கள் ஐந்து பேர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்றிரவு 8 மணியளவில் ஐக்கிய தேசியக் கட்சிப் பிரமுகர்கள் ஹெக்கிராவல பகுதியூடாக நான்கு வாகனங்களில் சென்று கொண்டிருந்த போது ஐ.ம.சு.முன்னணி ஆதரவாளர்கள் வாகனங்கள் மீது கற்கள்வீசித் தாக்கினர்.இதனால் வாகனங்களின் கண்ணாடிகள் நொருங்கின. இதனையடுத்து வாகனங்களில் இருந்து பிரஸ்தாப நபர்கள மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இதில் ஐந்துபேர் படுகாயமடைந்தனர். இவர்களின் மூவர் ஹெக்கிராவல ஆஸ்பத்திரியிலும் இருவர் அநுராதபுர ஆஸ்பத்திரியிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவத்தையடுத்து ஸ்தலத்திற்குச் சென்ற பொலிஸார் ஐ.தே. கட்சி ஆதரவாளர்கள் 10பேரைக் கைது செய்துள்ளனர்.

இதேவேளை நேற்று நடைபெற்ற மேல் மாகாண சபைத் தேர்தலில்

(12ஆம் பக்கம் பார்க்க)

# குண்டுத் தாக்குதலுக்கு இலக்கான விகாராதிபதி மரணமானார்

(கொழும்பு)

குண்டுத் தாக்குதலில் படுகாயமடைந்த நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைபெற்று வந்த ஹிங்குராங்கொட விகாராதிபதி நேற்றுக் காலை வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

கடந்த 8ஆம் திகதி இரவு இனந்தெரியாதோரால் ஹிங்குராங்கொட விகாரை மீது மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் படுகாயமடைந்த விகாராதிபதி சிம்புல்கல சுமதிபால தேரரே சிகிச்சை பெற்றுவந்த நிலையிலேயே வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

கருணாவின் சகாக்கள் 14 பேரை விகாரையில் தங்கவைத்ததன் எதிரொலியாகவே இக் குண்டுத் தாக்குதல் இடம் பெற்றிருப்பதாகக் கூறப்படுகின்றது. (உ-18,61)

# விசமத்தனமான பிரசாரங்களுக்கு விடுதலைப் புலிகள் கண்டனம்

(மட்டக்களப்பு)

இலண்டனில் இருந்து இயங்கி வருகின்ற ரி.பி.சி. வானொலி சிறிலங்காவின் தென்றல் ஒலிபரப்புச் சேவையூடாக மேற்கொண்டு வரும விசமத்தனமான பிரசாரங்கள் குறிதது தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டு. அம்பாறை அரசியல்துறையினர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இந்த ஒலிபரப்புச் சேவை தமிழ மக்களிடையே குழப்பத்தையும், பீதியையும் ஏற்படுத்தும் வகையில் விசமத்தனமான பிரசாரங்களை மேற்கொண்டு வருவது போர் நிறுத்தத்தையும், சமாதானச் சூழ்நிலையையும் பாதிப்படையச் செய்யுமென மட்டு.அம்பாறை அரசியல் துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தமிழ்த் தேச விரோதச் சக்திகளால் இலண்டனில் இருந்து ஒலிபரப்பப்படும் இச்சேவையின் விசமத்தனமான பிரசாரங்கள் குறித்து கடுமையான கண்டனத்தை

(10ஆம் பக்கம் பார்க்க)

# தமிழர்களைத் திருப்பி அனுப்பிய அமெரிக்க அரச அதிகாரிகள்

## எங்குபோனாலும் இதே நிலைதானா?

(ரொறன்ரோ)

அமெரிக்காவில் அண்மையில் இடம்பெற்ற தமிழ் விழாவில் கலந்து கொள்வதற்காக கனடாவில் இருந்து சென்ற ஈழத்தமிழர்கள் அமெரிக்கா-கனேடிய எல்லையில் வைத்து அமெரிக்க அரச அதிகாரிகளினால் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

அமெரிக்காவின் போல்ரிமோர் மாநிலத்தில் இம்மாதம் 2ம் திகதி ஆரம்பமாகி 5ம் திகதிவரை 17வது தமிழர் விழா சிறப்பாக நடைபெற்றிருந்தது.

வழமைபோல் இந்நிகழ்வில் கலந்துகொள்வதற்காகச் சென்ற கனடியத் தமிழர்கள் பலரே இவ்வாறு எல்லையில் வைத்து திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். இவர்கள் இவ்வாறு மீள அனுப்பப்பட்டமைக்கு தகுந்த காரணங்கள் அமெரிக்க அதிகாரிகளினால் வழங்கப்படாத நிலையில் கனடிய மற்றும் அமெரிக தமிழ் அமைப்புக்கள் தமது கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளனர்.

கனடாவில் அண்மையில் வெளியிடப்பட்ட நீதிமன்ற தீர்ப்புக்கள் பொதுமக்களின் உரிமைகளை வலியுறுத்தியிருந்த போதிலும் அமெரிக்க அதிகாரிகளின் இந்நடவடிக்கை குறித்து கனடியத் தமிழர்கள் கடும் விசனத்தை வெளிப்படுத்

(10ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை வன்முறைகள் குறித்து ஐரோ. ஒன்றியம் ஆழ்ந்த கவலை

(கொழும்பு)

அண்மைக்காலமாக இலங்கையில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் அரசியல் வன்முறைச் சம்பவங்கள் குறித்து ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமைப்பீடம் ஆழ்ந்த கவலை வெளியிட்டுள்ளது.

கிழக்கு மாகாணம் உட்பட நாட்டின் ஏனைய பகுதிகளிலும் பரவலாக இடம்பெற்றுவரும் அரசியல் படுகொலைகள் மற்றும் கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் இடம் பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக் குதல் என்பன குறித்து பல்வேறு தரப்பினராலும் கண்டனங்கள் வெளியிடப்பட்டுவரும் நிலையில் தற்போது ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமைப்பீடமும் இவற்றை வன்மையாக கண்டித்துள்ளது.

ஐரோப்பியஒன்றியத்தின் சுழற்சி முறையிலான தலைமைப் பதவியை வகிக்கும் நெதர்லாந்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அரசியல் பழிவாங்கல் சம்பவங்கள் உள்ளிட்ட அனைத்து வன்முறைச் சம்பவங்களுக்கும் தனது கண்டனத்தைவெளியிட்டுள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமைப்பீடம் நாட்டின் உள்ளூர் முரண்பாடுகளுக்குத் தீர்வுகாண முடியாத இத்தகைய வன்முறைகளை எந்த வகையிலும் மன்னிக்க முடியாது எனவும் தெரிவித்துள்ளது.

அத்துடன் இலங்கையில் அண்மைக்காலமாக அதிகரித்து வரும் அரசியல் வன்முறைகள் நிரந்தர சமாதானத்தை நோக்கிய காத்திரமான பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பதற்கு பெரும் முட்டுக்கட்டையாகஅமையும்எனவும் இது எச்சரித்துள்ளது..

சமாதானத்தையும் பாதுகாப்பையும் விரும்பும் பெரும்பாலான இலங்கைப் பிரஜைகளின் எதிர்பார்ப்பையும் அபிலாஜைகளையும் இவ்வாறான சம்பவங்களால் நிறைவேற்ற முடியாது போய்விடும். சகல சமூகங்களையும் சேர்ந்தவர்கள் தமக்கும் தமது சந்ததியினருக்கும் நிரந்தர சமாதானம் வேண்டுமென்பதையே விரும்புகின்றனர்.

எனவே வன்முறைகள் தொடர்சசியாக இடம்பெறுவதைத் தடுக்கவும் சமாதானத்தை நிலைநாட்டவும் அனைத்து தரப்பினரும் அர்ப்பணிப்புடனும், ஒத்துழைப்புடனும் பணியாற்ற வேண்டும். அத்துடன், யுத்த நிறுத்தத்தை அனைத்துத் தரப்பினரும் தொடர்ந்தும் கடைப்பிடிக்க வேண்டும் எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (உ-18)

## செயலமர்வு

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு உலக உணவுத் திட்டத்தின் கீழ் போசாக்கு உணவூட்டல் திட்டப் பயிற்சி தொடர்பான செயலமர்வு நேற்று முன் தினம் சாவகச்சேரி இந்துக்கல்லூரி மண்டபத்தில் தென்மராட்சி கோட்டக் கல்விப் பணிப்பாளர் சத்தியநாதன் தலைமையில் இடம் பெற்றது.

இச் செயலமர்வில் மட்டுவில் சாவகச்சேரிப் பகுதியிலுள்ள பாடசாலை அதிபர்கள், அபிவிருத்திச் சங்கச் செயலாளர்கள்,கிராம சேவகர்கள், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப் பிரதி நிதிகள் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (உ-29)

# ரி.பி.சி. ஒலிபரப்புச்சேவை— விடுதலைப்புலிகளின் நிலைப்பாட்டை நோர்வே ஊடாக அறிய அரசு முயற்சி

(கொழும்பு)

லண்டனில் இருந்து ஒலிப்பரப்பாகும ரி.பி.சி.என்ற தமிழ் வானொலி நிலையத்தின் நிகழ்ச்சிகளை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ் தேசிய சேவை மூலம் அஞ்சல் செய்வது சமபந்தமாக தமிழீழ விடுதலைப்புலிகளின் நிலைப்பாட்டை நோர்வே சமாதானக் குழுவினர் தமக்கு தெரிவிக்க வேண்டும் என இலங்கை அரசு கேட்டுள்ளது.

இதுபற்றி இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஊடகம் ஒன்றிற்கு கருத்துத் தெரிவிக்கையில்,

ரி.பி.சி.நிகழ்ச்சிகளில் தமிழீழ விடுதலைப்புலிகள் கடுமையாக விமர்சிக்கப்படுவதாகவும் அவர்களுக்கு எதிராகவே இந்த வானொலி சேவை நடாத்தப்படுவதாகவும் சிலரால் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன,

ஊடகங்களைப் பொறுத்தவரையில் கருத்துச்சுதந்திரம், ஊடகங்களின் உரிமைகள் என்பவற்றைக் கொண்டுள்ளன.

இதனால் ரி.பி.சி.வானொலி சேவையை இலங்கையில் ஒலிபரப்புவதற்கு தடைவிதிக்கவோ அல்லது அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவே இலங்கை அரசிற்கு அதிகாரம் இல்லை.

இதனால்தான் நோர்வே சமாதானத தூதுக்குழுவினரூடாக இது பற்றிய எமது நிலைப்பாட்டை விடுதலைப்புலிகளுக்கு தெரிவிக்கவுள்ளோம்.

அதேபோல் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு எதிராக யாராவது ஜனநாயக வழிமுறைகளற்ற நடவடிககைகளை மேற்கொண்டால் அதுபற்றி விடுதலைப புலிகளும் நோர்வே சமாதான குழுவினருக்கு அறிவிக்கலாம் என்றார.

இதேவேளை, ரி.பி.சி.வானொலி சேவையில் விடுதலைப்புலிகள் கடுமையாக விமர்சிக்கப்பட்டு வருவது குறித்து பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சருடன் லக்ஷ்மன் கதிர்காமர் கலந்துரையாடவுள்ளார். இதற்காக அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் எதிர்வரும் 14ஆம் திகதி புதன்கிழமை லண்டன் செல்லவுள்ளார். (உ-60,10)

# பிரேத அறையில் 18 நாள் தவம்கிடக்கும்சடலம்

(மன்னார்)

மன்னார் வைத்தியசாலையில் சட்டவைத்திய அதிகாரி ஒருவர் இல்லாமையினால் பிரேத பரிசோதனை எதுவுமின்றி பெண்ணின் சடலம் ஒன்று கடந்த 18 தினங்களாக சவச்சாலையில் வைக்கப் பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

மன்னார் கடலில் கடந்த மாதம் 22ஆம் திகதி கரையொதுங்கிய இளம் பெண்ணின் சடலமே சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இச்சடலம் இந்தியாவில் இருந்து நாடு திரும்பிய பெண் அகதி ஒருவரின் சடலமாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

கரையொதுங்கிய இச்சடலத்தை மன்னார் நீதிவான் என்.எம். எம்.அப்துல்லா பிரேதம் காணப்பட்ட இடத்துக்குச்.சென்று பார்வையிட்டபின் அதனைச் சவச்சாலையில் வைக்குமாறு பணித்திருந்தார்.

இந்நிலையில் மன்னார் வைத்தியசாலையில் சட்டவைத்திய அதிகாரி ஒருவர் இல்லாமையினால் சடலம் பிரேத பரிசோதனை செய்யப்படவில்லை என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ம)

# பங்குச் சந்தைக்கு 5 பில்லியன் நட்டம்

(கொழும்பு)

கொழும்பு பங்குச் சந்தையில் கடந்த 7ஆம் திகதி இறுதிக்கட்ட வர்ததக நடவடிக்கைகளில் வீழ்ச்சி காணப்பட்டதால் அன்றைய தினம் ஏறத்தாழ 5பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

கடந்த 7ஆம் திகதி கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல் காரணமாகவே கொழும்புப் பங்குச் சந்தையில் இந்த வீழ்ச்சி காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இச் சம்பவத்தை அடுத்து வர்த்தக சமூகத்தினரும் தமது கவலையை வெளியிட்டுள்ளனர். இச் சம்பவம் குறித்து பங்குச் சந்தைக்கு அறியக் கிடைத்தவுடனேயே அங்கு ஒரு வித பதற்றம் காணப்பட்டது.

கடந்த 7ஆம் திகதி நிலையான உயர்ச்சியைப் பெற்று அனைத்து பங்குகளின் விலைச் சுட்டெண் 7 புள்ளிகளாலும், ஸ்ரீலங்கா விலைச் சுட்டெண் 20 புள்ளிகளாலும் அதிகரித்துக் காணப்பட்டது.

ஆனாலும்,குண்டு வெடிப்பின் காரணமான பதற்றம் மற்றும் முதலீட்டாளர்கள் நம்பிக்கை இழந்தமை ஆகியவற்றின் எதிரொலிப்பு அன்றைய நாளின் முடிவில் வெளிப்பட்டது. நாளின் முடிவில் அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண்களும் 21 புள்ளிகள் வீழ்ச்சியுடன் 1339.49 ஆகவும், ஸ்ரீலங்கா விலைச் சுட்டெண் 26புள்ளிகள் வீழ்ச்சியுடன் 2039 ஆகவும் காணப்பட்டது.நூற்று வீதத்தில் இது ஒரு வீதமாகவே காணப்படுகிறது.

பல முதலீட்டாளர்கள் அன்றைய தினம் தங்களின் நடவடிக்கைளை இடைநிறுத்தியிருந்தாலும் கூட குண்டு வெடிப்பைக் கவனத்தில் கொள்ளாது பல வெளிநாட்டு முதலீட்டாளர்கள் முதலிடுவதில் தங்களை ஈடுபடுத்தியிருந்தனர். வெளிநாட்டுக் கொள்வனவுகள் ரூபா 97.6 மில்லியன் ஆகக் காணப்பட்டது.

ஆய்வாளர்களின் கருத்துப்படி இந்தக் குண்டு வெடிப்பானது நாட்டுக்கு அதாவது சமாதான முயற்சிகளுக்கு அச்சுறுத்தலாக இருப்பதுடன் அதனைப் பாதித்து விடுமோ என்ற அச்சமும் காணப்படுகிறது.

கடந்த வருட நவம்பர் மாதம் 4ஆம் திகதி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் மூன்று அமைச்சுப் பதவிகள் பறித்தெடுக்கப்பட்டது தொடக்கம் வர்த்தகர்கள் மற்றும் முதலீட்டாளர்கள் பங்குச் சந்தையில் நம்பிக்கையிழந்தே காணப்பட்டனர்.

இலங்கையின் வருமானத்தில் பாரிய பங்களிப்பைச் செய்யும் உல்லாசப்பயணத் துறையும் இதனால் மிக மோசமாக பாதிப்படையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது (உ-121)

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 19 ஆம் திகதி கூடுகிறது

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாக சபைத் திட்ட வரைபு யோசனைகள் குறித்து அரசாங்கத்தையும், எதிர்க்கட்சியையும் வலியுறுத்துவதற்கு ஏற்ற வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்வரும் 19ஆம் திகதி கூடி ஆராயவுள்ளது.

இடைக்கால நிர்வாகசபைத் திட்டவரைபு குறித்து ஐரோப்பாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் பல்வேறு நாடுகளின் அரசியல் தலைவர்களுடனும் ஆராய்ந்து வருகிறார்.

ஐரோப்பிய நாடுகளின் வெளிநாட்டு இராஜதந்திரிகளைச் சந்தித்துப் பேச்சு நடாத்தி வரும் கூட்டமைப்பின் தலைவர் அடுத்த வாரம் நாடு திரும்பவுள்ளதுடன், கூட்டமைப்பின் அனைத்துக் கட்சித் தலைவர்களும் ஒன்றுகூடி எதிர்வரும் 19ஆம் திகதி விரிவாக ஆராயவுள்ளனர்.

இதேவேளை, இதுவிடயம் குறித்து இந்திய அரசியல் தலைவர்களையும் சந்தித்துப் பேச்சு நடாத்துவதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் இந்தியாவிற்குப் பயணமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-18)

## ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

(காரைநகர்)

காரைநகர் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் எதிர்வரும் 20ஆம் திகதி செவ்வாய்க் கிழமை மு.ப. 10.00 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

காரைநகர்ப் பிரதேச செயலர் செல்வி பிரபா கந்தசாமி ஐயர் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் சகல பொது அமைப்புக்களையும் கலந்துகொள்ளும் படி அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (உ-246)

# இலங்கை - உலக வங்கி உறவுக்கு வயது ஐம்பது

## விழாவைக் கொண்டாட விரிவான ஏற்பாடு

(கொழும்பு)

உலக வங்கிக்கும்- இலங்கைக்கும் இடையிலான உறவுகள் 50 வருடகாலமாக நீடித்துள்ளதாகவும் இந்த உறவின் பொன் விழாவை கொண்டாடுவதற்கு அரசு விரிவான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி பொன் விழாவைக் கொண்டாடுவதற்காக உலக வங்கியின் தெற்காசியப் பிராந்திய உபதலைவர் திராவுல்சி பட்டேல் விரைவில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இலங்கைக்கு இரண்டாவது தடவையாக விஜயம் செய்யும் இவர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவையும் நிதி அமைச்சர் சரத் அமுனுகமவையும் சந்தித்துப் பேசுவதுடன் பொன் விழா கொண்டாட்டத் திற்கான ஏற்பாடுகளையும் மேற் கொள்வார் என கூறப்படுகிறது. (உ -60, 10)

# திருமலை கல்வி வலயத்தில் 120 மாணவர்கள் இடைவிலகல்

(திருகோணமலை)

கடந்த காலயுத்த நடவடிக்கைகளின் காரணமாக திருகோணமலை கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளிலிருந்து 120 மாணவர்கள் இடைவிலகியுள்ளதாகத் தெரியவருகிறது.

யுனிசெவ் நிறுவனம் மற்றும் வடக்கு-கிழக்கு மாகாணத் திணைக்களம் ஆகியன ஒன்றிணைந்து நடாத்திய அண்மைக்கால ஆய்வுகளின் மூலமே இந்தப் புள்ளிவிபரங்கள் தெரியவந்துள்ளன.

போர்ச் சூழல் காரணமாகப் பெரிதும் பாதிக்கப்பட்ட நிலையில் பாடசாலைகளிலிருந்து இடைவிலகிய இம் மாணவர்களை மீளவும் பாடசாலைகளில் இணைத்து விஷேட கல்விப் போதனைகளை வழங்குவதற்கு ஏற்றவகையில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில், காலக்கிரமத்தில் ஏனைய மாணவர்களினதும் கல்வியறிவுடன் இத்தகைய வர்களும் சரிசமமாக வரக்கூடிய வகையிலான அனைத்து ஏற்பாடுகளை செய்வதற்கும் யுனிசெவ் நிறுவனத்தால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-18,61)

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்துறை பருத்தியடைப்பு கதிரேசன் கோவில் மகா கும்பாபிஷேகம் எதிர் வரும் 14 ஆம் திகதி புதன் கிழமை இடம் பெறவுள்ளது. (உ)

# புகழ் மிகு ∴போர்ப்ஸ் சஞ்சிகையின் ரஷ்ய ஆசிரியர் "போல்" கொலை!

(மொஸ்கோ)

உலகப் புகழ்பெற்ற வர்த்தக சஞ்சிகையான ∴போர்ப்ஸ் (**Forbes**) பத்திரிகையின் ரஷ்ய நாட்டுக்கான ஆசிரியர் போல் கிளெப்னிக் கோவ் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல லப்பட்டார்.



ரஷ்யாவின் ∴போர்ப்ஸ் அலுவலகத்தை விட்டு நேற்று மாலை அவர் வெளியேறிய போது இனந் தெரியாத நபர் ஒருவர் நான்கு முறை அவர் மீது சுட்டதில் அவர் ஸ்தலத்திலேயே பலியானார்.

ரஷ்ய வர்த்தக ஜாம்பவானான பெரசோவ்ஸ்கி என்பவரின் பின்னணிபற்றி கடந்த 2000 ஆம் ஆண்டில் " **God Father of the Kremlin** " எனும் நூலை இவர் எழுதியிருந்தார். ரஷ்ய ஆட்சியின் மையமான "கிரெம்ளினின் பிதாமகர்" என்பது அதன் பொருளாகும்.

ரஷ்யாவில் கம்யூனிஸம் வீழ்ச்சியடைந்த பிற்பாடு எதுவித பின்னணியும் இல்லாமல் செல்வந்தராகிய, மிகச்சக்தி வாய்ந்த தனிநபர் பெரசோவ்ஸ்கி என்று போல் குறிப்பிட்டிருந்தார். அவரது உயிருக்கு எமன் இந்தப் புத்தகம் தான் என்று கருதப்படுகிறது.

1989இல் அமெரிக்காவின் ∴போர்ப்ஸ் நிறுவனத்தில் இணைந்த போல் மூத்த ஆசிரியர் எனும் பதவிக்கு உயர்ந்தார். பின்னர் இவ்வருட ஏப்ரலில் ரஷ்ய நாட்டுக்கான ∴போர்ப்ஸ் ஆசிரியராக நியமிக்கப்பட்டார். 40 ஆயிரம் ∴போர்ப்ஸ் பிரதிகள் ரஷ்யாவில் விற்பனையாகிறது.

துணிவும் ஆர்வமுமுள்ள செய்தியாளரை ∴போர்ப்ஸ் இழந்துவிட்டதாக அதன் தலைவரும், தலைமை ஆசிரியருமான ஸ்ரீவ் ∴போர்ப்ஸ் அறிவித்துள்ளார். போலின் மனைவி குடும்பத்துடன் நாம் இருக்கிறோம் என்றும் அவர் கூறினார். (யே)

# ஆப்கான் ஜனாதிபதித் தேர்தல் மே மாதம் 9 இல் நடைபெறும்

(காபூல்)

ஆப்கானிஸ்தானின் ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் ஒக்டோபர் 9ஆம் திகதி நடைபெறும் என்று அந்நாட்டின் தேர்தல் ஆணையாளர் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.



ஹமீட் கராஸி

கடந்த யூன் மாதத்தில் வைக்கப்படுவதற்கே முதன் முதலில் திட்டமிடப்பட்டிருந்தது. இருப்பினும் தலிபான்களின் தாக்குதல் காரணமாகப் பாதுகாப்புக் காரணங்களையிட்டும் மந்தகதியிலான வாக்காளர் பதிவைத் தொடர்ந்தும் மேலும் இரண்டு தடவைகள் பின்போடப்பட்டிருந்தன. செப்டெம்பர் மாதத்தில் நடக்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட இத்தேர்தல் ஒக்டோபர் மாதம் என்று இறுதியாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்காலிக ஜனாதிபதியாகப் பணியாற்றும் ஹமீட் கராஸியே மீண்டும் தெரிவு செய்யப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்ற போதிலும், இது அவருக்கு மிகுந்த பலப்பரீட்சையாகவும் அமையும் என்று கருதப்படுகிறது.

இத்தேர்தல் வெற்றிகரமாக நடாத்தப்பட்டால் 2005ஆம் ஆண்டு ஏப்ரல், மே மாதங்களில் பாராளுமன்றத்திற்கான தேர்தல்கள் நடாத்தப்படும் என்றும் அறிவிக்கப்படுகிறது. (யே)

# ஒமார் உயிருடனுள்ளார் கைதான காவலர் தகவல்

(காபூல்)

ஆப்கானிஸ்தானின் தலிபான் தலைவர் முல்லா முகமது ஒமார் தலைமறைவாக உயிருடன் உள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

இது குறித்து ஆப்கானிஸ்தான் தென் பகுதி பாதுகாப்பு தலைவர் அப்துல்லா லக்மனி கூறியதாவது:



ஒமார்

தலிபான் தலைவரான முல்லா முகமது ஒமார் ஒரு கண்ணை இழந்தவர். அவர் இன்னும் உயிரோடு தான் உள்ளார். கந்தகார் நகருக்கு வடக்கே 80 கி.மீ. தொலைவில், முல்லாவின் மெய்க் காப்பாளர் முல்லா முஜாகித் என்பவர் கடந்த வாரம் பிடிபட்டார். கடந்த திங்கட்கிழமை எங்கள் முன்னிலையில் அவர் முல்லாவுடன் சற்றலைட் போனில் பேசினார்.


ஆனால், அதன் பிறகு முல்லாவை போனில் தொடர்பு கொள்ள முடியவில்லை. நாங்கள் முயற்சி செய்யும் போதெல்லாம் இணைப்பு துண்டிக்கப்படுகிறது. முல்லா முகமது காபூல் நகரில் இருந்து 2001 நவம்பரில் தப்பினார். தலைமறைவாக உள்ள தலிபான்களின் பாதுகாப்பு அமைச்சர் முல்லா ஒபைதுல்லாவுடனும் முல்லா முஜாகித் எங்கள் முன்னிலையில் போனில் பேசினார். இவ்வாறு அப்துல்லா லக்மனி கூறினார்.

ஆனால், தலிபான்களின் தகவல் தொடர்பாளர் லத்தீப் ஹகிமி கூறுகையில் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் ஆப்கானிஸ்தானில் அதிபர் தேர்தல் நடப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதை தடுத்தே தீருவோம். ஒமருடன் முஜாகித் நெருக்கமாக இருந்தார். ஆனால், முஜாகித்துடன் ஒமாரும், ஒபைதுல்லாவும் தான் போனில் பேசினார்கள் என்பதை உறுதிப்படுத்த எந்த ஆதாரமும் இல்லை. அவருடன் வேறு யாரேனும் பேசி இருக்கலாம் என்றார். (யே)

# ரஷ்ய போர் விமான விபத்தில் நால்வர் பலி

(மொஸ்கோ)

ரஷ்யாவின் விமானப்படைக்குச் சொந்தமான நவீனரக குண்டு வீச்சு விமானம் ஒன்று விபத்திற்குள்ளானதில் அதில் பயணம் செய்த நான்கு வீரர்கள் கொல்லப்பட்டனர்.



**TU**-22**M**3 வகையைச் சேர்ந்த நெடுதூர குண்டு வீச்சுத் தாக்குதல் போர் விமானம் சோல்ற்ஸி விமானத் தளத்தை நெருங்கிக் கொண்டிருந்த போது சென். பீற்றர்ஸ் பேக்கிற்குத் தெற்கே இரவு 11.40 மணியளவில் விபத்துக்குள்ளானது.

விமானத்தளத்துடனான கட்டுப்பாடு துண்டிக்கப்பட்டதைத் தொடர்ந்து விமானம் விபத்துக்குள்ளானதாகவும், தளத்திலிருந்து ஆறு மைகளுக்கப்பால் அதன் சிதைவுகளும் இறந்தவர்களின் உடல்களும் கண்டு பிடிக்கப்பட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது.

கடந்த செப்டெம்பர் மாதமும் இவ்வாறான விபத்தொன்றில் **TU**-160 ரக போர் விமானம் விபத்துக்குள்ளானதில் நான்கு வீரர்கள் கொல்லப்பட்டனர். (யே)

# இராணுவம் மீது தாக்குதல் 5 யு.எஸ். வீரர்கள் மரணம்

(பக்தாத்)

ஈராக்கில் சமாரா நகரில் உள்ள இராணுவ தலைமையக வளாகத்தை ஈராக் தீவிரவாதிகள் வியாழக்கிழமை பீரங்கி குண்டுகளால் பல முறை தாக்கியதில் 5 அமெரிக்க இராணுவ வீரர்கள், ஓர் ஈராக்கிய காவலர் ஆகியோர் இறந்தனர்.

முன்னதாக இப்பகுதியில் கார் குண்டு ஒன்றும் வெடித்தது. பீரங்கி தாக்குதல் நடைபெற்ற 25 நிமிடங்களுக்கு பின்னரே அமெரிக்கப் படையினர் பதிலுக்கு நான்கு தடவை பீரங்கித் தாக்குதல் நடத்தினர். இத் தகவலை அமெரிக்க இராணுவம் தெரிவித்தது.

தாக்கல் தொடுத்தவர்களைத் திருப்பித் தாக்கும் நோக்கத்துடன் அமெரிக்கத் துருப்புகள் ஹெலிகாப்டர்களின் உதவியுடன் தேடுதல் வேட்டை நடத்தியதில் உள்ளூர் மக்களுடன் மோதல் மூண்டது.

இது தொடர்பாக நடைபெற்ற வன்முறையில் 3 சிவிலியன்கள் இறந்தனர். 44 பேர் காயமடைந்தனர். இவர்களில் 20 பேர் அமெரிக்க படையினர், ஒருவர் ஈராக்கிய வீரர். அமெரிக்கப் படைகளின் தாக்குதலைச் சமாளிக்க முடியாத பொது மக்கள், கடைசியில் நாலா பக்கமும் சிதறியோடினர். (யே)

WORLD NEWS

உலகத் தரிசனம்

# ஆயிரம் கூட்டுப் படையினர் ஈராக் போரில் பலியாகினர்

(பக்தாத்)

கடந்த 2003ஆம் ஆண்டு மார்ச் மாதம் அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படையினர் ஈராக் யுத்தத்தை ஆரம்பித்தநாளிலிருந்து இன்று வரை சிறந்த கூட்டுப்படை வீரர்களின் எண்ணிக்கை ஆயிரத்தையும் தாண்டிவிட்டதாக அதன் தலைமையகம் அறிவித்துள்ளது.




நேற்று ஈராக்கில் வெளியிடப்பட்ட அறிக்கையின்படி போர் முனையிலும் பணயமாகவும், பிடிக்கப்பட்டு உயிரிழந்த கூட்டுப் படைகளின் எண்ணிக்கை ஆயிரத்து இரண்டாகியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வெண்ணிக்கையில் கடந்த புதன் காயமடைந்த பின்னர் இறந்த அமெரிக்க வீரர் மற்றும் சமாராவில் கொல்லப்பட்ட அமெரிக்க வீரர், சண்டையில் அல்லாமல் வேறு ஒரு சந்தர்ப்பத்தில் கொல்லப்பட்ட இன்னுமொரு அமெரிக்கரும் உள்ளடங்குவதாக அறிவிக்கப்படுகிறது. இறந்த பல்கேரிய வீரர்கள் இப்பட்டியலில் அடக்கப்பட்டுள்ளனர்.

பயங்கரவாதிகளின் அச்சுறுத்தல்களுக்குத் தாம் அடிபணியப் போவதில்லை என்று பல்கேரியா வு.ர் பிலிப்பைன்ஸும் கூட்டாக அறிக்கை விட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (யே)

## இன்று ஒரு தகவல்

# சார்லி சாப்ளின்

ஒருவர் உயிரோடு இருக்கும் போது அவரைக் கடத்திக் கொண்டு போவது வழக்கம். அவரைக் கொண்டு போய் எங்கேயாவது மறைத்து வைத் துக் கொண்டு உறவினர்களை மிரட்டிப் பணம் கேட்பார்கள். ஆனால் ஒருவர் இறந்து போன பின்பும் அவரைக் கடத்திக் கொண்டு போய் மறைத்து வைத்துக் கொண்டு பணம் கொடுத்தால் தான் உடலைத் திருப்பிக் கொடுப்பேன் என்று எங்கே யாவது கேட்டது உண்டா?

1978 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 2ஆம் திகதி உலகத்திலுள்ள முக்கியமான பத்திரிகைகள் எல்லாம் முதல் பக்கத்தில் ஒரு முக்கியமான செய்தியை வெளியிட்டிருந்தது.அதைப் படித்து விட்டு எல்லோரும் திகைத்துப் போய் விட்டார்கள். அது என்ன செய்தி தெரியுமா? உலகத்தின் தலை சிறந்த நகைச்சுவை மன்னர் சார்லி சாப்ளினின் உடல் புதைக்கப்பட்டிருந்த இடத்திலிருந்து காணாமல் போய்விட்டது என்பது தான் அந்தச் செய்தி.

1977இன் கடைசியில் அவர் இறந்து போனார். ஒரு சில மாதங்களில் அவரது உடல் புதைகீகப்பட்ட இடத்திலிருந்து காணாமல் போய்விட்டது. உலகம் முழுதும் பரபரப்பு. அவரது உடலை யார் கடத்திக் கொண்டு போயிருப்பார்கள்? யாருக்கும் ஒன்றும் புரியவில்லை.

சார்லி சாப்ளின் தான் இறந்த பின்பு தனது உடல் தன் தாய் நாடான இங்கிலாந்தில் தான் புதைக் கப்பட வேண்டும் என்று ஆசைப்பட்டார். ஒருவேளை அவரது விருப்பத்திற்கு மாறாக சுவிற்சர் லாந்தில் அவரை அடக்கம் செய்தது அவரது ரசிகர்க ளுக்குப் பிடிக்காமல் போயிருக்கலாம். அதனால் அப்படிப்பட்டவர்கள் யாராவது கடத்திச் சென்றிருப் பார்களோ? இது ஒரு சந்தேகம்.

ஒருவேளை சார்லி சாப்ளினின் தீவிரமான ரசிகர்கள் அவரை விட்டுப் பிரிய மனமில்லாமல் தம்முடனே வைத்திருக்க வேண்டும் என்று எடுத்துக் கொண்டு போயிருப்பார்களோ? இப்படி ஒரு சந்தேகம். இதற்கெல்லாம் 1978 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆம் திகதி விடை கிடைத்தது. இது தொடர்பாக இரண்டு பேரை பொலிஸ்காரர்கள் கைது செய்தார்கள். கானெவ் என்று ஒருவர். வார்தாஸ் என்று ஒருவர். இவர்களிருவரும் கிழக்கு ஐரோப்பாவைச் சேர்ந்தவர்கள்.

எதற்காக அந்த உடலைக் கடத்தினார்கள் என்று விசாரித்தால் அது வெறும் பணத்திற்காகத்தான் என்று தெரிய வந்தது. சார்லி சாப்ளினின் உடலைக் கடத்திக் கொண்டு போய் வைத்துக் கொண்டு நிறையப் பணம் கொடுத்தால் தான் திருப்பிக் கொடுப்போம் என்று அவரது உறவினர்களை மிரட்டியிருக்கின்றனர்.

உறவினர்கள் எல்லோரும் இதற்கு என்ன செய்வது என்று ஒரு முடிவுக்கு வருவதற்குள் பொலிஸ் அவர்களைக் கைது செய்துவிட்டது. கிட்டத்தட்ட 15மைலுக்கு அப்பால் இருந்து அவரது உடல் மீட்கப்பட்டது. மீண்டும் பழைய இடத்திலேயே புதைத்தார்கள்.சுவிற்சர்லாந்தில் ஜெனிவா ஏரியின் பக்கத்திலுள்ள ஒரு இடுகாட்டில் 1978, மே மாதம் 23 ஆம் திகதி சார்லி சாப்ளின் இரண்டாவது தடவையாகப் புதைக்கப்பட்டார்.

இதுபோல் செத்தபின்பு பெறுமதி குறையாமல் இருப்பவர்களும் இந்த உலகத்தில் உண்டு. உயிருடன் இருக்கும் போதே பெறுமதி இல்லாமல் இருப்பவர்களும் சிலபேர் உண்டு.

நமது ஆள் ஒருவரைத் திடீரென்று ஒருநாள் சிலபேர் கடத்திக் கொண்டு போய் வைத்துக் கொண்டு அவரது மனைவிக்குத் தொலைபேசி எடுத்து "10 ஆயிரம் ரூபா தந்து விட்டு உங்கள் கணவரை அழைத்துக் கொண்டு போங்கள்" என்றார்கள்."நான் 20 ஆயிரம் ரூபா தருகிறேன் அவரை வெளியில் விடாதீர்கள்! நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்" என்றார் மனைவி.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# அரச சேவையில் நிலவும் 4 ஆயிரம் வெற்றிடங்களை நிரப்ப துரித நடவடிக்கை

(கொழும்பு)

அரசாங்க சேவையில் காணப்படும் 4ஆயிரம் வெற்றிடங்களையும் நிரப்ப துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக பொது நிர்வாக அமைச்சர் அமரசிறி தொணங்கொட தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழனன்று கொழும்பில் இடம்பெற்ற தொழிற்சங்கத் தலைவர்களுடனான விசேட சந்திப்பில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் கூறுகையில் நாட்டில் தற்பொழுது சேவையில் உள்ள எந்த அரசதுறையும் தனியாரிடம் கையளிக்கப்படாது. மாறாக அரசதுறைச் சேவைகள் மறுசீரமைக்கப்பட்டு ஊழியர்களின் தரத்தை மேம்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இதற்காக அரச முகாமைத்துவ உபசேவை எனும் திட்டம் அமுல் செய்யப்படவிருக்கிறது.

அத்துடன், கடந்த காலங்களில் இடம்பெற்ற அரசியல் பழிவாங்கல்களால் பாதிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கு நிவாரணம் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கென விசேடகுழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

(உ-4,61,64)

# குண்டு வெடிப்புச் சம்பவம் சமாதானத்துக்கு அச்சுறுத்தல்

## க.கா.குழுத் தலைவர் அரசு- புலிகளுக்கு கடிதம்

(கொழும்பு)

மட்டக்களப்பில் இடம்பெற்று வரும் தொடர்ச்சியான தாக்குதல் சம்பவங்கள் மற்றும் கொழும்பில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவம் போன்றன சமாதானப் பேச்சுவார்த்தைக்கு அச்சுறுத்தலாக அமையக்கூடுமென போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ட்ரொன் புரு ஹொவ்டே தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்துக்கும் அனுப்பி வைத்துள்ள கடிதங்களிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார். கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்ற சில மணிநேரத்தில் தாம் அக் கடிதங்களை எழுதியதாகத் தெரிவித்துள்ள ட்ரொன் புரு ஹொவ்டே, மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்று வரும் தாக்குதல் சம்பவங்கள் தொடர்பாகவும், கொழும்பில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதல் தொடர்பாகவும் தனது அதிருப்தியைத் தெரிவித்திருப்பதாகக் கூறியுள்ளார்.

இதேவேளை, போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் அரச தரப்பினருக்கு எழுதிய கடிதம், இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கரைச் சந்தித்த அரசாங்கத்தின் சமாதானச் செயலாளர் ஜயந்த தனபாலவிடம் கையளிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சந்திப்பு முன்னர் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒன்றெனத் தெரிவித்துள்ள சமாதானச் செயலக வட்டாரங்கள், சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்த பல்வேறு விடயங்கள் தொடர்பாக இங்கு ஆராயப்பட்டதாகத் தெரிவித்துள்ளன.

கொழும்பில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவம் தொடர்பாகவும், ஹான்ஸ் பிரஸ்கரைச் சந்தித்த அரசாங்கத்தின் சமாதானச் செயலாளர் ஜயந்த தனபால கலந்துரையாடியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகளும் இத்தகைய சம்பவங்கள் இடம்பெறுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் குரல் தரவல்ல அதிகாரி திஸா பெனபொகா தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(உ)

## இராசி பலன்

**11.07.2004**

**(ஆனி 27, ஞாயிற்றுக்கிழமை)**
**நவமி முற்பகல் 7.16 மணி வரை**
**அச்சுவினி முற்பகல் 8.02 மணி வரை**
**இராகுகாலம் 4.29-5.59 மணி வரை**
**சுபநேரம் 8.59-10.29 மணி வரை**

**மேடம்**
ஜனவசியம், கலந்துரையாடல், காரிய அனுகூலம், தெய்வசிந்தை.

**இடபம்**
காரிய அலைச்சல், பொருள் விரயம், அமைதி குறைவு, அதிக வார்த்தை.

**மிதுனம்**
பெருமையடைதல், போசன சுகம், எடுத்த கருமங்கள் கைகூடும், கலந்துரையாடல்.

**கடகம்**
அதிகாரம், தொழில்சிந்தை, குடும்ப நலம், காரிய அனுகூலம்.

**சிங்கம்**
எதிர்பாராத செலவு, புதிய முயற்சி, கட்டுப்பாடு, பிதா சிந்தை.

**கன்னி**
எதிர்பாராத பிரச்சினை, காரிய தடங்கல், கடன் பிரச்சினை, பிரயாணம்.

**துலாம்**
தெய்வசிந்தை, தடைப்பட்ட காரியம் கைகூடும், கீர்த்தி, தனலாபம்.

**விருச்சிகம்**
உற்சாகம், நண்பர்கள் சந்திப்பு, நோய் குணமடைதல், முயற்சி கைகூடும்.

**தனுசு**
வியாபார சிந்தை, தாழ்ந்த சுபாவம், சிறு வியாதி, காரிய தாமதம்.

**மகரம்**
தாய்வழி உறவு, ரோகநிலை, மனப்பதட்டம், முயற்சி தாமதம்.

**கும்பம்**
நல்ல முயற்சி, தனலாபம், கீர்த்தி, போசன சுகம்.

**மீனம்**
அதிக வார்த்தை, தனவிரயம், காரிய தாமதம், தொழில் கஷ்டம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

## "வெளிச்சம்" வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் கலை, இலக்கிய சமூக இதழான வெளிச்சத்தின் எண்பத்தாறாவது இதழ் வெளிவந்துள்ளது.




இந்த இதழில் தமிழீழத் தேசியத் தலைவரின் கருத்துரையுடன் மாலிகா, சித்தாந்தன், வேரற்கேணியன் , நல்லை அமிழ்தன் , புதுவை இரத்தினதுரை, ப.அருள்நேசன் , தி.திருக்குமரன் ஆகியோரின் கவிதைகளும்,

நந்தி, தீபாகுமரேஷ் ஆகியோரின் சிறுகதைகளும் பேராசிரியர் கா. சிவத்தம்பியின் 'கடலும் தமிழ்ப் பண்பாடும்' என்ற நீண்ட சிறப்புக் கட்டுரையுடன் ஞானரதன் ,செங்கை ஆழியான் ஆகியோரின் கட்டுரைத் தொடர்களுடன் சொக்கன், தி.தவபாலன் முதலியோரின் ஏனைய கட்டுரைகளும் அடங்குகின்றன.

மூத்த எழுத்தாளர் சிற்பி சரவணபவனின் நேர்காணல், அநாதரட்சகன், வைரமுத்து சுந்தரேசன் ஆகியோரின் நூல் ஆய்வுகளும், கவிஞர் வாமகாந்த், நாட்டுப்பற்றாளர் ஜி.நடேசன் ஆகியோருக்கான அஞ்சலிகளும் புதிய வரவு, நூல் அறிமுகம் முதலியனவும் இதில் இடம்பெற்றிருக்கின்றன.

(உ)

## ஆஸி.-இலங்கை வர்த்தக உறவுக்கு ஏற்ற வழிவகை

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான வாத்தக உறவை மேலும் வலுப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட இருநாடுகளும் இணக்கம் தெரிவித்துள்ளன. அண்மையில் கொழும்பை வந்தடைந்த அவுஸ்திரேலிய நாட்டின் வர்த்தகத் துறையின் உயர் அதிகாரிகள் குழு இது குறித்து இலங்கை வர்த்தக அமைச்சின் உயர் அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்தி வருகின்றது.

அவுஸ்திரேலிய முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வது குறித்தும் இந்தக் குழு ஆராய்ந்து வருகின்றது.

(உ- 60,10)

# 17 முன்னாள் அமைச்சர்களுக்கு எதிராக மோசடிக் குற்றச்சாட்டு

## விசாரணைகள் விரைவில் ஆரம்பம்

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தில் பதவி வகித்த 17 அமைச்சர்களுக்கு எதிரான மோசடிக் குற்றச்சாட்டுத் தொடர்பான விசாரணைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக சக்தி வலுத்துறை பிரதி அமைச்சர் மகிந்தானந்த அலுத்கமகே தெரிவித்துள்ளார்.

இதேவேளை.முன்னாள் அமைச்சர்களான ரவிகருணாநாயக்க, எஸ்.பி. திஸநாயக்க, பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், மகிந்த சமரசிங்க , டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தன, கரு ஜெயசூரிய உட்பட 17 அமைச்சர்களுக்கு எதிராக பல குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கூரைத் தகடு விநியோகம் தொடர்பாக இந்த அமைச்சர்களில் சிலர் மீது 300 கோடி ரூபாவுக்கும் அதிகமான மோசடிக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளதாகவும் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

(உ,60,10)

# தமிழீழம் மலர்வதாயின் போராடியே தீர வேண்டும்

## முன்னாள் எம்.பி.சந்திரநேரு தெரிவிப்பு

இன்றைய அரசின் ஆட்சிக் காலத்தில் தமிழ் மக்களுக்கு எந்



தத்தீர்வும் கிடைக்கப் போவதில்லை எனவே மீண்டும் ஒரு போராட்டத்தின் மூலமே நாம் தமிழீழத்தை அமைக்க முடியும்.

இவ்வாறு திகாமடுல்ல மாவட்ட முன்னாள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு கூறினார்.

ஆலையடி வேம்பு,கலாசார மண்டபத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் விசேட அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். விடுதலைப்புலிகளின் மாவட்ட மகளிர் பிரிவைச் சேர்ந்த பரிதி தலைமையில் நிகழ்வுப் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு தொடர்ந்து உரையாற்றுகையில்,

போராட்ட காலத்தில் நமது தேசியத் தலைவர் பிரபாகரனால் நெறிப்படுத்தப்பட்ட கரும்புலித் தாக்குதல்கள் உலகமே வியக்கத்தக்க வகையில் வெற்றிகரமாக நடைபெற்றன. 1987ஆம்ஆண்டு முதன் முதலில் கப்டன் மில்லர் நெல்லியடியில் கரும்புலித் தாக்குதலை மேற்கொண்டு இராணுவத்தினரைச் சின்னாபின்னப்படுத்தினர். இதன் பின் தொடர்ந்த கரும்புலித் தாக்குதல்கள் கண்டு இலங்கை அரசும், இராணுவத்தினரும் நடு, நடுங்கிப் போயினர். சிங்கள அரசுகளைப் பேச்சுவார்த்தைக்குக் கொண்டு வருவதற்கு முக்கிய காரணமாக அமைந்ததும் இக்கரும்புலித் தாக்குதல்களேயாகும். ஆனால் இன்றும் ஆயிரக்கணக்கான கரும்புலிகள் களத்திலிருக்கிறார்களென்பதை இவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். தம்முயிரை இந்த ஈழ விடுதலைக்காக அர்ப்பணித்த 261 கரும்புலிகளின் சாதனை சிங்கள அரசுகள் பேச்சுவார்த்தைக்கு வரும் நிலையை ஏற்படுத்தியது என்றார். (உ-121)

அவுஸ்திரேலியத் தலைநகரில் இடம்பெறும்

## பல்தேச இளைஞர் பாராளுமன்றில் யாழ்.இந்து மாணவன் பங்கேற்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்துக்கல்லூரி மாணவ முதல்வன் குமாரவடிவேல் குருபரன் அவுஸ்திரேலியாவின் சிட்னி நகர மண்டபத்தில் இடம்பெற்றுவரும் பல்தேச இளைஞர் பாராளுமன்றில் பங்குபற்றி வ்ருகின்றார். அமர்வில் ஓகஸ்பாம் அமைப்பின் முழுப் புலமைப்பரிசில் பெற்று பங்குபற்று கிறார்.

குருபரன் சமாதானத்தின் குரல் என்ற தேசிய இளைஞர் அமைப்பின் இணைப்பாளருமாவார்.

சமாதானத்தின் குரல் அமைப்பு தென்கிழக்காசிய ஐக்கிய உலகக் கல்லூரியின் சமாதான முன்னெடுப்பு என்ற அமைப்பினால் சிங்கப்பூரில் கடந்த ஆண்டு யூன் மாதம் நடத்தப்பட்ட செயலமர்வில் உருவாக்கப்பட்டது.

இச் செயலமர்வில் மெச்சத்தக்க பங்களிப்பு செய்தமையால் கடந்த யூன் மாதம் சிங்கப்பூரில் மீண்டும் நடைபெற்ற செயலமர்வில் மையப் பேச்சாளருள் ஒருவராகவும் (**key note speaker**) அனுசரணையாளருள் ஒருவராகவும் (**facili tator**) அழைக்கப்பட்டிருந்தார்.

அத்துடன், இந்திய நகரான பூனேயில் மகிந்திரா ஐக்கிய உலகக் கல்லூரியினால் இவ்வாண்டு யூன் மாத இறுதிப் பகுதியில் நடத்தப்பட்ட இளைஞர் மகாநாட்டிற்கும் அதிதிப் பேச்சாளராக(**Guest speaker**) அழைக்கப்பட்டிருந்தார்.

சிங்கப்பூரில் பூனோ மகாநாடுகளில் பங்குபற்றிய குருபரன் இப்போ அவுஸ்திரேலியாவில் நடைபெறும் பல்நாட்டு இளைஞர் பாராளமன்றத்தில் பேராளராகப் பங்குபற்றுவது குறிப்பிடத்தக்கது.

பல்தேச இளைஞர் பாராளுமன்றம் அவ்ஸ்திரேலியாவின் சிட்னி நகர மண்டபத்தில் நியூ சவுத் வேல்ஸ் பிரதமர் பொப் காரினால் கடந்த திங்கட்கிழமை சம்பிரதாயபூர்வமாகத் தொடக்கி வைக்கப்பட்டது.

பாராளுமன்றத்தின் ஆரம்ப அமர்வுக்கு அவுஸ்திரேலிய பூர்வ குடியினர்களது தலைமைத்துவ மையத்தின் பிரதம இயக்குநர் மார்க் யெட்டிகோ போல்சன் தலைமை தாங்கினார்.

யூலை 5ஆம் திகதி ஆரம்பமான இப் பாராளுமன்ற அமர்வு நாளை சிட்னி சென்ற் ஜோசெப் கல்லூரி அரங்கில் நடைபெறவுள்ளது.

113 நாடுகளைச் சேர்ந்த 300 இளைஞர்கள் இப் பாராளுமன்ற அமர்வில் பேராளர்களாகக் கலந்துகொண்டுள்ளனர்.

கல்வி மேம்பாடு, எயிட்ஸ், சமாதானத்தைக் கட்டியெழுப்பல், தொழில் வாய்ப்பு,மனித உரிமைகள் போன்ற மனித குலத்தை எதிர்நோக்கும் பல தரப்பட்ட பொதுப் பிரச்சினைகள் பற்றி இப்பாராளுமன்றம் விவாதித்துக் கொண்டிருக்கிறது. மேலும் தாம் சார்ந்த பல்வேறு சமுதாயச் சூழல்களில் பயன்தரு மாற்றங்களை ஏற்படுத்த உதவக்கூடிய பயிற்சிகளும் பேராளர்களுக்கு வழங்கப்படுகிறது.

இப் பல்தேச இளைஞர் பாராளுமன்றம் முதன் முதலில் 2000ஆம் ஆண்டில் கூட்டப்பட்டது.

தற்போது கூட்டப்பட்டுள்ள இரண்டாவது அமர்விற்கு ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோபி அனான் விடுத்துள்ள செய்தியில், 2004ஆம் ஆண்டின் பல்தேச இளைஞர் பாராளுமன்றத்தின் இரண்டாவது அமர்விற்கு உலகின் மூலை முடுக்குகளிலிருந்தெல்லாம் வருகை தந்திருக்கும் இளம் தலைவர்கள் ஒவ்வொருவரும் தமக்கே தனித்துவமான பங்களிப்பைச் செய்யக்கூடியவர்கள். அவர்கள் உலகின் பல வேறுபட்ட மொழி, இன, பண்பாட்டு பின்னணியை உடையவர்களாயினும் மனித குலத்திற்குப் பொதுவான உயர் இலட்சியங்களால் ஒன்றுபட்டுள்ளார்கள். எமது உலகில் உண்மையான மாற்றங்கள் எங்கெங்கு தேவைப்படுகிறதோ அங்கெல்லாம் மாற்றங்களை ஏற்படுத்தும் உன்னத நோக்கத்திற்காக ஒன்றுபட்டுச் செயற்பட இவர்கள் உறுதி பூண்டுள்ளார்கள் எனக் குறிப்பிட்டுள்ளார். (உ)

## ஆசிய அபிவிருத்தி வங்கி உதவி

(கொழும்பு)

தென்னிலங்கையில் கடந்த வருடம் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்ட போக்குவரத்து கட்டமைப்பை புனரமைப்பதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி ஒரு கோடி 25 அமெரிக்க டொலரை வழங்கியுள்ளது.

இதேவேளை இலங்கை அரசாங்கமும் அரச நிதியில் இருந்து 50 லட்சம் டொலரை இப் புனரமைப்புப் பணிக்கென ஒதுக்கியுள்ளது. (உ-60,10)

## சதி முயற்சி குறித்து சட்ட நடவடிக்கைக்கு கோரிக்கை

(கொழும்பு)

பிரதம நீதியரசர் சரத் என் சிலவாவின் கௌரவத்திற்கு பங்கம் ஏற்படும் வகையில் சதி முயற்சியில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை நீதிச் சேவைப் பதிவாளர்கள் சங்கம் பொலிஸ்மா அதிபரைக் கேட்டுள்ளது. (உ)

## திருடர் தொல்லை

(கொழும்புத்துறை)

கச்சேரி கிழக்கு ஒழுங்கைப் பகுதியில் திருடர் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகக் கூறப்படுகிறது.

கச்சேரிப் பகுதியில் அண்மித்த காலத்தில் 21 திருட்டுச் சம்பவங்கள் இடம் பெற்றிருப்பதுகவும் வீதி [illegible] மின் விளக்குகள் [illegible] இதற்குக் காரணம் எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (உ-51)

# உலகத் தரமுடைய திரைப்படங்கள் தருவிப்பு

(கொழும்பு)

யாழ்.பல்கலைக்கழகத்தில் யுனொஸ்கோ அனுசரணையுடனும் டென்மார்க் அரசின் நிதியுதவியுடனும் நிறுவப்பட்டுள்ள ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் உலகத் தரமுடைய 45திரைப்படங்கள் தருவிக்கப்பட்டுள்ளன.

எனவே பத்திரிகையாளர்களும், கலை இலக்கிய ஆர்வலர்களும், மாணவர்களும் இவ்வளங்களைப் பயன்படுத்திக்கொள்ளுமாறு ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தின் இணைப்பாளர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் கேட்டுள்ளார்.

அகிரா குரசோவா, தர்கோங்ஸ்கி, சார்லி சாப்ளின், பெலினித் ரூபோ,பெர்க்மன், ஈரானிய இயக்குநர் மாஜித் மஜித், ரிச்சர்ட் அட்டன்பரோ, சுத்யாஜித்ரே விக்டர் பிளமிங் ஆகியோர் உருவாக்கிய உன்னத திரைக் காவியங்களைக் கொண்ட இப் படங்களில் 31படங்கள் டி.வி.டி.யிலும் 14 படங்கள் வி.சி.டி வடிவிலும் உள்ளன.

(உ-10)

# விகாரையில் தீவிபத்து தேரர் உயிரிழப்பு

(புத்தளம்)

புத்தளம் கியூலப் பகுதியிலுள்ள விகாரையொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் தேரர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.


நேற்று அதிகாலை ஒருமணியளவில் திடீரென ஏற்பட்ட இத் தீவிபத்தினால் 70வயதான தேரர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என புத்தளம் தலைமையகப் பொலிஸ் அதியட்சகர் ஆர்.எம்.கே.ரத்நாயக தெரிவித்துள்ளார்.

இதனால் விகாரையின் பிரார்த்தனை மண்டபம், தர்மசாலை உட்பட சகல கட்டங்களும் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளன.

இத்தீ விபத்திற்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என்றும் இதற்கென விசேட பொலிஸ் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-2)



சுற்றுச்சூழல் தினத்தையொட்டி அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையில் சிரமதானப் பணிகளை மேற்கொண்ட அச்சுவேலி வலயத்திற்குரிய கிராம அலுவலர்கள், சமுர்த்தி அலுவலர்கள், அச்சுவேலி ப.நோ.கூ.ச. ஊழியர்கள் மற்றும் பொது மக்களைப் படத்தில் காணலாம்.



கனடாவில் இயங்கும் சைவ சித்தாந்த மன்றத்தின் தலைவர் விஸ்வலிங்கத்திற்கு காரைநகர் தியாகராஜா மத்திய மகாவித்தியாலயத்தில் காரைநகர் மணிவாசகர் சபையினால் பாராட்டுவிழா நடாத்தப்பட்டது. பாராட்டு விழாவில் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கிய நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாசாரிய சுவாமிகள், கலாநிதி சிவஸ்ரீ வைத்தீஸ்வரக் குருக்கள், திரு .திருமதி விஸ்வலிங்கம் மற்றும் பண்டிதர் மு.க.வேலாயுதபிள்ளை மற்றும் விழா ஏற்பாட்டாளர்கள் ஆகியோரைப் படத்தில் காணலாம். (படம்:-காரைநகர் செய்தியாளர்)



வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற இலக்கியக் கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையின் 105ஆவது பிறந்ததின விழாவில் பண்டிதை பொன்.பாக்கியம் தலைமையுரை நிகழ்த்துவதனையும், பண்டிதமணியின் கந்தபுராணக் கலாசார நூலை இவ்விழாவில் வெளியிட்டு வைத்த கலாநிதி குமாரசாமி சோமசுந்தரரிடம் இருந்து முதலாவது பிரதியைக் கோண்டாவில் நெட்டிலைப் பாய் பிள்ளையார் கோயில் பரிபாலன சபையின் தலைவர் செல்லப்பா நடராசா பெற்றுக் கொள்வதனையும், அருகில் பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபையின் காரியதரிசி ஆசிரிய மணி அ.பஞ்சாட்சரம் நிற்பதனையும் படத்தில் காணலாம்.

# சமூகத்தை தீமைகளிலிருந்து காப்பது மனிதனின் கடமையே!

## பரமபிதா காட்டிய பாதை

"நீங்கள் மண்ணுலகிற்கு உப்பாயிருக்கிறீர்கள், உப்பு உவர்ப்பற்றுப் போனால் எதைக் கொண்டு அதை உவர்ப்பாக்க முடியும். அது வெளியில் கொட்டப்பட்டு மனிதரால் மிதிபடும். வேறு ஒன்றுக்கும் உதவாது"
(மத் 5 : 13)

மனித வாழ்வு அர்த்தம் கொண்டதாக அமைய வேண்டும். ஏனோ, தானோ என்று வாழ்ந்து, காலத்தைக் கடத்துவது உண்மை வாழ்வல்ல. எமக்கு சிறுவயதில் இருந்து போதித்த அறநெறியின்படி வாழ வேண்டியது அவசியம். சமய போதனைகளும் நல்லதைச் செய், தீமையை வெறுத்து ஒதுக்கு என்று தான் போதிக்கின்றது.

### உலகிற்கு உப்பு நீங்கள்

இயேசு பிரான் மனிதர்களைப் பார்த்து 'நீங்கள் மண்ணுலகிற்கு உப்பாய் இருக்கிறீர்கள்' என்று உருவகிக்கின்றார். ஏன் எம்மை உப்புக்கு உருவகிக்கின்றார் என்றால், மனித வாழ்வுக்கு உப்பு பல பாடத்தை கற்பிக்கின்றது. அதனூடாக பல உண்மைத் தன்மை மறைந்திருக் கின்றது.

அதாவது உப்பு உணவுப் பொருட்களைப் பாதுகாக்கின்ற ஒரு பதார்த்தம். நுண்ணங்கிகள் உணவுப் பொருட்களை பாதிக்காத வகையில் பாதுகாக்கின்றது. அத்துடன் நீண்ட காலம் உணவுப் பொருட்களைப் பேணவும் உதவுகின்றது.

இதேபோன்று தான் மனிதர்களாகிய நாமும் குடும்ப- சமய- சமூக நிறுவனங்களை தீமைகளில் இருந்து பாதுகாக்க வேண்டும்.

இன்றைய எமது சமூகப் புலத்தை நோக்கும்போது எத்தனையோ தீமைகள், சமூகத்தை நிலைகுலைய வைக்கின்றன. மீள முடியாத துன்பியல்பு அனுபவத்தைப் பெற்று, மனம் சிதைந்து போனவர்கள் ஏராளம். இங்கு பணியாற்றும் பொறுப்பு எம்முடையதாகும்.

### உரிமைகள் மதிக்கப்படல்

சிறுவர்களின் உரிமைகள் மதிக்கப்படுவதில்லை. அவர்களை வேலைக்கமர்த்தி கொள்ளை இலாபம் தேடுவோர் பலர் இருக்கின்றார்கள். சிறுவர்களை பாலியல் தேவைக்கு பயன்படுத்தி அவர்களை உடல் - உள ரீதியாக பாதிப்படையச் செய்து எதிர்காலத்தைச் சிதைக்கும் கொடியவர்கள் இருக்கவே செய்கின்றார்கள். இவர்களில் இருந்து சிறுவர்களைப் பாதுகாக்க வேண்டியது எமது கடமை.

பெண் உரிமை மீறலும், அவர்களை ஒரு இன்பப் பொருளாக மட்டும் பாவித்து உதறித் தள்ளிக் கொள்வதும், சலுகை கொடுப்பதாகக் கூறி ஏமாற்றுவதும் சீதனத்தின் பேரால் கொடுமைப்படுத்துவதும் பெரும் தீமைகள் ஆகும். இதனால் பெண்கள் உள்ளத்தில் ஆறமுடியாத காயங்கள் ஏற்படுகின்றன.

குற்றவுணர்வும் அவர்களை வாட்டி வதைக்கின்றது. இத்தீமைகளில் இருந்து பெண்களைப் பாதுகாக்க வேண்டிய தேவை எமக்கு உண்டு.

### எல்லோரையும் மதித்தல்

முதியோரை புறம்தள்ளி, அவர்களின் மனிதத் தன்மையை இழந்து போக வைப்பதும் சொத்துக்காக மட்டுமே பெற்றோர் எனக் கருதுவதும், அவர்களிடம் அன்பு காட்டாமல் சீறிச் சினந்து துன்புறுத்துவதும், தனிமையில் வாடவைப்பதும் அவலமானது. மூத்தோர் எம் சமூகத்தின் முதுசம். அவர்களை இத்தீமைகளில் இருந்து பாதுகாக்க வேண்டும்.

ஊனமுற்றவர்கள் முழுவியளத்துக்கு உதவாதவர்கள் என்ற கருத்தியல் இருக்கின்றது. இதனால் அவர்களை வெறுத்தொதுக்குவதும், அவர்களின் குறைகளை கேலிப் பொருளாக்கி அவமதிப்பதும், அவர்



கள் வாழ முடியாத அளவுக்கு சிறந்த பாதுகாப்பும், பராமரிப்பும் கொடுக்காமையும் அபத்தமானது. இதனால் ஊனமுற்றோர் தற்கொலை முயற்சிகளை மேற்கொள்கின்றனர். மற்றவர் முன் தாம் இழிவானவர்கள் என்ற தாழ்வுச் சிக்கலும் அதிகரிக்கின்றது. எனவே அவர்களை அன்பு செலுத்தி நேசிக்க வேண்டும். சிறந்த பராமரிப்புக் கொடுக்க வேண்டும். பிறர் தீமைகளில் இருந்து இவர்களைப் பாதுகாக்க வேண்டும்.

இளைஞர்களைப் பொறுத்தவரை தம் கடமை மறந்து செயற்படுகின்றார்கள். சந்திகளிலும் வீதிகளிலும் இருந்து பிறரை கேவலப்படுத்தும் அளவுக்கு செயற்படுதல், சினிமா மோகத்தில் மூழ்கி அதைப் போன்ற பாணியில் செயற்பட முற்படுதல், இதனால் காதலுக்கு அர்த்தம் புரியாமல் பலரைக் காதலித்து ஏமாற்றுதல், குழு சார்ந்த மோதல்களில் ஈடுபடுதல் போன்றவற்றால் பலர் பலவகைத் துன்பத்தை அனுபவிக்கின்றார்கள். இதில் இருந்து இளைஞர்களையும், சமூகத்தையும் பாதுகாக்க வேண்டியது எமது கடமை.

அரசியல்வாதிகளினால் ஏற்படுகின்ற தீமைகள், குடிபோதைக்கு அடிமையாக இருப்போர் ஏற்படுத்துகின்ற தீமைகள், சாதியத்தின் பேரால் ஏற்படும் தீமை, முதலாளி தொழிலாளிக்கு உண்டாக்கும் தீமை இவைகளில் இருந்து விடுதலையும் பாதுகாப்பும் - பராமரிப்பும் கொடுக்க வேண்டும்.

### சமூகச் சிந்தனை வேண்டும்

நீங்கள் மண்ணுலகிற்கு உப்பாய் இருக்கிறீர்கள் என்ற கிறிஸ்துவின் அறைகூவல் எமக்குப் பெரிய சவாலாக அமைகின்றது. இவ்வறை கூவலை நாம் அசட்டை செய்ய முடியாது. கிறிஸ்தவர்களாக இருக்கும் நாம் இவ்வறை கூவலுக்கு செவி மடுத்து, சமூகத்தில் புண்பட்டு -சீழ்வடிந்து - நாற்றம் எடுக்கும் தீமைகளில் இருந்து பாதுகாக்க வேண்டும். உணவுப் பதார்த்தத்தினை உப்பு எவ்வாறு பாதுகாக்கின்றதோ அதேபோன்று நாமும், சமூகத்தின் பாதுகாவலர்கள். இவ்வாறு சமூக தீமைகளைக் களைந்து, பாதுகாக்க நாம் தகுதிபெற வேண்டும் என்றால், முதலில் அத்தீமைகளை செய்யாது நாம் வாழவேண்டும்.

அவ்வாறு தன்னை கரைத்து தியாகம் செய்யும் உப்பு என்ற பாதார்த்தத்தினால் உணவு எவ்வாறு சுவைபெறுகின்றதோ, அதுபோல் எம்மையும் கரைத்து தியாகம் செய்யும்போது சமூக தீமைகள் அகன்று போகும், சமூகம் நல்லதாக உருப்பெறும்.

எனவே, இயேசு நாதரின் இவ்வறை கூவலை, எமது செவிகளினால் மட்டும் கேட்டு அசட்டுத்தனமாக வாழாது, எமது வாழ்வினால் அதனை செயல்படுத்த தூய ஆவியின் துணை வேண்டி மன்றாடுவோம்.

**வி.பி.தனா**
**அரியாலை**

## தண்டப்பணம் அறவீடு

(யாழ்ப்பாணம்)

மணலைக் களவாடியமை அதனை அனுமதியின்றி உழவு இயந்திரத்தில் கொண்டு சென்றமை ஆகிய குற்றச்சாட்டுகளுடன் தொடர்புபட்ட இருவரை கடந்த வியாழக்கிழமை யாழ். மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்த போது இருவரும் குற்றத்தை ஒப்புக்கொண்டனர்.

இதனையடுத்து நீதிபதியின் உத்தரவின் பேரில் இருவரிடமிருந்தும் தண்டப்பணமாக 10 ஆயிரம் ரூபாவும் தர்மப்பணமாக 8 ஆயிரம் ரூபாவும் அறவிடப்பட்டது. (உ -19)

## சீர்திருத்த ஆணைக்குழுவின் இயக்குநர் நாயகமாக லீல் விக்கிரம ஆராய்ச்சி

(கொழும்பு)

பொது நிறுவன சீர்திருத்த ஆணைக்குழுவின் இயக்குநர் நாயகமாக லீல் விக்கிரம ஆராய்ச்சி ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார்.

மொஸ்கோ பல்கலைக்கழக முதுமாணி பொறியியல் பட்டதாரியான இவர் அரச நிறுவனங்களில் சிரேஷ்ட அதிகாரியாகப் பணியாற்றியுள்ளார். (த)

## பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

அராலி வடக்கு கோணாவில் பெரியதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் விழா. இன்று மு.ப 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

பொங்கல் விழாவைத் தொடர்ந்து மகேஸ்வர பூசையும் இடம் பெறவுள்ளது.

(உ -10)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வலி. கிழக்கு சனசமூக நிலையங்களின் சமாசக் கலந்துரையாடல் இன்று பிற்பகல் 3 மணிக்கு நீர்வேலி கந்தசாமி கோயில் மாதர் சங்கக் கட்டிடத்தில் வலி. கிழக்கு பிரதேச சபைச் செயலாளர் இ.இராசதுரை தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் அனைத்துச் சனசமூக நிலையங்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ச)

## விசேட வழிபாடு

(யாழ்ப்பாணம்)

நவாலி சென் பீற்றர்ஸ் தேவாலயத்திலும் நவாலி சின்னக்கதிர்காம ஆலயத்திலும் 1995ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதல்களில் உயிரிழந்த 147 பேரின் நினைவு நாளையொட்டி நேற்று முன்தினம் மேற்படி இரு ஆலயங்களிலும் விசேட வழிபாடுகள் இடம்பெற்றன.

(உ -43)

## உயிரிழந்த பொலிஸாருக்கு விசேட நட்ட ஈடு

(கொழும்பு)

கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில் உயிரிழந்த பொலிஸ் அதிகாரிகளுக்கு விசேட நட்ட ஈடு வழங்கப்படவுள்ளது.

வழமையாக வழங்கப்படும் நட்ட ஈட்டுத் தொகையை விட மேலதிகமாக தலா ஐந்து லட்சம் ரூபா உயிரிழந்த பொலிஸாரின் குடும்பங்களுக்கு வழங்கப்படவுள்ளது.

(த)

## ஆண்டு விழா

(சுண்டுக்குளி)

இளவாலை புனித யாகப்பர் ஆலயத்தின் 125 ஆவது ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படவுள்ளது.

இதனை முன்னிட்டு மேற்படி ஆலயம் துரிதமாகப் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

(உ -110)

## சுகாதார சேவை விருத்திக்கு உலக வங்கி 6 பில்லியன் உதவி

(கொழும்பு)

இலங்கையின் சுகாதார சேவைகளை அபிவிருத்தி செய்வதற்காக உலக வங்கி 6 பில்லியன் ரூபாவை இலங்கை அரசிடம் வழங்கியுள்ளது.

இதற்கான ஒப்பந்தத்தில் நேற்று முன்தினம் உலகவங்கிக்கான இலங்கை உறுப்பினர் பீற்றர் ஹெரோல்ட் மற்றும் இலங்கைப் பொருளாதார அமைச்சின் செயலாளர் கலாநிதி ரி.வி.ஜெயசுந்தர ஆகியோர் கையொப்பமிட்டனர்.

உலகவங்கி தனது உதவியினை இலங்கைக்கு வழங்கத் தொடங்கி இம்மாதம் 9ஆம் திகதியுடன் 50ஆண்டுகள் பூர்த்தியாகியுள்ள நிலையில் உலக வங்கியினால் இலங்கைக்கு வழங்கப்படும் அதிகூடிய தொகை இதுவெனவும் உலகவங்கி விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ -2)


உ

சுன்னாகம்

**ஸ்ரீ கதிரமலை சிவன் தேவஸ்தானம்**
**ஸ்ரீ சொர்ணாம்பிகை தேவி அம்பாளின்**

**ஆடிப்பூர மஹோற்சவ விஞ்ஞாபனம்**

அம்பிகை அடியார்களே!

12.07.2004 திங்கட்கிழமை ஸ்ரீ சொர்ணாம்பிகை தேவி அம்பாளின் கொடியேற்ற உற்சவம் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

**விசேட உற்சவங்கள்**

கொடியேற்றம் : 12.07.2004 திங்கள் காலை 10 மணி
சுமங்கலித் திருவிழா : 17.07.2004 சனி மாலை 3 மணி
சப்பறத் திருவிழா : 19.07.2004 திங்கள் மாலை 7 மணி
தேர்த் திருவிழா : 20,07.2004 செவ்வாய் மாலை 7 மணி
தீர்த்தத் திருவிழா : 21.07.2004 புதன் காலை 10 மணி

ஸ்ரீ கதிரமலை சிவன் தேவஸ்தானம், சுன்னாகம்.

*கிரியாகலாப மணி*
Dr.சிவஸ்ரீ. நா.சோமாஸ்கந்தக் குருக்கள்
*M.I.H.Dip. (India) D.Lit. (Japan)*
தேவஸ்தான பிரதம குருக்கள்.

(C/363)



க.பொ.த. (சா.த)
மாணவர்களே! வலம்புரியில்
தொடர்ந்து பயிற்சி
வினாத்தாள்கள்
வெளிவருகின்றன.



**விவாத அரங்கு -4**

விடயம்

சமூக, கலாசாரப் பிறழ்விற்குக் காரணமாக அமைபவர்கள் தற்கால இளைஞர்களே! யுவதிகளே!

நடுவர் : சிவ.சரவணபவன் (சிற்பி)
(முன்னாள் யா/வைத்தீஸ்வரா கல்லூரியின் அதிபர்)

உங்கள் வாதங்களை எழுதி அனுப்பி வையுங்கள்

*அனுப்பவேண்டிய முகவரி*
விவாத அரங்கு
வலம்புரி
இல.15, வெள்ளாந்தெரு
யாழ்ப்பாணம்.

# தமிழக முதல்வர், ஜெயலலிதா அரசியல் நாகரிகம் தெரியாதவர்

## கருணாநிதி இப்படிக் கிண்டல்

(சென்னை)

வரவுசெலவுத்திட்டத்தில்



அறிவிக்கப்பட்டுள்ள ஏராளமான சலுகைகளைப் பாராட்டுவதற்குக்கூட முதல்வர் ஜெயலலிதாவுக்கு மனம் இல்லை என்று தி.மு.க தலைவர் கருணாநிதி கிண்டலாகக் கூறியுள்ளார்.

இது பற்றி கடந்த வெள்ளிக்கிழமை அவர் கருத்து வெளியிடுகையில்,

வருமான வரிவிலக்கு வரம்பு ஒரு இலட்சமாக உயர்ந்துள்ளது. நெசவாளர்களுக்கு நன்மை தரும் வகையில் சென்வாட் வரி இரத்துச் செய்யப்பட்டுள்ளது. இன்னும்பல்வேறு சலுகைகள் பல தரப்பினருக்கு அளிக்கப்பட்டுள்ளன.

வாஜபாய் உள்ளிட்ட பல தலைவர்கள் வரவுசெலவுத் திட்டத்தை முழுமையாகப் பாராட்டாமல் விமர்சனம் செய்துள்ளனர். ஆனால் இலாவகமாக, நாகரிகமான மொழியில்,




அரசியல் பண்பாட்டுடன் கருத்துக் கூறியுள்ளனர்.

ஆனால் தமிழக முதல்வர் ஜெயலலிதா, செயலற்ற வரவு செலவுத்திட்டம் என்று தூற்றி இருக்கிறார். இப்படிச்சொல்வது ஒன்றும் புதிய விமர்சனம் அல்ல. செயலற்ற பிரதமர் என்று நரசிம்மராவை விமர்சித்தவர் தான் ஜெயலலிதா.

செயலற்ற ஆணையம் என்று காவிரி ஆணையத்தைக் கூறி இருக்கிறார். அதுவும் அந்த ஆணையத்தின் கூட்டங்களுக் குச் செல்லாமலேயே அவ்வாறு விமர்சித்தார். அந்த வரிசையில் சிதம்பரத்தின் வரவு செலவுத் திட்டமும் விமர்சிக்கப் பட்டிருக்கிறது என்று கூறியுள்ளார். (உ)




மேற்கு வங்க மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர் ஜோதி பாசு கொல்கத்தாவில் நேற்று தனது 91வது பிறந்த தினத்தைக் கொண்டாடினார்.




## தமிழகத்தில் ஏற்பட்டுள்ள பரபரப்பின் பின்னால் "சுள்ளான்"

(சென்னை)

நடிகர் தனுஷ் நடித்த சுள்ளான் படத்திற்கும் அதனைத் திரையிடவிருந்த 12 தியேட்டர்களும் திரைப்பட விநியோகஸ்தர்கள் சங்கம் சிவப்பு அட்டை மூலம் தடைவிதித்துள்ளது.



இதனால் விநியோகஸ்தர்கள் சங்கத்திற்கும் தியேட்டர் உரிமையாளர்கள் சங்கத்திற்கும் இடையே மோதல் ஏற்பட்டுள்ளது.

''இத்தடையை நீக்காவிட்டால் விநியோகஸ்தர்கள் சங்கத்தைப் புறக்கணித்து விட்டு தமிழகம் முழுவதும் தியேட்டர்களில் நேரடியாகவே படங்களைத் திரையிடுவோம்'' என்று தியேட்டர் உரிமையாளர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

நடிகர் தனுஷ் நடித்த ''சுள்ளான்'' படம் விரைவில் வெளியிடப்படுவதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. இப்படத்தைத் தியேட்டர்காரர்கள் வெளியிடக்கூடாதுஎன்று தடை போட்டுள்ள சென்னை- காஞ்சிபுரம்- திருவள்ளூர் மாவட்ட திரைப்பட விநியோகஸ்தர்கள் சங்கம் இம்மாவட்டங்களில் உள்ள 12 தியேட்டர்களில் எந்தப் படமும் திரையிடக் கூடாது என்று தடை விதித்துள்ளது. இந்தத் திடீர் தடையினால் திரையுலகில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

(உ)

## இந்தியச் செய்திகள்

### நக்ஸலைட் நாகராஜ் வருகிறான்

## மர்மத் தொலைபேசி அழைப்பினால் சென்னை விமான நிலையத்தில் பரபரப்பு

(சென்னை)

''நக்ஸலைட் நாகராஜ் சென்னை வருகிறான்'' என்று சென்னை விமான நிலையத்துக்குக் கிடைத்த மர்மத் தொலைபேசியால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இதனால் விமான நிலைய அதிகாரிக்ள் திக்கு முக்காடி செய்வதறியாது திகைத்தனர்.

சென்னை விமான நிலையத்தில் கடந்த புதனன்று இரவு சென்னை விமான நிலைய மேலாளர் புல்லா பணியில் இருக்கும் போது நள்ளிரவு 12.15 மணிக்கு மர்மத் தொலை பேசி அழைப்பு ஒன்று கிடைத்தது. அதில் பேசிய நபர் ஆந்திரமாநிலம் நெல்லூரைச் சேர்ந்த நாகராஜ். அவன் நக்ஸலைட் இயக்கத்தைச் சேர்ந்த மிகப் பயங்கரமான தீவிரவாதி. அவன் வெடிகுண்டுகளுடன் மும்பை அல்லது கல்கத்தா செல்வதற்காக சென்னை விமான நிலையத்திற்கு வந்து இருக்கிறான். அவன் விமானத்தில் ஏறிச் செல்லும்போது குண்டு வெடித்து விமானம் நடுவானில் சிதறும் அபாயம் இருக்கின்றது.

எனவே மனித வெடிகுண்டான அந்தத் தீவிரவாதியை உடனே கண்டுபிடித்து பேராபத்தைத் தவிர்த்து விடுங்கள் என்று கூறிவிட்டு ஊர்பேர் எதுவும் தெரியாமல் தொலைபேசி இணைப்பைத் துண்டித்து விட்டான்.

உடனே விமான நிலையம் பரபரப்புக்குள்ளானது. வெடிகுண்டு நிபுணர்கள் விமான நிலைய பாதுகாப்பு அதிகாரிகள், பொலிஸ் மோப்பநாய்கள் என பொலிஸ் பட்டாளம் தீவிர சோதனையில் ஈடுபட்டனர்.

விமானத்தில் செல்லவந்த பயணிகளை துருவித்துருவி சோதனை செய்தனர். அதே போல் சென்னையில் இருந்து புறப்படும் விமானத்தில் நாகராஜ் என்ற பெயரில் யாரும் ரிக்கெட்பதிவு செய்துள்ளனரா என்று தேடினர். ஆனால் எதுவும் சிக்கவில்லை.

இதனிடையே ஆந்திர மாநில பொலிஸுடன் தொடர்பு கொண்டு நெல்லூர் பகுதியில் நாகராஜ் என்ற நக்ஸலைட் தீவிரவாதி இருக்கின்றானா என்றும் விசாரித்தனர். ஆந்திரபொலிஸார் நாகராஜ் என்ற பெயரில் நக்ஸலைட் யாரும் இல்லை என்று கூறினார்.

எனவே இது வெறும் புரளி என்ற முடிவுக்கு விமான நிலையப்பொலிஸாரும் அதிகாரிகளும் வந்தனர். அதன் பின்னர் அந்த புரளி கிளப்பி விட்டவரை கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

(உ)



புதுவைவ்யின் 17வது ஆளுநராக எம்.எம்.லகேரா பதவியேற்றுக் கொண்டார். அவருக்கு புதுவை தலைமை நீதிபதி சின்ன பாண்டி பதவப்பிரமாணம் செய்து வைத்தார்.

## பேய் விரட்டப் போன இளம் பெண் தீக்காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதி

### பண்ருட்டி அருகே பரபரப்பு

(பண்ருட்டி)

பேய்விரட்டுவதாகக் கூறி இளம்பெண்ணின் கையில் சூடு வைத்ததாக கோயில் பூசாரியை பொலிஸார் கைது செய்தனர்.

இச்சம்பவம் சென்னை பண்ருட்டி அருகே இடம்பெற்றுள்ளது.

இது குறித்துத் தெரிய வருவதாவது,

பண்ருட்டி அருகே உள்ள ஒற்றையூர் கிராமத்தைச் சேர்ந்தவர் கிருஷ்ணவேணி. இவர் தனது சொத்துக்களை விற்ற பணத்தை சிலரிடம் கடனாக வழங்கியிருந்தார்.

இக்கடனைத் திருப்பிச் செலுத்த அவர்கள் மறுத்து விட்டனர்.



இதனால் மன முடைந்த இவரது மகள் செல்வி (வயது 22) கோயில் பூசாரி ஒருவரை இது விடயமாக நாடினார்.

பேய் விரட்டினால் எல்லாம் சரி வரும் என்று கூறிய பூசாரியை நம்பிச் சென்ற இளம்பெண் செல்வி கடந்த சில தினங்களுக்கு முன் இரு கைகளிலும் தீக்காயங்களுடன் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார்.

வாயு அடுப்பு பற்றவைத்த போது அது வெடித்ததில் தீக்காயம் ஏற்பட்டதாக அப்போது கூறப்பட்டது.

இந்நிலையில் இளம் பெண்ணின் தாய் உண்மையில் நடந்தவற்றை புதுப்பேட்டை பொலிஸ் நிலையத்தில் போட்டுடைத்துள்ளார்.

அதில் பேய் விரட்டுவதாகக் கூறி ஒற்றையூர் மகாகாளி கோயிலில் தனது மகளுக்கு கைகளில் கற்பூரம் ஏற்றி தீக்காயம் ஏற்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இதுபற்றிப் பொலிஸில் முறையிடக்கூடாதென பூசாரி மிரட்டியதாகவும் அவர் முறைப்பாடு செய்துள்ளார்

(உ)

# யு.எஸ். நீச்சல் போட்டியில் ஹான்சன் உலக சாதனை

அமெரிக்காவில் நடந்து வரும் ஒலிம்பிக் தகுதி நீச்சல் போட்டியில், 100மீ., ப்ரெஸ்ட்ஸ்ரோர்க் பிரிவில் பிரண்டன் ஹான்சன் புதிய உலக ச்ாதனை நிகழ்த்தினார். அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில்



ஒலிம்பிக் தகுதி நீச்சல் போட்டிகள் நடந்து வருகின்றன. இதில் நேற்று நடந்த ஆண்களுக்கான 100மீ.,ப்ரெஸ்ட்ஸ்ரோர்க் நீச்சல் பிரிவில் அமெரிக்காவின் பிரண்டன் ஹான்சன் புதிய உலக சாதனை படைத்தார் .

போட்டித் தூரத்தை இவர்59.30 வினாடிகளில் கடந்து முந்தைய சாதனையை முறியடித்தார். இதற்கு முன் 2003 பார்சிலோனாவில் நடந்த உலக நீச்சல் சம்பியன்ஷிப் போட்டியில் ஜப்பானின் கோசுகி கிட்டாஜிமா, 59.78 வினாடிகளில் கடந்து சாதனை படைத்திருந்தார். இதன்மூலம் பிரண்டன் முதன் முறையாக ஒலிம்பிக் போட்டிக்கான அமெரிக்க அணியிலும் இடம்பெற்றார். 22 வயதான இவர் கடந்த ஆண்டு நடந்த உலக நீச்சல் சம்பியன்ஷிப் போட்டியில் 100மீ., ப்ரெஸ்ட்ஸ்ரோர்க் பிரிவில் வெள்ளியும் 200மீ. பிரிவில் வெண்கலமும் வென்றுள்ளார். (யே)

# சுவிஸ் பகிரங்க ரெனிஸ்
# பெடரர் காலிறுதிக்கு தகுதி

சுவிஸ் பகிரங்க டென்னிஸ் தொடரில் சுவிட்சர்லாந்தின் ரொஜர் பெடரர் காலிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றார். சுவிட்சர்லாந்தில் உள்ள இஸ்டாட் நகரில் முன்னணி டென்னிஸ் வீரர்கள் பங்கேற்கும் சுவிஸ் ஓபன் டென்னிஸ் தொடர் நடந்து வருகிறது.



நேற்று நடந்த ஆண்கள் ஒற்றையர் மூன்றாம் சுற்றுப் போட்டியில் உலகின் நம்பர் வண் வீரரான சுவிட்சர்லாந்தின் ரொஜர் பெடரர் குரோஷியாவின் இவோகார் லோவிக்கை எதிர்த்து விளையாடினார். இதில் பெடரர் 6-7(5/7), 6-3,7-6(7/4)என்ற செட்களில் போராடி வெற்றிபெற்று காலிறுதிக்குள் நுழைந்தார். கடந்த வாரம் லண்டனில் நடந்த விம்பிள்டன் டென்னிஸ் நான்காம் சுற்றில் பெடரர் இவோகார் லோவிக்கை வீழ்த்தியது குறிப்பிடத்தக்கது. நேற்று முன்தினம் நடந்த மூன்றாம் சுற்றுப் போட்டியில் ஜெர்மனியின் ரெய்னர் ஷட்லர் 6-3,6-2என்ற நேர் செற்களில் சக நாட்டவரான புளோரியன் மேயரையும், ஸ்பெயினின் பலக்ஸ் மன்டில்லா 6-3,7-6(7/2) என்ற செட்களில் சக வீரரான டேவிட் பெடரரையும் வீழ்த்தி காலிறுதிக்குள் நுழைந்தனர். (யே)


## கே.சி.சி.சி.இறுதிப் போட்டி
# பற்றீசியன் அணியுடன் பல்கலைக்கழக அணி மோதல்

மிக நீண்ட நாட்களாக நடைபெற்றுவந்த கொக்குவில் மத்திய சன சமூக நிலைய விளையாட்டுக் கழகத்தினரின் கே.சி.சி.சி.வெற்றிக் கிண்ணத்திற்கான இறுதிப் போட்டி இன்று காலை 9.00மணிக்கு நடைபெறும்.

இப் போட்டியீல் பற்றீசியன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து யாழ்.கல்கலைக்கழக 'அணி விளையாடும். பற்றீசியன் அணிக்கு ரி.ஜெயமுகுந்தன் தலைமைதாங்குவார். பல்கலைக்கழக அணிக்கு ரி.றோபேஷன் தலைமைதாங்குவார். இந்நிகழ்ச்சிக்கு சீகல் புறப்பட்டி டெவலப்பர்ஸ் நிறுவன இயக்குநர் கிருபானந்தன் பிரதம விருந்தினராகவும், கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர் திரு கமலநாதன் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்வர். (யே)




பற்றீசியன் விளையாட்டுக்கழக அணியினர்



யாழ்.பல்கலைக்கழக விளையாட்டுக்கழக அணியினர்

## போட்டிக்கு விண்ணப்பியுங்கள்

எதிர்வரும் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வலி.கிழக்குப் பிரதேச சபைக்குட்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையிலான ஈல்லே மற்றும் கரபந்து (செற்அப்) போட்டி நடைபெறுவுள்ளதால் இதில் கலந்துகொள்ள விரும்பும் கழகங்கள் தங்கள் பகுதி உப அலுவலகத்துடன் எதிர்வரும் 19ஆம் திகதிக்கு முன் தொடர்புகொண்டு விண்ணப்பப்படி வத்திணைப் பூர்த்திசெய்து வழங்குமாறு வலி.கிழக்குப் பிரதேச சபைச் செயலாளர் கேட்டுள்ளார். (யே)



தற்பொழுது நடைபெற்றுவரும் ரூர் டீ பிரான்ஸ் சைக்கிள் ஓட்டப் போட்டியின் நான்காவது சுற்றில் பெல்ஜிய வீரர் ரொம் பூணன் வெற்றி பெற்றார்.

# மாகாண பாடசாலை கரப்பந்தாட்டம் டி.எஸ்.சேனநாயக்க சம்பியன்

வடக்கு-கிழக்கு மாகாணமட்ட பாடசாலைகளுக்கிடையிலான மகளிர் கரப்பந்தாட்டப் போட்டிகளில் அம்பாறை டி.எஸ்.சேனநாயக்க மகாவித்தியாலயம் வெற்றி பெற்றுள்ளது.

இவ் வித்தியாலய அணிகள் 19வயதுக்குட்பட்டவர்களுக்கிடையிலான மற்றும் 17வயதுக்குட்பட்டவர்களுக்கிடையிலான மாகாணமட்ட கரப்பந்தாட்டப் போட்டிகளில் சம்பியனாக வந்துள்ளது. இதேவேளை, 15வயதுக்குட்பட்டவர்களுக்கிடையிலான மாகாணமட்ட மகளிர் கரப்பந்தாட்டப் போட்டிகளில் அம்பாறை சந்தமருவ மகாவித்தியாலய அணி சம்பியனானத் தெரிவாகியுள்ளது. இப் போட்டிகள்யாவும் வடக்கு-கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு நடாத்தப்பட்டிந்ததோடு, நேற்று முன்தினம் வவுனியா நகரசபை மைதானத்தில் இப்போட்டிகள் இடம்பெற்றிருந்தன. (யே-68)

# கபடிப்போட்டியில் வவுனியா சைவப்பிரகாச அணி சம்பியன்

வடக்கு-கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட பெண்கள் பிரிவு கபடிப் போட்டிகளில் வவுனியா சைவப்பிரகாச வித்தியாலய அணி வெற்றிபெற்றுச் சம்பியனாகியுள்ளது. இவ்வணியுடன் இறுதிப் போட்டியில் பாவற்குளம் கணேஸ்வரா வித்தியாலய அணி விளையாடியிருந்தது. வடக்கு-கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட இம் மாகாண மட்ட கபடிப் போட்டிகளில் ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த எட்டு அணிகள் கலந்துகொண்டன.

இவ்வணிகளுக்கிடையிலான முதல் சுற்று மற்றும் அரையிறுதிப் போட்டிகளிலும் வெற்றிபெற்ற வவுனியா சைவப்பிரகாச வித்தியாலய அணியும், பாவற்குளம் கணேஸ்வரா வித்தியாலய அணியும் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகி இருந்தன. இறுதிப்போட்டியில் 57:55என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்ற வவுனியா சைவப்பிரகாச வித்தியாலய அணி சம்பியன் பட்டத்தை தனதாக்கிக்கொண்டது. இப் போட்டித் தொடரின் மூன்றாவது இடத்தை திருகோணமலை அக்ரபோதைய மகாவித்தியாலய அணியும் பெற்றிருந்தது. (யே-68)

# விளையாட்டுச் செய்திகள்

ATHENS 2004
XXVIII OLYMPICS 13-29 AUGUST
ஒலிம்பிக்கிற்கு இன்னும் 34 தினங்கள்

## ஒலிம்பிக் வரலாறு 25
# 1992 இல் பார்சிலோனா நகரில் இடம்பெற்ற 25வது ஒலிம்பிக்

1992 பார்சிலோனா ஒலிம்பிக் போட்டிகள் வரலாற்றுச் சிறப்பைப் பெற்றன. சகல நாடுகளும் இப்போட்டிகளில் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது. தென்னாபிரிக்காவுக்கு அனுமதி வழங்கப்பட்டது. ஆப்கானிஸ்தான் வீரர்கள் இல்லாத நிலையிலும் தொடக்கவிழாவில் கலந்துகொண்டது.



பேஸ் போள் விளையாட்டுக்கும் முதல் தடவையாகப் பதக்கங்கள் வழங்கப்பட்டன. 64நாடுகள் முதற் தடவையாக பதக்கங்களை வென்றமை ஒரு சாதனையாகும்.

மஜிக் ஜோண்சன், மைக்கல் ஜோர்டன் உட்பட்ட உலக தாரகைகள் இடம்பெற்ற அமெரிக்கக் கூடைப் பந்தாட்ட கனவு அணி வியத்தகு வெற்றிவாகை சூடியது.

சீனாவும் கியூபாவும் போட்டிகளுக்கு முன்னதான வீரர்களின் பரிசோதனைகளை மேற்கொள்ளாமைக்கு கடும் விமர்சனத்தை எதிர்நோக்கின. பெலாரஸ் நாட்டின் விற்றாலி ஆறு தங்கம் வென்றார். பிரிட்டனின் லின் போர்ட் கிரிஸ்டி 100மீற்றரில் முதலிடம் பெற்றார். (யே)

பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டஞ்
சால மிகுத்துப் பெயின் - குறள்

வலம்புரி

## போக்குவரத்து நெருக்கடி பாரீர்!

அரசு-புலிகள் யுத்த நிறுத்த உடன்படிக்கை, அதனைத் தொடர்ந்து ஏ-9 பாதை திறப்பு என்பன காரணமாக யாழ்.குடாநாட்டுப் பகுதியில் வாகனப் போக்குவரத்து தாராளமாக அதிகரித்துள்ளது.

ஏ-9 பாதைத் திறப்பைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் தென்னிலங்கை மக்களின் சுற்றுலாப் பிரதேசமாக மாறியுள்ளது. இதன் காரணமாகத் தென்னிலங்கை வாகனங்கள் யாழ்ப்பாணத்திற்கு வரத் தொடங்கியுள்ளன.

இதேவேளை யாழ்ப்பாணத்திலும் மக்களின் பணப்புழக்கம் அதிகரித்த நிலையில் நாளாந்தம் வாகனக் கொள்வனவுகள் அதிகரித்த வண்ணமுள்ளன. குறிப்பாக மோட்டார் சைக்கிள்களின் பாவனை-கொள்வனவு நாளுக்கு நாள் அதிகரிப்பதைப் புள்ளிவிபரங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

இவ்வாறு யாழ்ப்பாணத்தை நோக்கிய வாகனப் பிரவேசம் யாழ்.நகர மையத்தை மட்டுமன்றி, புறநகர்ப் பகுதிகளிலும் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

இத்தகைய நெருக்கடி நிலை உடனடியாக எதிர்பார்க்கப்படாததொன்றாக இருப்பினும், யாழ்ப்பாணத்தின் பொருளாதாரத்தை வெளிநாட்டில் இருக்கின்ற யாழ்ப்பாண மக்களின் உழைப்பே நிர்ணயம் செய்வதால், யாழ்ப்பாண மக்களிடையே பணப்புழக்கம்-பணநிரம்பல் மிக அதிகமாகவேயுள்ளது.

குறித்த பண நிரம்பல் எல்லோரிடமும் பகிரப்படாதநிலை காணப்படுகின்றதே தவிர பண நிரம்பலின் 'குவிப்பு'இங்கு இல்லையென எவரும் மறுத்துவிட முடியாது. இவ்வாறு யாழ்ப்பாண மண்ணில் ஏற்பட்டுள்ள பண நிரம்பலின் அதிகரிப்பானது அசையும் அசையாச் சொத்துக்களின் விலையை பன்மடங்கு உயர்த்தியுள்ளதுடன் ஆடம்பரப் பொருட்களின் நுகர்வையும் அதிகரித்துள்ளது.

சேமிப்புப் பழக்கம் குறைந்த மக்களிடையேயான 'பணக் குவியல்' நாட்டின் முதலீட்டிற்கோ அன்றி உற்பத்தி முயற்சிகளுக்கோ எதுவித பங்களிப்பையும் ஆற்றப் போவதில்லை.

மாறாக அந்தப் பணம், அதி ஆடம்பரப் பொருட்கள் மீதான நுகர்வுச் செலவையே அதிகரிக்கும். இத்தகையதோர் நிலைமையின் வெளிப்பாடாகவே உலக சந்தையில் அறிமுகப்படுத்தப்படும் நவீன மோட்டார் சைக்கிள்கள் யாழ்ப்பாணத்திலும் நல்லதோர் சந்தைவாய்ப்பைப் பெற்றுள்ளன.

இளமட்டங்களைக் கவரும் வகையிலான மோட்டார் சைக்கிள் அறிமுகத்தில் தம்மைப் பறிகொடுத்துள்ள யாழ்ப்பாண இளைஞர்கள் வீதியொழுங்குகளை மறந்து மனித உயிர்களின் பெறுமதிகளை உணராமல் கண்டபாட்டில் ஓடித்திரிகின்றனர்.

பொறுப்பற்ற முறையில் வீதியில் வாகனத்தைச் செலுத்துவதானது தனதும், பிறரதும் உயிருக்குப் பேராபத்தாக அமையும் என்பதை ஒவ்வொரு வாகன ஓட்டியும் உணர்ந்து கொள்வாரேயாயின் விபத்து என்பது மிக அரிதாகிவிடும். ஆனால் யாழ்ப்பாணத்தைப் பொறுத்த வரை வாகன ஓட்டம் என்பது போக்குவரத்து விதிமுறைகளுக்கு அமைவாக இடம்பெறுவதில்லை.

ஏதோ தெய்வாதீனமாக, மயிரிழையில் உயிர் தப்பினோம் என்பதாகவே வாகனப் போக்குவரத்து இடம்பெறுகின்றது. எனவே இந் நிலைமையைத் தவிர்க்க வாகன நெருக்கடிகளைக் குறைப்பதும், தேவை உணர்ந்து வீதிகளை அகலமாக்குவது அவசியமாகும்.

அதேவேளை யாழ்.நகரப் பகுதிகளில் வீதி சமிக்ஞை விளக்குகளைப் பொருத்தி வாகன ஓட்டங்களை ஒழுங்கு படுத்துவதும் கட்டாயமானதாகும்.

# ஆட்சியைத் தக்கவைப்பது பற்றியே
# ஐ.ம.சு.மு. சதாகாலமும் சிந்திக்கிறது

## மல்வத்த பீடாதிபதியிடம் ரணில் முறைப்பாடு

(கண்டி)

நாட்டின் மிக முக்கிய தேவையான சமாதானத்தை மட்டுமே இலக்காகக் கொள்ளாமல்,ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு, தமது ஆட்சியைத் தக்கவைப்பது பற்றியும் எதிரணியினரைப் பற்றியுமே சதா சிந்தித்து வருகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்க கடந்த வியாழக்கிழமை மல்வத்த பீடாதிபதி திப்பட்டுவாவே சுமங்கள தேரரை அவரது வாசஸ்தலத்தில் வைத்துச் சந்தித்துக் கலந்துரையாடுகையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாம் சமாதான நடவடிக்கைகளில் இருந்து விலகியிருந்தாலும் சமாதான முன்னெடுப்புக்களுக்கு ஒருபோதும் தடையாக இருக்கமாட்டோம்.

சமாதான முன்னெடுப்புக்களுக்கு மீண்டும் அடித்தளம் அமைப்பது குறித்து ஆராய்வதை விடுத்து நாம் விட்ட இடத்தில் இருந்து அதனைத் தொடர்வதே சிறந்த வழியாகும்.

சமாதான முயற்சிகளை ஆரம்பித்தவர்கள் என்ற வகையில் அதனை ஏற்படுத்துவதில் மிகவும் ஆர்வமாக உள்ளோம் என்று தெரிவித்துள்ளார். (உ)

# கிழக்கு சம்பவங்கள் தொடருமானால் நாடு பாரிய சவாலை எதிர்கொள்ளும்

## தேசிய சமாதானப் பேரவை எச்சரிக்கை

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்று வரும் வன்முறைகளையும் பதற்ற நிலைமைகளையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென சுயாதீன தேசிய சமாதானப் பேரவை அவசர வேண்டுகோள் விடுத்துள்ளது.

கொள்ளுப்பிட்டியில் நடைபெற்ற தற்கொலைத் தாக்குதலின் மூலம் அரசாங்கத்திற்கு பெரியதொரு எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கும் நிலையிலேயே தேசிய சமாதானப் பேரவை இவ் வேண்டுகோளை விடுத்துள்ளது.

கிழக்கில் தோன்றியுள்ள பதற்ற நிலையைக் கட்டுப்படுத்த அரசாங்கம் தவறினால் யுத்த நிறுத்த உடன்படிக்கைக்கு ஆபத்து ஏற்படும் அபாயம் உள்ளது.இதனால் 2003ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இடைநிறுத்தப்பட்ட பேச்சுவார்த்தையை உடனடியாக மீண்டும் ஆரம்பிக்க வேண்டும்.

இது விடயங்களில் அசமந்தப் போக்கு காண்பிக்கப்பட்டால் நாடு பாரிய சவாலை எதிர்கொள்ள நேரிடும் எனவும் தேசிய சமாதானப் பேரவை எச்சரித்துள்ளது. (த)

## விகாரை மீதான தாக்குதலுக்கு உட்பூசல்களே காரணமாம்

(கொழும்பு)

ஹிங்குராகொட பௌத்த விகாரையில் கடந்த வியாழன் இரவு இடம்பெற்ற குண்டுத் தாக்குதல் உட்பூசல்கள் காரணமாக இடம்பெற்ற ஒன்று என ஹிங்குராகொட காவல்துறைப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்தத் தாக்குதல்கள் தொடர்பாக நேற்று முன்தினம் விசாரணைகளை முடுக்கிவிட்ட அவர், விகாரைப் பகுதியில் வசிக்கும் பலரிடமும் வாக்குமூலங்களையும் பெற்றிருந்தார்.

இக்குண்டுத் தாக்குதலில் காயமடைந்த பௌத்த மதகுருவுடன விகாரையில் தங்கியிருந்த சக மதகுருக்களிடமும் பொலிஸார் விசாரணைகளை நடாத்தியுள்ளனர்.

இந்த விகாரையிலிருந்து கடந்த திங்கட்கிழமை கருணாவின் சகாக்கள் எனச் சந்தேகிக்கப்படும் 14 இளைஞர்கள் ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்டிருந்ததும், இவர்கள் பின்னா நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டுப் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (உ)

## பொலிஸ் அதிகாரிக்கு 2வருட கடூழியச் சிறை

(கொழும்பு)

துப்பாக்கிகளைத் திருடியமை மற்றும் பொதுமக்களை அச்சுறுத்தியமை தொடர்பான குற்றச்சாட்டுகளின் பேரில் பொலிஸ் அதிகாரி ஒருவருக்கு அம்பாறை மாவட்ட நீதிமன்றத்தால் 2வருட கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இவர் 2002 ஆம் ஆண்டு ஜூலை மாதமளவில் தன்னிடம் இருந்த ரி.56 ரகத் துப்பாக்கியையும், இன்னுமொரு பொலிஸ் உத்தியோகஸ்தரிடமிருந்த துப்பாக்கியையும் திருடியிருந்ததாகவும் தெரியவருகின்றது. உகன பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் சந்திரசேகர பண்டார ஹப்புகொட எனப்படும் இப் பொலிஸ் அதிகாரிக்கு 2வருட கடூழியச் சிறைத்தண்டனை விதித்துள்ள அம்பாறை மாவட்ட நீதிமன்றம், இவர் திருடிய துப்பாக்கிகளின் பெறுமதிக்கு சமமான பணத்தொகையாக 84ஆயிரத்து759 ரூபாவினை அரசாங்கத்துக்கு செலுத்த வேண்டுமெனவும் உத்தரவிட்டுள்ளது.

இப்பணத்தொகையினை இவர் செலுத்தத் தவறினால் மேலும் 2வருடக் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்படுமெனவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (உ)

### தினசரி தியானம்
### விவேகச் சிந்தனைகள்

நல்லது கேட்காதவன் செவிடன். அழகென்பது உடல் அழகல்ல. ஒழுக்கமே அழகு. அன்பாகப் பேசி தர்மத்தைக் கடைப் பிடிப்பவர்களுக்கே பிரபஞ்சம் வசமாகும்.

சுவாமி விவேகானந்தர்

## சுகாதார சேவை விருத்திக்கு உலக வங்கி 6 மில்லியன் உதவி

(கொழும்பு)

இலங்கையின் சுகாதார தேவைகளை அபிவிருத்தி செய்வதற்காக உலக வங்கி 6பில்லியன் ரூபாவை இலங்கை அரசிடம் வழங்கியுள்ளது.

இதற்கான ஒப்பந்தத்தில் நேற்று முன்தினம் உலகவங்கிக்கான இலங்கை உறுப்பினர் பீற்றர் ஹெரோல்ட் மற்றும் இலங்கைப் பொருளாதார அமைச்சின் செயலாளர் கலாநிதி ரி.வி.ஜெயசுந்தர ஆகியோர் கையொப்பமிட்டனர்.

உலகவங்கி தனது உதவியினை இலங்கைக்கு வழங்கத் தொடங்கி இம்மாதம் 9ஆம் திகதியுடன் 50ஆண்டுகள் பூர்த்தியாகியுள்ள நிலையில் உலக வங்கியினால் இலங்கைக்கு வழங்கப்படும் அதிகூடிய தொகை இதுவெனவும் உலகவங்கி விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-2)

## பிரதம நீதியரசர் மீதான குற்றச்சாட்டின் பொய்த் தன்மையை விளக்கி ஐக்கிய தேசியக் கட்சி அறிக்கை

(கொழும்பு)

தன் பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தும் முயற்சிகளில் பொலிஸார் ஈடுபடுவதாக பொலிஸ்மா அதிபர் இந்திரா டி சில்வாவிற்கு பிரதம நீதியரசர் முறைப்பாடு செய்த விடயத்தின் பின்னணியில் உள்ள உண்மை நிலை பற்றித் தெளிவுபடுத்துமாறும் ஐ.தே.க. கேட்டுள்ளது.

ஐ.தே.க. இதுபற்றி வெளியிட்ட அறிக்கையில்,

பிரதம நீதியரசர் சரத் என் சில்வா கடந்த ஜூலை 6ஆம் திகதியன்று இரவு ஒரு பெண்ணுடன் கார் ஒன்றினுள் காணப்பட்டார் என வெளியாகிய செய்தியை மேல்நீதிமன்றில் தன் முன்னிலையில் இடம்பெறும் வழக்குகளுடன் சம்பந்தப்பட்டவர்களே பரப்பியுள்ளார்கள் என பிரதம நீதியரசர் தெரிவித்துள்ளார்.

அவ்விடயத்தில் வேறொரு ஆணும் பெண்ணொருவருமே தனியாகக் கார் ஒன்றினுள் இருந்தனர். அதையே பொலிஸார் பிரதம நீதியரசர் எனத் தெரிவிக்கின்றனர் என நாம் அறிந்துள்ளோம்.

பிரதம நீதியரசர் பொலிஸார் மீது சுமத்திய குற்றச்சாட்டுகள் உண்மை எனில் அதாவது பொலிஸாரின் குற்றச்சாட்டுகள் பொய்யானவை எனில் பொலிஸாரே நீதியரசருக்கு எதிராக போலியானவையான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியுள்ளனர் என்பது தெளிவு.

அதேவேளை, நீதியரசருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் உண்மையானவை எனில் அவர் தன்மீதான குற்றத்தை மறைக்க முயல்கிறார் என்பது தெளிவு. எனவே, மேற்படி விடயம் தொடர்பாக மக்களுக்குச் சரியான தகவல்களை வழங்க வேண்டியது அவசியம்.

இவ் விடயம் தொடர்பாக நீதியரசர் மேல்நீதிமன்றில் தன் முன்னிலையில் இடம்பெறும் வழக்குகளுடன் தொடர்புடையவர்களே தன் புகழுக்குக் கேடு விளைவிக்கும் இத்தகைய கதைகளைப் பரப்பி விடுகிறார்கள் எனக் கூறியுள்ளார்.இது பற்றியும் அவர் பொது மக்களுக்கு சரியான தகவல்களை வழங்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-6)

## ஆண்டு விழா

(சாவகச்சேரி)

மக்கள் வங்கி சாவகச்சேரிக் கிளையில் 43வது ஆண்டு நிறைவுவிழா நேற்று முன்தினம் முகாமையாளர் எஸ். சிவபாலன் தலைமையில் நடைபெற்றது.

மக்கள் வங்கியின் யாழ்.பிராந்திய முகாமையாளர் கே. சிவபாதவிருதயா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட இந் நிகழ்வில் பாடசாலை அதிபர்கள், வாத்தக சமூகத்தினர், வாடிக்கையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (உ-29)

PUBLIC ... JAFFNA



# குப்பிளான் யுவதி வவுனியாவில் கைது

(வவுனியா)

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியாவுக்குச் சென்ற யுவதியொருவர் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு வவுனியா நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் குப்பிளானைச் சேர்ந்த பிரஸ்தாப யுவதி, நேற்று முன்தினம் வவுனியா மகாரம்பைக் குளத்தில் உள்ள தனது உறவினர் வீட்டுக்குச் செல்வதற்காக ஓமந்தை இராணுவச் சோதனைச் சாவடியூடாகச் சென்றுள்ளார்.

அங்கு தேசிய அடையாள அட்டையைப் பரிசோதித்த பொலிஸார் போலியான அடையாள அட்டையெனத் தெரிவித்துப் பிரஸ்தாப யுவதியைக் கைது செய்தனர்.

நேற்றுக் காலை வவுனியா நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட யுவதியை பிணையில் செல்ல மாவட்ட நீதிபதி இளஞ்செழியன் உத்தரவிட்டார்.

மேலும் யுவதியின் அடையாள அட்டையை கொழும்பு ஆட்பதிவுத் திணைக்களத்திற்கு அனுப்பி பரிசோதிக்குமாறும் நீதிபதி பொலிஸாருக்குப் பணிபுரை விடுத்தார்.

தனது அடையாள அட்டையை கிராம சேவையாளரூடாகவே தான் பெற்றுக் கொண்டதாக யுவதி கூறியுள்ளார். (த)

# உல்லாசப் பயணிகள் வரவு வழமை போல்

(கொழும்பு)

கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தல் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல் சம்பவத்தினால் நாட்டின் உல்லாசப் பிரயாணத் துறையில் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லையென உல்லாசப் பிரயாணக் ஹோட்டல்களின் உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

குண்டுத் தாக்குதல் சம்பவத்தினையடுத்து வெளிநாட்டுப் பயணிகள் எவரும் தமது பயணத்தை இரத்துச் செய்யவில்லையெனவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (உ-60,10)

# 80 வீத வரவு இல்லையேல் பரீட்சை அனுமதி இல்லை

## கல்வி அமைச்சு சுற்றறிக்கை

(கொழும்பு)

பாடசாலை நேரங்களில் மாணவர்களுக்கு பிரத்தியேக வகுப்புக்களை நடத்தும் ஆசிரியர்கள் மீது கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுக்குமாறு கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் இந்திராணி பாடசாலை அதிபர்களுக்கு சுற்றறிக்கை ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

பாடசாலை நேரத்தில் ஆசிரியர்கள் பலர் பிரத்தியேக வகுப்புக்களை நடத்துவதாகவும் இந்த வகுப்புக்களுக்குப் பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் பாடசாலை நேரத்தில் செல்வதாகவும் கல்வி அமைச்சுக்குப் பல்வேறு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இதனால் இவ்வாறான ஆசிரியர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கல்வி அமைச்சு பாடசாலை அதிபர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளது.

மேலும் மாணவர்களின் பாடசாலை வரவு விடயத்தில் கூடிய அக்கறையும், கவனமும் செலுத்தி 80 சதவீதமான வரவினைப் பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு மட்டுமே பரீட்சைகளுக்குத் தோற்றுவதற்கான அனுமதியினை வழங்குமாறும் அதிபர்களுக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. (த-121)

# மிகச் சிறிய தவறுகள் கூட பாரிய எதிர் விளைவுகளை ஏற்படுத்தும்

## இராணுவத் தளபதி கொட்டேகொட

(கொழும்பு)

நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதில் இராணுவத்தினருக்குப் பொறுப்பான பங்குள்ளதாக இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சாந்த கொட்டேகொட தெரிவித்துள்ளார்.

இரண்டு தசாப்தங்களுக்கு மேல் நீடித்த யுத்தத்தின் பின்னர் இருதரப்பும், பேச்சுக்களின் மூலமே நிரந்தர சமாதானத்தை எட்டமுடியும் என்ற முடிவுக்கு வந்துள்ளனர்.

இநநிலையில் சமாதான முயற்சிக் காலத்தில் ஏற்படும் மிகச்சிறிய தவறுகள் கூட மிகப்பெரிய எதிர் விளைவுகளை ஏற்படுத்தலாம். இன்றைய நிலையில் நாட்டு மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு முடிபுகளை எடுக்கவேண்டிய மிகப பெரிய பொறுப்பு தன்மீது உள்ளதாகவும் இராணுவத் தளபதி கூறியுள்ளார். இராணுவத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் ஒரே குழுவாகத் தலைமையின் உத்தரவுக்கு அமைய, உரிமை ஒப்படைப்புடனும், கட்டுப்பாட்டுடனும் நடந்துகொள்ளவேண்டும் எனவும் புதிய இராணுவத் தளபதி கோரியுள்ளார். (த-121)

## சடலம் ஒப்படைப்பு

(பருத்தித்துறை)

தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் காணப்பட்ட நபர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தொண்டமனாறு கிராம சேவையாளரின் உதவியுடன் நேற்று மதியமளவில் மீட்கப்பட்ட சடலம் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (த-52)

## தண்டப்பணம் அறிவீடு

(யாழ்ப்பாணம்)

அனுமதிப் பத்திரம் இல்லாது அரசாங்கச் சீல் இடப்பட்ட சாராயத்தை விற்றமை தொடர்பில் யாழ். சிறு குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸாரினால் கடந்த 5ஆம் திகதியன்று தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் மீதான விசாரணை அன்றைய தினம் இடம் பெற்றபோது எதிரிகள் 13 பேரும் குற்றத்தை ஒப்புக் கொண்டதன் பேரில் இவர்களைத் தண்டப்பணமாக 43 ஆயிரம் ரூபாவும் தர்மப் பணமாக 27 ஆயிரம் ரூபாவும் செலுத்துமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

இவர்களிடம் இருந்து அறவிடப்பட்ட தர்மப் பணங்களை இருபாலை கானான் சிறுவர் இல்லம், சிவபூமி சிறுவர் நலவிருத்திப் பாடசாலை ஆகியவற்றுக்குச் செலுத்துமாறும் கட்டளையிடப்பட்டது. (உ-19)

## வவுனியா வளாக

# கல்வி நடவடிக்கைகள் விரைவில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் வவுனியா வளாக இரு பீடங்களினதும் கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் 19ஆம் திகதி திங்கட்கிழமை மீண்டும் ஆரம்பமாகவுள்ளன.

சில கோரிக்கைகளை முன்வைத்து வளாக ஊழியர்கள் நடத்திய போராட்டம் காரணமாக இரு பீடங்களினதும் கல்விச் செயற்பாடுகள் கடந்த மாதம் 29ஆம் திகதியுடன் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

அண்மையில் மாணவர்களுடனும் ஊழியர்களுடனும் வளாக நிர்வாகம் நடத்திய பேச்சுவார்த்தையில் இணக்கம் காணப்பட்டதையடுத்துக் கல்வி நடவடிக்கைகள் 29ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாக வளாக முதல்வர் திருமதி ஆர்.மகேஸ்வரன் தெரிவித்துள்ளார். (உ-2)

## கட்சிச் செயலர்களுக்கு இன்று கூட்டம்

(கொழும்பு)

நடந்து முடிந்த மேல் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்ட அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் மற்றும் சுயேட்சைக்குழுக்களுடனான கூட்டமொன்று இன்று மாலை 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

தேர்தல் ஆணையாளர் தயாநந்த திஸநாயக்காவின் தலைமையில் இக் கூட்டம் இடம் பெறவுள்ளது. இக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கட்சியின் செயலாளர்களுக்கு தேர்தல் ஆணையாளர் அழைப்பு விடுத்துள்ளார். (த-121)

## தமிழர்களைத்...

தியுள்ளனர். இவ்வாறு திருப்பி அனுப்பப்பட்டவர்களில் பலர் நீண்ட காலமாக கனடாவில் வாழும் தமிழர்கள் என்பதும் அவர்கள் கனடியக் குடியுரிமை பெற்றவர்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (த-121)

## அவசரகால...

தவறிவிட்டன. அவசர கால நிலையை நீககியமையின் விளைவாகவே தற்கொலைத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

நாட்டைப் பிரிக்கும் கோரிக்கையைப் புலிகள் இன்னமும் கைவிடவில்லை என்பதையே இது காட்டுகினறது. தற்போதுள்ள சூழல் புலிகள் தலைநகருக்குள் ஊடுருவ வசதியாகவுள்ளது. இவவாறு எல்லாவல தேரர் தெரிவித்துள்ளார்.(த-6)

## விசமத்தனமான...

தெரிவித்துள்ள விடுதலைப் புலிகள், மட்டக்களப்பில் நேற்று முன்தினம் சுட்டுக்கொல்லப்பட்ட கிராம சேவகர் குறித்து இவ்வானொலி வெளியிட்டுள்ள செய்தி குறித்தும் வன்மையாகக் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

சிறிலங்காப் படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் இத்தகைய படுகொலைகளுக்கு பின்னணியில் இருப்பவர்கள் குறித்து சுட்டிக் காட்டியுள்ள விடுதலைப் புலிகள், இத்தகைய சூழ்நிலையில் ாி.பி.சி. வானொலி ஊடாக சிறிலங்கா அரசாங்கம் மேற்கொண்டு வரும் திட்டமிட்ட பிரசார நடவடிக்கைகள் குறித்து கடுமையான அதிருப்தி தெரிவித்துள்ளனர். (த)

## ஐ.ம.சு...

பெற்ற வன்முறைகள் ஆள் மாறாட்டங்கள் மோசடிகள் போன்ற குற்றச்சாட்டுக்களில் 42 பேர் கைது செய்யப்பட்டனர்.

இரத்தினபுரி, மாத்தளை, உடுதும்புரவ அம்பலாங்கொட, கலுத்துறை, நாவலப்பிட்டி போன்றபகுதிகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட அனைவரும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கபபட்டுள்ளனர். இதேவேளை தேர்தலுக்கு முன்னர் இடம் பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக 466 முறைப்பாடுகள் பொலிஸ் தேர்தல் செயலகத்திற்குக் கிடைத் துள்ளனா. (த-121)

## அமெரிக்கப்...

இருதரப்பினரும் நடத்தியதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை இவ்வருடத்தில் அமெரிக்கப் புலனாய்வுத் துறையின் யாழ்.குடாநாட்டுக்கான மூன்றாவது இரகசிய விஜயம் இதுவெனவும்;

வடக்குக் கிழக்கின் ஏனைய மாவட்டங்களான திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை,வவுனியா ஆகியவற்றுக்கும் இவ்வாறான இரகசிய விஜயங்களை அமெரிக்க புலனாய்வுத்துறையினர் மேற்கொண்டு வருவதாகவும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

இது இவ்விதம் இருக்க, அம்பாறை மாவட்டத்தில் உள்ள படைமுகாம்களில் அமெரிக்கப் புலனாய்வு அதிகாரிகள் சிவில் உடையில் தங்கியிருந்து வதிவிடப் பயிற்சிகளை வழங்கிவருவதாக அண்மையில் கிழக்கில் இருந்து வெளியாகும ஈழநாதம் பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

மேலும் கடந்த மாதம் அமெரிக்க இராணுவ அதிகாரிகள் அடங்கிய குழுவொன்றும் யாழ். போதனா வைத்தியசாலைக்கு விஜயம் செய்து மருத்துவ சிகிச்சைகளை வழங்கியிருந்தமையும் ஆய்வாளர்களால் சந்தேகத்துடன் நோக்கப்படுகின்றது. (உ-43,64)


**கே.சி.சி.சி.வெற்றிக் கிண்ண**

**இறுதிப் போட்டி**

**யா/பல்கலைக் கழக அணி**

**எதிர்**

**பற்றீசியன் அணி**

இடம்:கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானம்

திகதி: 11.07.2004 இன்று (ஞாயிறு) காலை 9.00 மணி

பிரதம விருந்தினர்: திரு. S.கிருபானந்தன் Bsc Eng. Amie (SL)

நிர்வாகி, சீகல் புறப்பெட்டி டெவலப்பர்ஸ (PVT) L.t.d

சிறப்பு விருந்தினர்: திரு.பொ.கமலநாதன்

(அதிபர் கொக்குவில் இந்துக் கல்லூரி)

செயலாளர்,

சுற்றுப் போட்டிக் குழு

C-365)





இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.07.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலம்புரியின் வாரமலர்

விலை :-16.00

பொதுசன நூலகம்
10 JUL 2004

# சங்கு நாதம்

# Sankunatham

12 - 18ஜூலை 2004

பக்கங்கள் - 20

சங்கு :-04 வள்ளுவர் ஆண்டு 2035 தொலைபேசி :- 2223378 நாதம் :- 18

## மேற்குலக பிரசன்னத்தின் முக்கியத்துவம்



கரும்புலிகள் நாள் ஜூலை 5 2004

## சண்டை வருமா?



அரசியல் - அறிவியல் - ஆன்மீகம் அதுவே உங்கள் சங்குநாதம்.

# யாழ்ப்பாணத்தில் குழந்தை வியாபாரம்!

# ஆலடி மாநாடு






பண்டிதர் பரமநாதன் ஆலடி மாநாட்டிற்கு மிக வேகமாக வந்தார். பண்டிதரின் வேகத்தில் ஏதோ விஷயம் இருப்பதை மாநாட்டில் இருந்தவர்கள் உணர்ந்துகொண்டனர்.

போதாக்குறைக்கு பண்டிதரின் கையில் துண்டுப்பிரசுரங்கள். பண்டிதர் வந்ததும் வராததுமாக,

“சீச்...சீச்...சி... எங்கட யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலை இப்ப சிங்கள தேசத்து ஆசுப்பத்திரியள் மாதிரிப் போச்சு'' மாநாட்டில் இருந்தவர்களுக்கு பண்டிதர் கூறியது விளங்கவில்லை.

“என்ன பண்டிதரையா, யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை என்கிறீர்கள். என்ன விஷயம்'' விதானையார் விசுவலிங்கம் கேட்டார்.

“ஏன் விதானையார் உங்களுக்கு உது தெரியாதே. இரண்டு குழந்தை பிறந்த இடத்தில ஒரு குழந்தை மர்மமாக மறைஞ்சுபோச்சு. குழந்தையைப் பெற்ற தாய் இரட்டைக் குழந்தையில மற்றக் குழந்தையையும் மீட்டுத் தருமாறு எல்லா அமைப்புகளுக்கும் கடிதம் அனுப்பியிருக்கிறார்.'' பண்டிதர் சொல்லிமுடிப்பதற்குள் அவசரப்பட்ட புறோக்கர் பொன்னையா,

“என்ன இரட்டைக் குழந்தையில ஒரு குழந்தை மர்மமாகக் காணாமல் போயிற்றோ? பண்டிதரையா கதையை விளக்கமாச் சொல்லுங்கோ'' புறோக்கரின் கேள்வியோடு கையில இருந்த துண்டுப்பிரசுரங்களில் ஒன்றை எடுத்த பண்டிதர் அந்தக் குழந்தையின்ர பெற்றோர் எழுதினது. இதை வாசிக்கிறன் கவனமாகக் கேளுங்கோ'' பண்டிதர் சொல்லியபடியே கடிதத்தை வாசிக்கத் தொடங்கினார்.

திரு.தி.திருஞானசேகரன்,
மிதுனாலயா,
கரணவாய் வடமேற்கு,
வல்வெட்டித்துறை.
2004.06.18

இணைப்பாளர்,
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு,
யாழ்ப்பாணம்.

ஐயா,

இரட்டைக் குழந்தைகளில் மறு குழந்தையை எம்மிடம் ஒப்படைத்தல்

மேற்படி முகவரியில் வசிக்கும் நான், எனது மனைவி தி.தெய்வறதி அவர்களை குழந்தைப் பெறுபேற்றுக்கான அனுமதிக்காக சித்திரை மாதம் (05.04.2004) அன்று யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு வாட் இலக்கம் 22இல் அனுமதிக்கப்பட்டார். இவர் தாய்மையடைந்த 3ம் மாதம் ஸ்கான் முறையில் பரிசோதிக்கப்பட்டு ஒரு குழந்தை என்ற விபரம் கூறப்பட்டது. இதன் பின்னர் மனைவியின் உடலில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக 7ம் மாதம் 22ம் வாட்டில் அனுமதிக்கப்பட்டு மீண்டும் ஸ்கான் பண்ணினார்கள். அப்போது ஸ்கான் பண்ணிய டாக்டர் மனைவியைக் கேட்டார் முதலில் உங்களுக்கு ஸ்கான் பண்ணியது யார் என்று. ஏன் என்று கேட்டபோது அம்மா உங்களுக்கு இரண்டு பிள்ளைகள் எனக் கூறினார். மேலும் இதன்போது வயிற்றினுள் குழந்தையிருக்கும் நிலைகள் படமூலம் கீறினார். இதன்பின்னர் ஸ்கான் பண்ணிய டாக்டர் 22ம் வாட்டில் வந்து பவானி டாக்டரிடம் கூறினார். இந்த அம்மாவுக்கு இரண்டு பிள்ளைகள் என்றார். உடனே டாக்டர் பவானி அம்மா உங்களுக்கு இரட்டைப் பிள்ளைகள் என்றபடியால்த்தான் நெஞ்சுப் படபடப்பு இருந்திருக்கு. இனிமேல் சந்தோஷம்தானே. இரண்டு பிள்ளைகளையும் பெற்று வளர்க்கிறதுதானே எனவும் கூறினார். (எனது மனைவியும் இரட்டைக் குழந்தைகளில் ஒருவர், இவரது தாயின் சகோதரியும் இரட்டைக்குழந்தைகள். இப்படியான பரம்பரை வழித் தொடர்பு உண்டு என்பதையும் இச்சந்தர்ப்பத்தில் தெரியப்படுத்துகிறேன்.)

மேலும் மீண்டும் 9ம் மாதம், 10ம் மாதம் ஸ்கான் முறையில் பரிசோதிக்கப்பட்டு இரட்டைக் குழந்தைகள்தான் என்ற தகவல் வழங்கப்பட்டது. இதன்போது இரண்டு குழந்தைகளும் வயிற்றினுள் இருக்கும் நிலை படமூலம் குறிப்பிடப்பட்டு இரு குழந்தைகளின் அளவு 88mm, 89mm எனவும் குறிப்பிடப்பட்டும், பல்வேறு தகவல்களுடன் கிளினிக் கொப்பி, காட் போன்றவற்றை வழங்கியுள்ளார்கள். மேலும் 06.04.2004 அன்று இரவு 7மணிப் பார்வையில் டாக்டர் பவானி மனைவியைப் பரிசோதித்துவிட்டு இரண்டு குழந்தைகளும் வளர்ந்துவிட்டது. ஆனாலும் நாளைக்கு குழந்தைதான் பிறந்தது. எனவே அம்மா உங்களுக்கும் ஆண்குழந்தைகள்தான் பிறக்கும் என்றார். மேலும் ஒரு குழந்தை எடுக்கும்போது முள்ளந்தண்டில் ஊசி ஏற்றிய டாக்டர் மற்றக் குழந்தையை பொசெப்ஸ் போட்டு எடுப்பம் என S.H.Oவுக்கு கூறினார். மேலும், ஒரு குழந்தையை எடுத்ததும் S.H.O கூறினார், அம்மாவுக்கு முதல் குழந்தை பெண் குழந்தை கிடைச்சிருக்கு. சரி மற்றக் குழந்தை என்ன உங்களுக்கு ஒப்பரேசன் செய்யவேண்டாம். ஏனெனில் உங்களைவிட அவசரமாகச் செய்யவேண்டியவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குச் செய்வோம். உங்களுக்கு குழந்தைகள் வளர்ந்திருந்தாலும் அதனால் ஒரு பிரச்சினையுமில்லை. எனவே உங்களுக்கு நாளைக்கு வந்து சொல்லுகிறேன் எப்ப சத்திரசிகிச்சை செய்வதென்று கூறினார். 06.04.2004 அன்று இரவு 9.30க்குப் பின் மனைவியிடம் வாட்டுக்கு பொறுப்பான தாதி ஒருவர் வந்து சொன்னார். உங்களுக்கும் நாளைக்கு சத்திரசிகிச்சை. எனவே 10மணிக்குப் பின் எதுவும் சாப்பிட வேண்டாம் என்று. ஆயினும் 07.04.2004 அன்று மு.ப. 11.18 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட சத்திரசிகிச்சை மூலம் எமக்கு ஒரு குழந்தைதான் வழங்கி இருந்தார்கள். இது தொடர்பாக அன்று கடமையில் ஈடுபட்டவர்களுடன் கதைத்தபோது ஸ்கானில் பிழையிருக்கலாம் எனக் கூறினார்கள். ஸ்கான் மேற்கொண்ட டாக்டரில் ஒருவர் மனைவியிடம் சென்று தவறுகள் ஏற்பட்டிருக்கலாம் எனக்கூறி மன்னிப்புக் கேட்டுச் சென்றார். மேலும் மனைவிக்குத் தெரியாமல் சத்திரசிகிச்சை முடிந்து வாட்டுக்கு வருவதற்கு முன்பு அன்று கடமையிலிருந்த டாக்டர், தாதி போன்றோர் சேர்ந்து மனைவியின் பையில் இருந்த கிளினிக் கொப்பி, கிளினிக்கில் எடுக்கப்பட்ட ஸ்கான் பற்றி பதிவுசெய்த காட், 05.04.2004 அன்று வைத்தியசாலைக்கு அனுமதிக்காக வழங்கப்பட்ட காட் போன்றவற்றை கையாடியுள்ளனர்.

மேலும் சத்திரசிகிச்சைக்காக அதற்குரிய இடத்தில் படுத்திருக்கும்போது முள்ளந்தண்டில் ஊசிபோட்ட டாக்டர் மனைவியின் வயிற்றைப் பார்த்து இரண்டு குழந்தைகளும் வெளியில வாற சந்தோசத்தில ஓடித்திரியிற வடிவைப் பாருங்கோ என S.H.Oவுக்கு கூறினார். S.H.O சத்திரசிகிச்சை செய்யத் தொடங்கும்போது மனைவிக்குக் கூறினார். இன்று சிகிச்சை செய்தவர்கள் எல்லோருக்கும் ஆண் குழந்தை என்று பார்ப்பம் எனவும் கூறினார். பின்பு சிறிது நேரத்துக்குப் பின் மற்றக் குழந்தையைக் காணவில்லையெனவும் உங்க என்னத்தை ஸ்கான் பண்ணுறாங்கள் என S.H.O ஸ்கான் பண்ணிய டாக்டரை நையாண்டி பண்ணியதாகவும் மனைவி கூறினார். அதற்கு ஊசி ஏற்றிய பெண் டாக்டர் கூறினார். டாக்டர் வடிவா லைற் அடிச்சுப் பாருங்கோ எனக் கூறிச் சிரித்தார். இது தொடர்பாக மனைவி வாட்டுக்கு வந்ததும் எனக்கு கூறினார். என்னுடைய மற்றக்குழந்தையை வாங்கித்தாங்கோ என அழுதார். நான்தான் அவரை சமாதானப்படுத்தி வைத்திருந்தேன்.


மேலும் ஒப்பரேசன் செய்த அடுத்தநாள் (8.4.2004) அன்று டாக்டர் பவானி வாட்டில் உள்ளவர்களைப் பார்வையிடும் போது மனைவியை மாத்திரம் பார்க்காது சென்றுள்ளார். இதற்கு என்ன காரணம்? மேலும் வைத்தியசாலையிலிருந்து வீடு செல்லும்போது வழங்கப்படுகின்ற நோயாளர் விடுகைப்பத்திரத்திலும் இரட்டைக் குழந்தைகள் தொடர்பான விபரம் எழுதப்பட்டுள்ளது. நோயாளர் விடுகைப் பத்திரத்தின் பிரதி இக்கடித்துடன் இணைக்கப்படுகின்றது.

தர்மத்தை நிலைநாட்ட வேண்டிய வைத்திய சமூகம் எங்களை உள நோய்க்கு உட்படுத்தி எம்மை நோயாளர் ஆக்காது எமது மறுகுழந்தையை எம்மிடம் ஒப்படைக்க வேண்டிய சகல ஒழுங்குகளையும் செய்து தரும்படி மிகத் தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி.

இங்ஙனம்,
உண்மையுள்ள,
(தி. திருஞானசேகரன்)

பிரதி.
1. பணிப்பாளர், யாழ். போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.
2. இணைப்பாளர், இலங்கை மனித உரிமை ஆணைக்குழு.
3. செயலாளர், சுகாதார அமைச்சு வடகிழக்கு மாகாணம்.
4. பிரதி சுகாதார ஆணையாளர், சுகாதாரத் திணைக்களம் யாழ்ப்பாணம்.
5. தலைவர் மாவட்டச் சிறுவர் பாதுகாப்புக்குழு, யாழ்ப்பாணம்.
6. அரசியல் துறை, (த.வி.பு ) யாழ்ப்பாணம்



பண்டிதர் கடிதத்தை வாசித்து முடித்ததும், “அப்ப பாத்தியளே பிள்ளை வியாபாரமும் யாழ்ப்பாணத்தில் துவங்கிற்றுது. இனிமேல் எல்லாம் கஷ்ரம் தான்'' கங்காணி காத்திகேசன் பெருமூச்சோடு சொன்னார்.

கடிதத்தை வாசித்து முடித்த பண்டிதர், “யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில மருத்துவபீட மாணவி ஒருவர் உண்ணாவிரதம் இருந்தவரல்லோ'' எனப் பண்டிதர் கூற,

“ஓம் ஓம் மருத்துவபீட மாணவி ஒருவர் உண்ணாவிரதம் இருக்கிறார் என்று அறிஞ்சனாங்கள் ஏனாம்?'' விவசாய மன்னர் மாணிக்கத்தார் கேள்வி எழுப்பினார்.

மாணிக்கத்தாரின் கேள்வியோடு பண்டிதர் பரமநாதன் தனது இடுப்பில் செருகிவைத்திருந்த மற்றொரு துண்டுப் பிரசுரத்தை எடுத்து வாசித்தார்.

செல்வி.கி.புஸ்பமாலா,
இல.28 துரைராசா வீதி,
வண்.வடமேற்கு,
யாழ்ப்பாணம்.

யாழ்.மருத்துவபீட நிர்வாகத்தின் பழிவாங்கும் போக்காலும் யாழ். பல்கலைக்கழக நிர்வாகத்தின் பொறுப்பற்ற செயற்பாட்டாலும் எனது மருத்துவக் கல்வி பாதிக்கப்பட்டமை தொடர்பாக நியாயம் கோரிய போராட்டம்.


# பல்கலை மாணவி உண்ணாவிரதம்

கிருஸ்ணன் புஸ்பமாலா 95/FM/19

யாழ் மருத்துவபீட மாணவியாகிய நான் மருத்துவபீட நிர்வாகத்தின் பழிவாங்கும் போக்காலும், யாழ்.பல்கலைக்கழக நிர்வாகத்தின் பொறுப்பற்ற செயற்பாட்டாலும் 2001ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை எனது மருத்துவக் கல்விக்குரிய உரிமைகள் யாவும் பறிக்கப்பட்ட நிலையில் உள்ளேன். அக்காலப் பகுதியிலிருந்து மருத்துவபீட நிர்வாகத்தின் பொய்யான கருத்துக்களாலும் என்னையும், எனது பெற்றோர், நலன்விரும்பிகள் யாவரும் ஏமாற்றப்பட்டனர். அத்துடன் எங்களின் கேள்விகளிற்கு எந்தவித எழுத்துருவிலான பதிலும் இல்லை. பல பதிவுத் தபால்களிற்கும் பதில் இல்லை. இதனால் மேலதிக நடவடிக்கை எடுப்பதற்கு தள்ளப்பட்டேன். இதன் காரணமாக மூதவையில் எனது மனு எதுவுமின்றி 2003ஆம் ஆண்டு பரீட்சையெழுத அனுமதியளிப்பதாக திடீரென ஒரு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டது. இப்பரீட்சை எழுதியபோது மருத்துவபீட நிர்வாகத்தால் மிகவும் கீழ்த்தரமான முறையில் நடத்தப்பட்டேன். அதாவது மூதவை பரீட்சை எழுத அனுமதித்தது மட்டும்தான். நூலகம் உட்பட மருத்துவபீடத்தில் எதையும் பாவிக்கமுடியாது என தடுக்கப்பட்டது. மூதவையிடம் எல்லாவற்றையும் கேட்டுப் பெற்றுக் கொள்ளும்படி துரத்தப்பட்டேன். அத்துடன் அப்பரீட்சையிலும் பழிவாங்கப்பட்டது உறுதியான நிலையில் துறைத்தலைவர்களை சந்திக்கப் புதிதாகப் பதவியேற்ற பீடாதிபதியால் தடைவிதிக்கப்பட்டது. எழுத்துருவில் துணைவேந்தருக்கும் அனுப்பினார். அத்துடன் பீட சபைக்கு மனு எதுவும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அனுப்பப்பட்ட பதிவுத்தபால்கள் உடனடியாக உடைக்காமலே திருப்பி அனுப்பப்பட்டது.

(04ஆம் பக்கம் பார்க்க....)

# மேற்குலக பிரசன்னத்தின் முக்கியத்துவம்



1937இல் சோவியத்யூனியன் எழுச்சி பெறுவதற்கு முன்பும் சரி 1992இல் அது வீழ்ச்சி அடைந்த பிற்பாடும் சரி அல்லது அதன் செல்வாக்கு மிக வீறுகொண்டு உலகின் பல பாகங்களிலும் வளர்ந்து வந்த ஐந்து தசாப்த காலத்திலும் சரி மேற்குலகப் பிரசன்னம் உலக நாடுகளின் அரசியல்ப் போக்கில் ஏற்படுத்தி வந்த செல்வாக்கையும் அதன் முக்கியத்துவத்தையும் பற்றி இங்கு ஆராய்வோம்.

மேற்குலகம் எனும் சொல்லினால் பெரும்பாலும் அமெரிக்க வல்லரசும், அதற்குப் பக்கபலமாக விளங்கும் அதன் தாய்வீடான பிரித்தானியாவுமே இன்று உலகின் கண்முன்னால் வந்துநிற்கும் நாடுகளாகும். ஆயினும் அமெரிக்கா தலைமையிலான அத்திலாந்திக் ஒப்பந்த நாடுகளும் இந்த. அணியில் வைத்து நோக்கப்பட வேண்டியவையே! நேட்டோ எனும் இந்த அமைப்பிலுள்ள பிரான்ஸ், ஜேர்மனி என்பவை உலக அதிகாரச் சமநிலைப் பிரச்சினையில், இரட்டைத் தலைமைத்துவத்திற்கான இடைவெளியை நிரப்புவதில் சில நகர்வுகளை மேற்கொள்ள முற்படுகின்றபோதும் அது எவ்வளவுதூரம் சாத்தியமானது என்பது விவாதத்திற்குரியது.


இன்று உலகின் பெரும்பாலான நாடுகளில், அதிலும் குறிப்பாக இஸ்லாமிய நாடுகளிலும் இடதுசாரிகளிடத்தும் இந்த மேற்குலகப் பிரசன்னம் பற்றிக் கடுமையான எதிர்ப்பு நிலைப்பாடு காணப்படுகின்றது. ஆங்கிலேயருக்கு எதிரான அதிலும் அமெரிக்க மற்றும் பிரித்தானியருக்கெதிரான மிகக் கடும் போக்கு ஒன்று உலக அரங்கில் காணப்படுகின்றது.



பொஸ்னியா தொடக்கம் ஈராக் வரையும் வடகொரிய அணுவாயுதப் பிரச்சினை, மத்திய கிழக்கில் பலஸ்தீனப் பிரச்சினை, ஈரானில் அணுவாயுதப் பிரச்சினை, ஈராக்கில் பேரழிவு ஆயுதப் பிரச்சினை, சீனாவில் மனித உரிமைகள் பிரச்சினை, ஹொங்கொங்கில் தற்பொழுது தீவிரமடைந்துவரும் ஜனநாயக எழுச்சிப் பேரணி போன்ற விடயங்களுக்குப் பின்னால் அமெரிக்காவும் அதன் கூட்டாளிகளான மேற்குலகமும் இருக்கின்றன. பொதுவாக இந்நாடுகளில் மனித உரிமைகள், ஜனநாயக உரிமைகள் என்பவற்றை நிலைநாட்டவும், பயங்கரவாதத்தையும், பயங்கர அழிவுதரும் ஆயுதங்களையும் பயங்கரவாதிகளை அழிக்கவும் என்று கூறிக்கொண்டே மேற்குலகத் தலையீடு ஆரம்பிக்கப்படுகிறது.

மறுபுறத்தில் சவுதி அரேபியா, எகிப்து, குவைத், ஜோர்தான், பாகிஸ்தான் போன்ற நாடுகள் ஜனநாயக விரோத மன்னர்களால் அல்லது சர்வாதிகார சக்திகளால் அதுவும் ஜனநாயகவாதிகளினதும், மனித உரிமை ஆர்வலர்களதும் குரல்வளைகளை நெரிப்பவர்களால் ஆளப்படுகின்றபோதிலும், அமெரிக்காவும் அதன் தோழமை நாடுகளும் இவற்றின் நண்பர்களாகவும், பாதுகாவலர்களாகவும் விளங்கி வருகின்றமையும் ஒரு வித மெய்மை முரண்பாடாக (PARADOX) அவதானிக்கப்படுகின்றது.

இந்த இரண்டாவது குழுவில் மேற்குலகின் செல்லப்பிள்ளையாக இறுதியாக இணைந்திருப்பவர் லிபியத் தலைவர் கேணல் முஅம்மர் கடாஃபியாவார். இவர் ஒரு காலத்தில் அதிதீவிர மேற்குலக எதிர்ப்பாளராக விளங்கியவர். ஆனால் எதுவித ஜனநாயக உரிமைகளையும் தனது மக்களுக்கு வழங்காமலேயே அமெரிக்க மற்றும் பிரித்தானிய அரசுகளின் செல்லப்பிள்ளையாகியிருக்கிறார்.



இவற்றைவிட இன்னுமொரு விடயம் கவனத்திற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. 1970களின் இறுதியில் பாகிஸ்தான் ஜனநாயகத்தின் முன்னோடி என்று கருதப்பட்ட சுல்பிகார் அலி - புட்

பேதுரு யேசுதாசன்
B.A (Hons) pol.science
ACIM (uk), Dip. in Journalism

டோவைச் சதிமூலம் கவிழ்த்து ஆட்சியைக் கைப்பற்றிய ராணுவ ஜெனரல் ஷியா - உல் - ஹக், பூட்டோவைத் தூக்கிலிட்டபோது அமெரிக்கா வெறும் அறிக்கைகளை மட்டுமே வெளியிட்டுக் கொண்டிருந்தமையும், அரசியல் அவதானிகளின் பார்வையில் முக்கியத்துவம் பெறவேண்டியது.


மேற்சொல்லப்பட்ட விபரங்கள் அமெரிக்காவினதும் அதன் மேற்குலக தோழமை நாடுகளினதும் இரட்டைத்தன்மையைத் தெளிவாகவே வெளிப்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை.

ஆனால் உலகநாடுகளில் அமெரிக்கா தலைமையிலான மேற்குலக நாடுகளின் பிரசன்னம் இன்னுமொரு முக்கிய செய்தியையும் காலாதிகாலமாக வெளிப்படுத்தி வருவதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டியுள்ளது.

இரண்டாம் உலகப்போரில் ஆரம்பித்து, கொரிய யுத்தம், வியட்நாம் யுத்தம் மற்றும் மத்திய கிழக்குப் பிரச்சினைகளிலெல்லாம், அமெரிக்கா தனது கையில் பாரிய பேரழிவு தரும் ஆயுதங்களை வைத்திருந்தபோதும் பல்லாயிரக்கணக்கான தனது வீரர்களின் உயிரைத் தியாகம் செய்தது. கொரியா, வியட்நாம் போன்ற இடங்களில் அணுவாயுதத்தைப் பாவிக்கும்படி இராணுவ ஜெனரல்களிடமிருந்து வந்த அழுத்தத்தை அமெரிக்கத் தலைமைகள் நிராகரித்துவிட்டன.

இரண்டாம் உலகப்போரில் கூட ஐரோப்பாவை விட்டு, ஆசிய வல்லரசான ஜபபான மீதே அமெரிக்கா அணுகுண்டை வீசியது. அதன் மிகத் தூரநோக்குள்ள அரசியலின் வெளிப்பாடாக இன்றும் இச்செயல் கருதப்படுகிறது.

சாதாரண ஏழை மனிதனை உஷார் மடையனாக்கி, அவனது இரத்தம் சிந்தலில்




வெற்றிவாகை சூடிய கம்யூனிஸ ஆட்சியாளர்கள் அதே சாதாரண மனிதனது அடிப்படை மற்றும் சமூக உரிமைகளை மறுத்தமையை யாரும் மறந்துவிடமுடியாது.

தமக்கென ஒரு அடையாளத்தைத் தேடிக்கொள்வதற்கு மேற்குலகை எதிர்ப்பது இன்றைய உலகின் பொதுவான போக்காக இருக்கிறது. சதாம் ஹுசெய்னையோ, அடிப்படைவாதத் தீவிரவாதத்தையோ ஆதரித்துப் பேசுவதும் எழுதுவதும் இதே வகையை ஒத்ததுதான்.

"இராணுவ ஆக்கிரமிப்பு" அழிவை ஏற்படுத்தும். அதை யார் செய்தாலும் முடிவுகள் அழிவுகளுக்கூடானதுதான்! ஆனால் மேற்குலக பிரசன்னம் தனிமனிதனுடைய அடிப்படை மற்றும் சமூக உரிமைகளுக்கு உத்தரவாதம் வழங்குவதை யாரும் மறுக்கமுடியாது.

ஆப்கானில் தலிபான்களும், ஈராக்கில் சதாமும் தனது மக்களுக்கு எதை வழங்கினார்கள் என்ற கேள்விக்குப் பதில் என்ன? மனித நாகரிகத்திற்கு அப்பாற்பட்ட குரூரங்களைப் புரிந்த சதாம் இன்று தனக்காக வாதடவும், தனது கருத்துக்களைக் கூறவும் முடிகிறது. ஆனால் சதாமிடம் பிடிபட்டவர்களுக்கு இவ் உரிமைகள் இருந்தனவா அல்லது சதாமிடம் மேற்குலகத் தலைவர் ஒருவர் பிடிபட்டிருப்பின் அவரை மீண்



டும் ஒருதடவை உலகம் கண்டிருக்க முடியுமா என பவை தவிர்க்கமுடியாத கேள்விகள் ஆகும்.

முதலாளித்துவம் அடிப்படையில் சுரண்டுவதை நோக்கமாகக் கொண்டது என்று இடதுசாரிகள் கோஷமெழுப்பினாலும் கூட மனித உரிமைகளுக்கு அது வழங்கும் பாதுகாப்பு வேறு எவராலும் வழங்கப்படவில்லையென்பதே உண்மை. மண்டேலாவும், காந்தியும் பெயரெடுத்தது மேற்குலகிற்கெதிரான போரிலேயே! அதுதான் மேற்குலக ஜனநாயகத்தின் பெருமை!

# சமாதானம் சாத்தியமா?

**'சாத்தியமா ஸ்ரீலங்காவில் சமாதானம்?' என்ற தலைப்பில் கனடாவிலிருந்து பத்மன் எழுதிய கட்டுரையிலிருந்து சில முக்கிய பகுதிகள்**

**கொழும்பில் குண்டுவெடிப்பு சமாதானம் நிலைகுலைவதன் அறிகுறியா?**

அடுத்த சில வாரங்களும் மாதங்களும் ஸ்ரீலங்காவில் சமாதானம் ஏற்படுவதில் முக்கியமானவை. இந்தக் காலகட்டம் 20 வருடங்களுக்கு மேல் தொடர்ந்து 80,000க்கு அதிகமான உயிர்களைப் பலிகொண்ட யுத்தம் தொடரப்போகின்றதா? அல்லது, ஸ்ரீலங்கா அரசுக்கும் – தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை முனநிலைப்படுத்தப்பட்டு தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்கள் மீள ஆரம்பிககப் போகின்றதா? என்பதை கணக்கிடும் காலமாக அமையும். இந்நிலையில் மீணடும் யுத்தம் ஆரம்பிக்கப்பட்டால் அது நாட்டிற்கும், நாட்டு மக்களுக்கும் பெரும் இழப்புக்களை மீண்டும் வழங்கும் என்பது ஜயமில்லை.

**உலகிற்கே உதாரணம்**

சில கவலைக்குரிய – கசப்புணர்வைத் தருகின்ற சம்பவங்களைத் தவிர்த்துப் பார்த்தால், நோர்வே அரசின் மத்தியஸ்தத்துடன் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை உள்நாட்டு யுத்தத்திற்கு தீர்வுகாண்பதற்கு உலகநாடுகள் பலவற்றிற்கும் உதாரணமாக அமைந்த ஒரு விடயமே. ஆனாலும் இது தொடருமா? *சமாதானம் சாத்தியமாகுமா?* என்பதுதான் இன்றைய முக்கிய கேள்வியாகும்.

இருதரப்பும் யுத்தநிறுத்த உடன்படிக்கையை முழுமையாகக் கடைப்பிடிப்பதாக உறுதியளித்துள்ளபோதிலும், கிழக்கு மாகாண சம்பவங்கள் மற்றும் கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற குண்டுத் தாக்குதல், அந்தத் தாக்குதலை திசைதிருப்ப மேற்கொள்ளப்படும் முயற்சிகள் போன்றன சமாதானத்தின் தொடர்ச்சி குறித்து கேள்விகளை எழுப்பத் தவறவில்லை.

**சர்வதேச மௌனம்**

சர்வதேச சமூகம் தொடர்ந்து கடைப்பிடிக்கும் மௌனமானது தமிழர்களை விரக்தி



யடையச் செய்து வருகின்றது. கொடுமையின் வடிவமான இந்த மௌனத்தினால் தமிழினம் சர்வதேச சமூகம்மீது கொண்டுள்ள சிறிய அளவு நம்பிக்கையையும் குலைக்கவைக்கின்றது. ஸ்ரீலங்கா அரசு தன்னை அரசியல், இராணுவ ரீதியில் பலப்படுத்தும் வரையிலும் இந்த மௌனம் சர்வதேச சமூகத்தினால் நீடிக்கப்பட்டால் ஏற்படக்கூடிய விளைவுகளையும் தமிழ்ச் சமூகம் கணக்கிட்டுப் பார்த்து கவலையடைகின்றது.

சர்வதே சமூகத்தின் அக்கறையிலும், ஈடுபாட்டிலும் மாத்திரமே இலங்கைத்தீவில் தமிழர்கள் தமக்கான உரிமைகளுடன் வாழ்வதற்கு ஏதுவான தீர்வைப் பெறமுடியும் என்பதை சர்வதேச சமூகம் மறந்துவிடக்கூடாது. சர்வதேச சமூகத்தின் அழுத்தம் இல்லாமல் தமிழர்களுக்கு நியாயமான உரிமைகள் வழங்கப்படும் என தமிழ்ச் சமூகம் ஒருபோதும் நினைக்கவில்லை. இந்த உண்மையை சர்வதேச சமூகம் அறிந்துகொள்ள வேண்டும்.

**கொழும்பில் தாக்குதல்**

கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் தற்கொலைத் தாக்குதல் பாணியிலான் குண்டுவெடிப்புச் சம்பவத்தில் ஐவர் பலியாகி மேலும் பன்னிரண்டு பேர்வரை காயமடைந்த செய்தி தற்போது உலகளாவிய ரீதியில் முக்கியத்துவம் பெற்றுள்ளது. இது ஸ்ரீலங்காவில் சமாதானம் குறித்த கேள்விகளுக்கு மேலும் பல அர்த்தத்தைக் கொடுத்துள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை குறிவைத்து மேற்கொள்ளப்பட்டதாக படைத்தரப்பினால் குறிப்பிடப்பட்ட இக்குண்டுத் தாக்குதல் நடைபெற்ற பகுதி பாதுகாப்பு பலப்படுத்தப்பட்ட பகுதியாகும். நான்கு அமைச்சுப் பதவிகளைக் கொண்ட அமைச்சர் ஒருவரின் அலுவலகம், அமெரிக்க மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகளின் உயர்ஸ்தானிகராலயங்கள், பிரதமரின் அலரி மாளிகை மற்றும் பொலிஸ் நிலையம் ஆகியன இங்கே அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும் .

இந்நிலையில் இத்தாக்குதலை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீதான தாக்குதல் முயற்சியாக மாற்றி, அதனால் சமாதானப் பேச்சுககளின் மீள் ஆரம்பத்தை பிற்போடும் முயற்சியாகவே தற்போதைய கருத்துக்கள் கொழும்பில் இருந்து வெளிவருகின்றது

உண்மையில் இத்தாக்குதல் நடைபெற்ற நிரலொழுங்கை அவதானிக்கையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைவிட கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையமே குண்டுதாரியின் இலக்காக இருந்திருப்பதற்கு அதிகளவு சாத்தியக்கூறுகள் உள்ளன. அமைச்சரே தற்கொலையாளியின் குறியாக இருந்தால் அவர் முதலிலேயே குண்டை வெடிக்கச் செய்திருக்க முடியும். ஆனால் நடந்ததோ அதற்கு மாறானது.

அதேவேளை முன்னரும் இரண்டு தடவைகள் தாக்குதல் முயற்சியில் இருந்து உயிர் தப்பிய அமைச்சர் ஒருவரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்ட பகுதி ஒன்றினுள் தற்கொலைக் குண்டுதாரி ஒருவர் எவ்வாறு நுழைந்தார் என்பது சந்தேகத்துடன் இணைந்த கேள்வியே.

இந்நிலையில் இத்தகைய தாக்குதலொன்றை யார் நடாத்தியிருக்கக்கூடும் என்பது தொடர்பாக பல்வேறு ஊகங்கள் வகுக்கப்படலாம். ஆனாலும் அத்தாக்குதலுககு யாா மீது இலகுவாக குற்றம் சுமத்தலாம என்பதை பிஞ்சுப் பாலகனும் அறிவான்.

ஆனாலும் இத்தாக்குதலுக்கும் தமக்கும் தொடர்புகள் எதுவும் இல்லை என்பதனை தமிழீழ விடுதலைப்புலிகள் மறுத்துள்ளனர். அத்துடன் தற்போதைய சமாதானச் சூழ்நிலையில் இவ்வாறான தாக்குதல்கள் கண்டிக்கப்பட வேண்டியது எனவும் இது சமாதான விரோதிகளின் செயற்பாடாக இருக்கலாமெனவும் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு மேலும் குறிப்பிட்டுள்ளது. அதேநேரம் இத்தாக்குதலை பாரதூரமான ஒன்றென யுத்தநிறுத்த கண்காணிப்புககுழு தெரிவித்துள்ளது. ஆனாலும் இத்தாக்குதல் மிகத்தீவிரமான யுத்தநிறுத்த மீறல் எனக் கூறமுடியாது எனவும் அவர்கள் கூறியுள்ளனர்.

சமாதானப் பேச்சுவார்த்தையானது பரந்த அளவிலான வட்டத்தினுள் அடங்குவதாகத் தெரிவித்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, இவ்வாறான சிறு சம்பவங்களினால் சமாதான பேச்சுக்கள் இடைநிறுத்தப்படக்கூடாது எனத் தான் நம்புவதாகவும் தொலைக்காட்சியில நாட்டுமக்களுக்கு ஆற்றிய உரையின் போது கூறியிருந்தார்.

இக்குண்டுத் தாக்குதலினால் சமாதானப் பேச்சுக்களுக்கு எதுவித பாதிப்பும் ஏற்படும் எனத் தான் எதிர்பார்க்கவில்லை எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தமை வரவேற்கத்தக்க விடயமாகும்.

அண்மைக்காலமாக நடைபெற்றுவரும் பல்வேறு சம்பவங்கள் சமாதானம் என்ற கதவில் பலத்த அடிவிழும் வகையிலேயே அமைந்துவிட்டன. அதில் இந்தக் குண்டுத்தாக்குதலும் இணைந்துவிடவே, சமாதானம் சீர்குலையக் கூடாது என்ற விருப்பமும், சமாதானம் குலைக்கப்பட்டுவிடுமோ என்ற சந்தேகமும் பலரின் மனங்களில் எழுந்து நிற்கின்றது.

**திடமான முடிவே தீர்வாகும்**

இந்நிலையில் ஸ்ரீலங்கா அரசாங்கம் முக்கிய முடிவுகளை எடுக்கவேண்டிய கடப்பாட்டில் உள்ளது. புரிந்துணர்வு ஒப்பந்தம் சீர்குலையாமல் இருக்க சமாதானத்தின் மீது ஆர்வம் காட்டவேண்டிய மிகப்பெரிய பொறுப்பு அரசின் மீதுள்ளது.

சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு சர்வதேச சமூகம் இருதரப்பின் மீதும் அழுத்தங்களைக் கொடுக்கவேண்டியது முக்கியமான்தாகும். ஏற்கனவே சமாதான முயற்சிகளில் முக்கிய பங்கினை ஏற்ற நோர்வே, அமெரிக்கா, இந்தியா, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் போன்றன ஸ்ரீலங்கா அரசு யுத்த நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை சரியான முறையில் கடைப்பிடிக்கின்றதா என்பதை அவதானிக்கவேண்டும்.

அதேவேளை கொழும்பில் ஏற்படும் அரசியல் மாற்றங்கள் சமாதானப் பேச்சுக்களை இடைநிறுத்தாமல அவதானிக்கவேண்டிய பொறுப்பும் சர்வதேச சமூகத்தின் மீதுள்ளது.

கருணாவின் விவகாரம், அதனோடு இணைந்த கிழக்கு மாகாணத்தின் சம்பவங்கள், கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல் போன்றன சமாதானத்தின் மீது பெரும் அழுத்தங்களை கொடுத்துளளது. இந்நிலையில் செயல்முறை மாத்திரமே இலங்கைத்தீவின் தலைவிதியை தீர்மானிககும்.

*நன்றி தமிழ்நாதம்*

## ஆலடி மாநாடு

*(02ஆம் பக்கத் தொடர்ச்சி....)*

ஆக, இவர்களுடைய இச்செயற்பாட்டை விளக்கி எனது பரீட்சைப் பெறுபேறு மூதவை உறுதிசெய்வதற்கு முன்னர் பூரண விசாரணை நடத்துமாறு பேரவைக்கு நேரடியாக மனுச்செய்தேன். அவர்களிடமிருந்து எதுவித பதிலுமில்லை. அத்துடன் 6.11.2003 ஒரு கலந்துரையாடல் ஒழுங்குசெய்யப்பட்டது. அதில் எனது பரீட்சை எழுதுதலின் திறன் பற்றி எவராலும் பதிலளிக்கப்படவில்லை. மாறாக நான் மாணவியல்ல என்பதை உறுதிசெய்வதில் குறிக்கோளாகக் கொண்டிருந்தனர். இதனால் துணைவேந்தரிடம் நேரடியாகச் சென்று மூதவையின் பதிலைத் தருமாறு கோரினோம். மருத்துவபீட நிர்வாகத்தின் மேல் நடவடிக்கை மேற்கொள்ள முடியாதுள்ளது எனத் தனது இயலாமை பற்றிக் குறிப்பிட்டிக்கொண்டிருந்ததால் அவர்களின் இறுதி முடிவு எதுவாயினும் எழுத்துருவில் தருமாறு வற்புறுத்தியதைத் தொடர்ந்து தங்களால் எனது வேண்டுகோள் பரிசீலிக்க முடியாதுள்ளது என எழுத்துருவில் தரப்பட்டதையடுத்து உடனடியாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிடப்பட்டது. எனது முறைப்பாட்டின் ஒரு பகுதி விசாரணைக்குட்படுத்தப்பட்டபோதே மருத்துவபீட நிர்வாகத்தின் பல பொய்கள், ஒழிப்பு மறைப்புகள் எனது முன்னிலையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் நான் இன்றுவரை மருத்துவபீட மாணவிக்குரிய உரிமையைக் கொண்டிருப்பது உறுதிப்படுத்தப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டு மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் அறிக்கை தரப்பட்டுள்ளது. ஆனால் நான் 2001ஆம் ஆண்டிலிருந்து மருத்துவபீட மாணவியல்ல. 2001ஆம் ஆண்டுவரை நூலகம் பாவிக்கும் உரிமை இருந்ததாக எழுத்து மூலமான அறிக்கை விசாரணைக்கு முன்னர் பல்கலைக்கழக நிர்வாகத்தால் அனுப்பிவைககப்பட்டதுடன், நிர்வாகச் செயற்பாடுகளில் விதிமுறை கூட மறைக்கப்பட்டது.

இப்படியான மருத்துவபீட நிர்வாகத்தின் அதிகார வெறியினாலும் பல்கலைக்கழக நிர்வாகத்தின் பொறுப்பற்ற செயற்பாட்டினாலும் என்னுடைய பெறுமதியான காலத்தை வீணாக்கியதோடு மட்டுமல்லாமல் எனது உணர்வுகளை இழிவுபடுத்தி எனது எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கியது மட்டுமல்லாமல் என்னைச் சூழவுள்ளவர்களின முன்னேற்றத்திலும் ஒருதடை உருவாக்கப்பட்டது. ஆகவே நான 2001ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை மருத்துவபீட மாணவியாக இருப்பது உறுதிசெய்து அறிக்கை தரப்பட்ட நிலையிலும் இதுவரை காலமும் இறுதியாக எழுதப்பட்ட பரீட்சையின் பெறுபேறு பற்றிய விசாரணை எவராலும் மேற்கொள்ளப்படாமலும் மருத்துவபீட நிர்வாகம் தாங்களாகவே முன்வந்து இதை வெளிப்படுத்தாத நிலையும் பரீட்சை பெறுபேறில் நான் பழி வாங்கப்பட்டது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவை பற்றி ஏற்கனவே பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அறிவித்துள்ளேன. ஆகவே எனக்கு நியாயபு,ர்வமான தீர்வு உடனடியாகக் கிடைப்பதற்கு உண்ணாவிரதப் போராட்டதை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளேன். எனக்குரிய நியாயபு,ர்வமான தீர்வு கிடைப்பதற்காக எனது போராட்டத்திற்கு தங்களது பு,ரண ஆதரவை வழங்குமாறு தங்களை பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன.

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,
பாதிக்கப்பட்ட மாணவி,
கி.புஸ்பமாலா.

"மாணவியின்ர போராட்டத்திற்கு பல்கலைக்கழக நிர்வாகம் என்ன பதில் சொல்லுது?" மாநாட்டில் அமைதியாக இருந்த டாக்குத்தர் கேட்க,

பண்டிதர் மேலும் ஒரு கடிதத்தை எடுத்து வாசித்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழம், இலங்கை.
07-07-2004
செல்வி புஸ்பமாலா கிருஷ்ணன்,
95/FM/19.

தங்களது கோரிக்கைகள் சார்பாக பின்வரும் பதிலை அனுப்பிவைக்கின்றேன்.

* யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட சட்டதிட்டங்களுக்கு அமைய ஒரு மருத்துவபீட மாணவருக்கு இரண்டாம் வருட மருத்துவமாணிப் பரீட்சையில் தோற்றுவதற்கு 04 தடவைகளும், இறுதிச் சந்தர்ப்பமாக மற்றுமோர் தடவையும் வழங்கப்பட்ட பின்னர் அவரது மாணவர் தகுதநிலை (Studentship) தானாகவே நீங்கிவிடும். மனித உரிமைகள் ஆணைககுழுவின் 14.05.2004 திகதியிடப்பட்ட கடிதத்தின் பந்தி 01இல் தாங்கள் நவம்பர் மாதம் 1999ஆம் ஆண்டுப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கவில்லை என்றும், தாங்கள் அக்காலப் பகுதியில் இந்தியா சென்றிருந்ததாகவும் குறிப்பிடப்பட்டிருப்பது தவறான கூற்றாகும். தாங்கள் இப்பரீட்சைக்கு 06.11.1999இல் விண்ணப்பித்துள்ளீர்கள் என்பதனை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். இவ்விடயம் பற்றி மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

* மருத்துவபீட அதிகாரிகளினால் எச்சந்தர்ப்பத்திலும் தங்களுக்கு மாணவர் என்ற ரீதியிலான எச்சலுகையும் மறுக்கப்படவில்லை.

* பல்கலைக்கழகங்களில் பரீட்சைப் பெறுபேறுகள் மீள்பரிசீலினை செய்யப்படுவதில்லை. எனினும் தங்களுக்கு என்னால 06.07.2004 திகதியிடப்பட்டு தரப்பட்ட கடிதத்தில் பதில் தரப்பட்டுள்ளது.

* தங்களது நட்டஈடு தொடர்பான கோரிக்கைக்கு ஏற்கனவே மருத்துவபீட மாணவர் ஒன்றியத்தினால் மாணவர்கள் முன்னிலையில் திருப்திகரமான பதில் தரப்படடு தங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

* துணைவேந்தரால் வேறு பல்கலைக்கழகத்தில் கல்வியைத் தொடர்வதற்கு சிபார்சு கடிதம் தரப்படும் என உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.

துணைவேந்தர்
பிரதி: மருத்துவ பீடாதிபதி.

பண்டிதர் கடிதத்தை வாசித்து முடிக்கவும் ஆலடி வைரவருக்கு பூசை மணி அடிக்கவும் கணக்காக இருந்தது.

மணி அடிக்க "அரோஹரா! வைரவரே! எங்களைக் காப்பாற்று" எனக் கங்காணி கார்த்திகேசன் உச்சியில் கை வைக்க மாநாட்டில் இருநதவர்கள் எழுந்து கோயிலுக்குப் போகலாயினர்.

**ஆதித்தன்**

# ஒலிம்பிக் கடந்து வந்த பாதையை திரும்பிப் பார்க்கையில்...




16ஆம், 17ஆம், 18ஆம், ஒலிம்பிக் போட்டிகளுக்காக வடிவமைக்கப்பட்ட சுவரொட்டிகள்.

**16வது ஒலிம்பிக் போட்டி மெல்போர்ன் (MELBOURNE) 1956**

1956ஆம் ஆண்டில் நடைபெற்ற 16ஆவது ஒலிம்பிக் போட்டிகள் ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் நடைபெற்றன. உலகின் தெற்குப்பிராந்தியத்தில் நடைபெற்ற முதலாவது ஒலிம்பிக் போட்டி என்ற பெருமை இந்த ஒலிம்பிக் போட்டிக்குக் கிடைத்தது. ஆனால் போக்குவரத்து வசதியீனங்களையும், தூரத்தையும் காரணங்காடடி பல நாடுகள் இதில் கலந்துகொள்ளவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

1956ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 22ஆம் திகதி நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியின் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய அப்போதைய ஆஸ்



17ஆவது ஒலிம்பிக் போட்டியில் வெற்றிபெற்ற வீரர்களுக்கு வழங்கப் பட்ட தங்கப் பதக்கம்.

ரேலிய ஜனாதிபதி GIOVANNI GRONCHI 16ஆவது ஒலிம்பிக் போட்டியினை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துவைத்தார். அத்துடன் ஒலிம்பிக் தீபத்தினை தடகள வீரரான GRANCARLO PERIS ஏற்றிவைத்தார். சத்தியப் பிரமாணத்தை(OLIMPIC OATH) நடகள வீரரான ADOLFO CON SOLINI என்பவர் செய்து வைத்தார்.

இதேவேளை, 1956ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 22ஆம் திகதி ஆரம்பித்த இவ் ஒலிம்பிக் போட்டிகள் டிசம்பர் மாதம் 8ஆம் திகதிவரை நடைபெற்றன. இப் போட்டிகளில 145 போட்டி நிகழ்வுகளுககாக 72 நாடுகளைச் சேர்ந்த, 376 பெண்களும் 2938 ஆண்





மெல்போர்ன், றோம், டோக்கியோ ஆகிய இடங்களில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளின் இலட்சினைகள் (EMBLEM).

களுமாக 3314 போட்டியாளர்கள் பங்குபற்றினர்.

இந்த ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்ற காலப்பகுதியில் ஆஸ்திரேலியாவில மிருகங்களிடையே தொற்றுநோய் பரவியதால் குதிரைப்பந்தயப் போட்டிகள் ஸ்டொக்ஹோம் (STOCK HOLM) நகரில் ஜுன் மாதம் நடைபெற்றன.

இவ்வாண்டு ஒலிம்பிக் போட்டியில் குத்துச்சண்டைப் போட்டியைப பொறுத்தவரை ஹங்கேரி (HUNGARY) நாடடைச் சோந்த LASZLO PAPNO என்பவா மூன்று தங்கப்பதக்கங்களை வெனறதன் மூலம் இப்போட்டியில் மூனறு தங்கப்பதக்கங்களை



மெல்போர்னில் 22 நவம்பர் 1956இல் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியின் ஆரம்ப நிகழ்வில் ஒலிம் பிக் தீபம் ஏற்றிவைக்கப் பட்டிருந்த காட்சி.

வென்ற முதல் வீரர் என்ற பெருமையைப் பெற்றார்.

இதேவேளை சோவியத் யூனியனைச் சேர்ந்த விலாடிமிர் குட்ஸ் 5000 மீறறா் மற்றும் 10000 மீற்றர் போட்டிகளில் முதலிடத்தைப பெற்றார். 1952ஆம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக்போட்டிகளில் இந்த இரண்டு போட்டிகள் உட்பட மரதன போட்டியிலும் முதலிடம் பெற்ற உலக சாதனை வீரர் ZATOPEK இவ்வாண்டு மரதன் போட்டிகளில் ஆறாவது இடத்திற்கு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.


இவ்வாண்டின் ஒலிம்பிக் போட்டிகளில் அமெரிக்கக் கூடைபந்தாடடக குழு (U.S. BASKET BALL TEAM) மிகத் திறமையாக விளையாடி சம்பியன் பட்டத்தைத் தட்டிக்கொண்டது. இதற்கு முக்கிய காரணமானவர்களாக BILL RUSSELL மற்றும் K.C. JONES இருவரையும் குறிப்பிடலாம்.

அக்காலப்பகுதியில் கூட விளையாட்டுப் போட்டிகளில அரசியலும் கலந்து சர்ச்சையைத் தோற்றுவித்திருந்தது. ஹங்கேரிக்கும சோவியத் யூனியனுககும் இடையில் இடம்பெற்ற WATER POLO போட்டிகளில் இரு அணி வீரர்களும் உணர்ச்சிகரமாக தத்தமது நாடுகளின் அரசியலைப் பற்றி பேசப்போய் இறுதியில் அது கைகலப்பாக மாறியது. இதன் காரணமாக இந்த இருநாடுகளிடையேயான போட்டி இரத்துச் செய்யப்பட்டது.

1956ஆம் ஆண்டு நடைபெற்ற போட்டிகளில் 37 தங்கம், 29 வெள்ளி, 32 வெண்கலம் உட்பட 98 பதககங்களைப் பெற்று சோவியத்யூனியன் பதக்கப்பட்டியலில் முதலிடத்தைப் பெற்றது. அமெரிக்கா 74 பதக்கங்களைப் பெற்று இரண்டாம் இடத்தைப் பெற்றது. இதேவேளை போட்டியினை நடாத்திய ஆஸ்திரேலியா 13 தங்கம், 08 வெள்ளி, 14 வெண்கலம் உட்பட 35 பதக்கங்களைப் பெற்று மூன்றாம் இடத்தைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

**17வது ஒலிம்பிக் போட்டி றோம் (ROME) 1960**

17ஆவது ஒலிம்பிக் போட்டிகளை தனது நாட்டில் நடத்தியதன் மூலம் 54வருட போராட்டத்திற்குப் பிறகு தனது நாட்டில ஒலிம்பிக் போட்டியை நடா



1956, 1960, 1964ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் ஒலிம்பிக தீபம் ஏற்றுவதற்காக பயன்படுத்தப்பட்ட விளக்குகள் (TORCH).

த்திய பெருமையைப் பெற்றது இத்தாலி.

1960ஆம் ஆண்டின் ஒலிம்பிக் போட்டியினை சீமான் EDINBURGH என்பவர் உத்தியோகபர்வமாக ஆரம்பித்து வைத்தார். அத்துடன் ஒலிம்பிக் ஜோதியினை தடகள வீரரான RON CLARKE என்பவர் ஏற்றிவைத்தார். ஒலிம்பிக சத்தியப்பிரமாணத்தைத் தடகளவீரரான JOHN LANDY எனபவா செய்துவைததா.

இவ்வாண்டு நடைபெற்ற ஒலிம்பிக்போட்டிகள் ஆகஸ்ட் மாதம் 25ஆம் திகதி ஆரம்பித்து செப்ரெம்பர் 11ஆம் திகதி வரை நடைபெற்றன. அத்துடன் 150 போட்டி நிகழ்வுகளுக்காக 83 நாடுகளைச சேர்ந்த 611 பெண்கள், 4727 ஆண்களுமாக 5338 போட்டியாளர்கள் பங்குபற்றினர். 1960இல நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளுக்கு இன்னோர் பெருமையும் உண்டு. அதாவது 1960ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளே முதன் முதலாக உலகம் முழுவதும் உள்ள தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்பட்டன.

போட்டிகளின் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்ட சுமார் 1இலட்சம் பார்வையாளர்களை நேரடியாக உலகம் முழுவதும் காட்டிய பெருமையை இத்தாலித் தொலைக்காட்சிச் சேவை நிலைநிறுத்திக்கொண்டது.

குத்துச்சண்டை மூலம் உலகப் புகழ்பெற்ற முகம்மது அலி என்ற கெசியஸ் கிலே (CASSI US CLAY) இவ்வாண்டு போட்டிகளில் முதன் முதல் பதக்கம் வென்றார். அமெரிக்கக் கறுப்பினத்தவரான இவர் பின்னா இஸ்லாமிய மதத்தைத் தழுவி முகம்மது அலியாக மாறினார்.

இதைவிட முக்கியமாகக் கூறப்படவேண்டிய இன்னொருநபர் அமெரிக்கக் கறுப்பின வீராங்கனை விலமா ரூடல்(WILMA RUDOLPH) ஆவார். சிறுவயதில் போலியோ மற்றும் நிமோனியாவால் பாதிக்கப்பட்ட இவர் ஒலிம்பிக் போட்டிகளில உலக சாதனைகள் படைத்தவர். 1956 ஆம் ஆண்டு ஒலிம்பிக்கில் தனது பதினாறாவது வயதில் 4x100m அஞ்சல் ஓட்டப் போட்டியில் வெண்கலப்பதக்கம் வென்றார். நான்கு வருடங்களுக்குப் பிறகு றோமில் இடம்பெற்ற 100m, 200m, 4x100m போட்டிகளில் தங்கப்பதக்கம் வென்று உலக சாதனையை நிலைநாட்டினார்.

இவரின் மனத்துணிவையும் திறமையையும், சாதனைகளையும் வர்ணித்த ஐரோப்பியர் இவரை "THE BLACK GAZELLE" என்று செல்லமாக அழைத்தனா். முதன்முதலில் 3 தங்கப்பதக்கங்களை ஒரே ஒலிம்பிக் போட்டியில் வென்ற அமெரிக்கப் பெண் என்ற பெருமையும் இவருக்கு உண்டு.

எதியோப்பியாவின் ADEB BIKILA வெறுங்கால்களில் மரதன் ஓட்டப்போட்டியில் ஓடி முதலிடம் பெற்று அனைவரையும் வியப்புக்குள்ளாக்கினார்.


1960ஆம் ஆண்டு ஒலிம்பிக்போட்டியில் சோவியத் யு,னியன் 49தஙகம,29 வெள்ளி, 31 வெண்கலம் உடபட மொத்தமாக 103 பதக்கங்களைப் பெற்று பதக்கப்பட்டியலில் முதலிடத்தைப் பெற்றது. அத்துடன் போட்டிகளை நடத்திய இததாலி 13 தங்கம், 10வெள்ளி, 13 வெண்கலம் உட்பட மொத்தமாக 36 பதக்கங்களைப் பெற்று பதக்கப்பட்டியலில் நானகாம இடத்தைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

**18வது ஒலிம்பிக போட்டி ரோக்கியோ (TOKYO) 1964**

முதன்முதல் ஆசியப் பிராந்தியத்தில் ஒலிம்பிக் போட்டியை நடாத்திய பெருமையை ஜப்பான் பெற்றுக்கொண்டது.

இரண்டாம் உலகமகா யுத்தத்திற்குப் (WORLD WAR II) பிறகு சர்வதேச ரீதியாக ஒலிம்பிக் போட்டியை நடத்துமளவிற்கு முன்னேறிய ஜப்பானைக் கண்டு அனைவரும் வியந்தனர். 2ஆம் உலக மகாயுத்த காலத்திலே அமெரிக்கா ஜப்பானின் ஹிரோசிமா, நாகசாகி ஆகிய நகரங்களின் மீது அணுகுண்டை வீசியதால் பாரிய அழிவுகளையும் பொருளாதாரப் பின்னடைவையும கொண்டிருந்த ஜப்பானின் திடீர் எழுச்சி அனைவரையும் ஆச்சரியப் படுத்தியது.

இவ்வாண்டு ஒலிம்பிக் போட்டியினை அப்போதைய ஜப்பானின் சக்கரவர்த்தி (EMPEROR HIROHITO) உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துவைத்தார். ஒலிம்பிக் தீபத்தினை ஹிரோசிமாவில் 1945ஆம் ஆண்டு அமெரிக்கா அணுகுண்டு வீசியபோது உயிர்



1964ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டி நடைபெற்ற KOMAZAWA விளையாட்டு மைதானம்.

தப்பிய பாடசாலை மாணவனான YO SHINORISAKAI எனபவர் ஏற்றிவ்வைத்தார். இதேவேளை ஒலிம்பிக் சத்தியப் பிரமாணத்தை ஜிம்னாஸ்ரிக் வீரரான TAKASHIONO என்பவர் செய்துவைத்தார்.

கரப்பந்தாட்டம், ஜுடோ என்பன இவ்வாண்டுப் போட்டிகளிலேயே அறிமுகப்படுத்தப்பட்டன.

**நேரயல்**

1964ஆம் ஆண்டு நடைபெற்ற இந்த ஒலிம்பிக் போட்டியில் 163 போட்டி நிகழ்வுகளுக்காக 93 நாடுகளைச் சேர்ந்த 678 பெண்கள், 4473 ஆண்களுமாக 5151 போட்டியாளர்கள் பங்குபற்றினர். இவ் ஒலிம்பிக் போட்டிகள் ஒக்டோபர் 10ஆம் திகதி ஆரம்பித்து ஒக்டோபர் 24ஆம் திக்திவரை நடைபெற்றன. அதாவது இந்த ஒலிம்பிக் போட்டிகள் இரண்டு வாரங்கள் மாத்திரமே நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

(18ஆம் பக்கம் பார்க்க...)

**வியா அண்ணே! இப்போதைய காலத்தில் நியாயமா, அநியாயமா தலைதூக்கி நிற்கின்றது?**

*கோவலன் தென்புலோலி.*

வணக்கம் வியா!

வெண்ணெய் திரண்டு வருகையில் தாழி உடைந்தால் என்ன செய்வது?

**கண்ணகியைச் சந்திக்க வந்த கோவலனுக்கு ஏற்பட்ட கதியல்லவா இது.**

*நந்தன் புலோலியூர்.*

வியா!


விபத்துத் தடுப்பு சாரதிகள் வாரத்திலும் விபத்து நடக்கிறதே. என்ன செய்யலாம்?

**விபத்தைத் தடுக்கவும் வாரமா? சிரிப்பாக இருக்கிறது. விபத்து ஒவ்வொரு நாளும் தடுக்கப்பட வேண்டிய ஒன்று.**

*ம.கேதானுஷன் மூளாய்.*

வியா அண்ணே!

நண்பனின் காதலியை நானும் காதலிக்கிறேன். இருவரில் யார் மணந்து கொள்வது நல்லது?



**தம்பி கேதானுஷன்! உமது கேள்விக்குப் பதில் தரலாம். ஆனால் மூன்றாவது காதலன் இருந்தால் எனக்கு ஆபத்தாகிவிடுமே.**

*இ.பிரதீபன் கொடிகாமம்*

வியாசரே!

தாய்க்குப் பின் தாரம். தாரத்துக்குப் பின் யார்?



**தம்பி பிரதீபா! தாரத்தின் கசக்கிப் பிழிவால் ஆளிருக்காதே.**

**Dear vija sir! யாழ். நகரில் நீச்சல்குளம் கட்டினால் எப்படி இருக்கும்?**

*S.லூசி உடுப்பிட்டி.*

வியா!

யாழ். பஸ் நிலையத்தில் பல சிறுவர்கள் உணவிற்காக பிரயாணிகளிடம் கையேந்துகிறார்களே. இவர்களை ஏன் சிறுவர் பாதுகாப்பு நிதியங்கள் கவனிப்பதில்லை?

**கவனித்தால் நிதியம் செலவாகிவிடுமே....,**
**.....சிறுவர்களுக்காக...?**

*V.N.குமார் பருத்தியூர்.*

வணக்கம் வியா !

வாகனங்களை. பரிசோதிப்பது போல் சில யாழ்ப்பாண மனிதர்களையும் பரிசோதித்தால் என்ன நடக்கும்?

**வாழ்க்கையில் அடித்த "எட்டுகள்" எல்லாம் வெளிப்படும்.**

*த.கவியரசன் தரிப்பூர்.*

வியாசரே!

சுறுசுறுப்பாக இருக்க என்ன செய்யவேண்டும்?

**ஒரு பனைக் கள்ளுக் குடிக்கவேண்டும்.**

*N.அபிராமி மூளாய்.*

வியா சேர்!

காதல் எப்போது கசக்கும்?

**திருமணத்தின் போது.**

# வியாசர் பதில்கள்

*பா.சிறிமோகன் பொறப்பதி.*

பிரியமுடன் வியா அணணா!

வாழ்வில் நினைப்பதெல்லாம் நடநதால் எப்படியிருக்கும்?

**தெய்வீகம் உயிரிழந்துவிடும்.**

*J.J.லதா ஏழாலை.*

Dear vija sir!

யாழ்.நகரில் நீச்சல் குளம் கட்டினால் எப்படி இருக்கும்?

**கஜுர்னா, வெள்ளக் கடற்கரை படும்பாடு போதாதா?**

*பொ.சசி தரிப்பூர்.*

வியா !

நண்பன் எதிரியாக மாறும் போது என்ன நடக்கும்?

**நண்பனின் எதிரி உம்மோடு சேர்ந்துகொள்ளுவான்.**

*இ.தவசீலன் பொறப்பதி.*

வியாசர் அண்ணா!

ஒரு ஆண் அதிகமாக அன்பு வைப்பது தாய் தந்தையிடமா அல்லது காதலியிடமா?

**இதென்ன கேள்வி காதலியிடம்தான்.**

*S.சுதன் யாழ்ப்பாணம்.*

டியர் வியாசர் !

காதல் என்பது பூந்தோட்டமா? போராட்டமா?

**பூந்தோட்டத்தில் வண்டிற்கும் மலருக்கும் நடக்கின்ற (மகரந்தச் சேர்கைப்) போராட்டம்.**

*S.விதுஷன் வண்ணையூர்*

வியா அங்கிள்!

பிறர் ஆசைப்படும் பொருளுக்கு நாமும் ஆசைப் படலாமா?

**அட! உமக்கும் தொட்டிட்டுதா வியாதி.**

*S.நிகேதினி யாழ்நகர்.*

வியா மாமா!

மாமியார் - மருமகள் சண்டை நடக்கும்போது கணவர் எந்தப் பக்கம் நிற்பது நல்லது?



**கல்லெறி படாத பக்கம் நிற்பதே நல்லது.**

*K.J.J திலீபன் குப்பிளான்.*

வியாசரே!

இன்பத்திலும் ஒரு துன்பம் வரும் என்கிறார்களே. அது சரியா?



**இருக்கும்... இருக்கும். மதுபோதையில் சிலர் அழுகிறார்களே!**

*க.மலர்விழி சுன்னாகம்*

வியா ஆசிரியரே!

11ஆம் வகுப்புத் தேர்வு எழுதப்போகிறேன். கரை ஏற ஒருவழி சொல்லுங்களேன்?

**நல்ல குதிரையாகப் பார்த்து ஓடுவதுதான் கரையேற ஒரே வழி.**

*பா.சிறிமோகன் பொறப்பதி.*

வியா அண்ணே!

இப்போதைய காலத்தில் நியாயமா, அநியாயமா தலைதூக்கி நிற்கின்றது?

**சித்திரகுப்தனாரிடம் கேட்கவேண்டிய கேள்விஇது.**

*S.தர்ஷிகா கொக்குவில்.*

வியாசரே!

அதிகம் கோபப்படும் ஆண்கள் குறித்து...?

**பெண்களால் பாதிக்கப்பட்டவர்களாக இருக்கலாம்.**

**வணக்கம்வியா! வெண்ணெய் திரண்டு வருகையில் தாழி உடைந்தால் என்ன செய்வது?**

# வாசகர் பதில்கள் இல — 16

## காதலித்த பெண்ணை ஏமாற்றும் ஆண்களை என்ன செய்யலாம்? அவர்களுக்குச் சொல்லக்கூடிய விசையுள்ள வசைக்கவி ஒன்று தாருங்கள்...

மரத்துக்கு மரந்தாவி
மாங்கனியை எச்சில்படுத்தி
விட்டு புளித்துவிட்டது
சீ போ என்று கூறி,
மலர்கள் பலவிடத்து
தேனைப் பருகிவிட்டு
சிட்டாகப் பறந்திடும்
கருவண்டே!
உனக்கொரு நிலையான
வேலை வெட்டியுண்டா?
அரும்பு மசையும் அழகான
ஜீன்சும் கத்தரித்தோட்டத்து
வெருளிபோல்
காத்துக்கிடக்கிறாயே
கன்னியரின் கடைக்கண்
பார்வைக்காக!

கந்த. ஞானமுத்து, கைதடி.

**சாக்கடையில் விழுந்த காற்று சந்தன வாசத்தோடவா திரும்பிப் போகும்.**

*எம். எஸ். எஸ். ராஜ்குமார், மானிப்பாய்.*

**தூக்குத் தண்டனை கொடுக்க வேண்டும்.**
**'கேடுகெட்ட ஆடவனே**
**கேளடா........!**
**பெண் பாவமுன்னை**
**ஒருபோதும் உய்யவிடா**
**ஏமாற்றிய காதலுக்காய்**
**நலிவுற்று வலுவிழந்து**
**நாசமாய் போகக்கட!'**

**ஜெ.சுபாஷினி.**

காதலித்த காரிகையை ஏமாற்றும் கயவர் தம்மை
பேதலித்து மனம் பின்னப் பட்டுழலும் வண்ணம்
மூதலித்து அறமன்றின் துணை கொண்டு முக்கானும்
சீதலித்த சிவில் உரிமை ரத்தாக்கிச் சிறப்பொழித்து
மாநிலத்து அரச வர்த்தகமானிதனில் அதனை விளம்பரித்து
நானிலத்தோர் கண்டு அவன் நாணித் தலைகுனிய
வைத்தல் வேண்டும்

N.அபிராமி,
மூளாய்.

பெண்ணை
ஆட்டிப்படைக்கலாம் என்று
தப்பெண்ணம் போடும்
ஆடவரே!
கொட்டம் அடக்கிடுவோம்
ஜாக்கிரதை!

*சுபா நல்லூர்.*

காதலித்த பெண்ணை ஐஸ் வேண்டித் தரமாட்டேன் என்றா, அல்லது ஆடை ஆபரணம் வேண்டித் தரமாட்டேனென்றா, அல்லது திருமணம் செய்யமாட்டேனென்றா, ஏமாற்றுகின்றான் என்பதனை முதலில் சொல்லும்.

அதன்பின்னர் விசையுள்ள வசைக்க(ரு)வி தருகின்றேன்.

நியாயவாதி.

**கண்ணைச் சிமிட்டி பல்லை இளித்து, கண்ணே! மணியே! என்று காதல்மொழி பேசினாயே! மோகம் முப்பது நாள் ஆசை அறுபதுநாள் என பதை நிரூபிப்பது போல், யாரையடா ஏமாற்றினாய்? உனக்கோர் தீர்வுண்டு.**

**க. அ. மலர், யாழ்நகர்.**

உன்னையே கரம் பிடிப்பேன்
இறுதிவரை உடனிருப்பேன்
என்று கூறினாய்
இன்று-இன்னொருத்தியை
கரம் பிடித்துவிட்டாய்
அடேய் ....இன்றுன்னைக்
கரம்பிடித்தவள் நாளை
இன்னொருவனுடன் ஓடினால்
நீயென்ன செய்வாய்?

(போதுமா மேனகா... உடனே ஓடிப்போய் உம்மை ஏமாற்றியவன் முன்னே நின்று இக்கவிதையை உரத்துச் சொல்லும் உமது ஆத்திரம் தீரும் வரை.)

புதுக்கவி

# வாசகர் பதில் இல - 18

## பிஞ்சிலே பழுக்கும் சிறுவர்களைத் திருத்த ஒரு வழி கூறுங்கள்.

**இக்கேள்வியை அனுப்பிய சங்குநாத வாசகி S.சந்திரகாந்தி, வேலணை.**

**உங்கள் பதில்கள் எமக்குக் கிடைக்கவேண்டிய இறுதித் திகதி 17 - 07 - 2004.**

**உங்கள் பதில்கள் வந்துசேரவேண்டிய முகவரி:-**

**'வாசகர் பதில்'**
**சங்குநாதம்**
**இல- 15, வெள்ளாந்தெரு,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

# தமிழில் ஒழுகும் அழகு

தமிழ் அமிழ்தோடொத்த நல்ல மெல்லிய மொழியாகும். அதன் கண்ணுள்ள இலக்கியங்களின் இனிமையால் மாத்திரம் அது அமிழ்தாக வில்லை. அம்மொழியின் பெயரில் அமைந்துள்ள எழுத்துக்களாலும் அது அத்தன்மை பெற்றுள்ளது.

தமிழ் என்ற சொல்லில் வரும் 'ழ்' என்பது இடையின எழுத்தாயினும் தமிழுக்கு அமிழ்தச் சுவை கொடுப்பதில் அவ்வெழுத்து மிகுதியான பங்கு பெற்றுள்ளது. இடையின எழுத்துக்களாகிய ய,ர,ல,வ,ழ,ள என்ற ஆறினையும் தனித்தனியே உச்சரிக்கும்போது 'ழ' மட்டும் ஏனைய ஐந்திலும் பார்க்க மிக மென்மைத்தன்மை வாய்ந்திருப்பது செவியினால் உணரப்படும். மெல்லெழுத்தொன்று தவறி இடையினத்திலே சேர்ந்துவிட்டதோ என அது நம்மை எண்ணச் செய்கிறது. 'ழ'வின் மென்மைத் தன்மையை திருக்கோவையெனும் தீந்தமிழ் இலக்கியத்தில் வரும்

''யாழு மெழுதி யெழிதின்முத் தெழுதி
யிருளின் மென்பூச்
சூழு மெழுதியொர் தொண்டையுந் தீட்டி
யென் றொள்பிறவி
யேழு மெழுதா வகைசிதைத் தோன்புலி
யூரிளமாம்
போலுமெழுதிற்றொர் கொம்பருண்டேற்
கொண்டு போது கபே''

என்ற ழகரம் பயின்றுவரும் சொற்கள் மூலம் இலகுவில் உணரலாம்.

இங்ஙனம் நம் தாய்மொழியை உணர்த்தும் பதத்தில் (தமிழ் என்பதன்) அமைந்துள்ள அமிழ்துறழ் தன்மையினாலேயே பாரதியார் 'செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே' என்று அதன் மென்மைத் தன்மையை எல்லோரும் எளிதில் உணருமாறு எளிமையாகக் கூறியுள்ளார்.

தமிழ் என்ற பதத்தில் வரும் 'மி' என்பதன் மென்மை யாவரும் அறிந்ததே மூக்கிலிருந்து அது பிறந்ததிலிருந்தே அதன் மென்மையை யாவரும் அறிவர். 'த' வல்லினமாயினும் இயற்கையாக வாயைத் திறக்கும் போதே எழுந்தொலிக்கும் அவசரத்தோடு வருவதாலும் மகர ழகரங்களாகிய மெல்லோசையையுடைய எழுத்துக்கள் தன்பின் வர, தான் வருவதாலும் நோய்க்கு மருந்துண்பாருக்கு அந்த மருந்தோடு சேர்த்துண்ணும் பானமாக அமையும் தேனின் குழைவு 'தமிழ்' என்னும் பதத்திற்கு உண்டாகிறது.

டகரம் தமிழ்மொழியிலே க[illegible]ர ஒலிதரும் வல்லெழுத்து. உலக[illegible] அழியும் காலத்திலும் நெஞ்சம் சிற[illegible]தும் அஞ்சாத தலை மகனைத் த[illegible] இடையின் மென்தன்மையால் நடுங்கச் செய்கிறாள் தலைமகள் என்பதனை டகர ஒலி மூலம் திருக்கோவைச் செய்யுட் பகுதி எடுத்தியம்புகிறது. அப்பகுதி :

''நடுங்கா தவனை நடுங்க நுடங்கும்
நடுவுடைய
விடங்கா லயிற்கண்ணி...''

என்பதாகும். தமிழிலே ஒரு ஆண்டகையையே நடுங்குறச் செய்யும் பகுதியின் பயங்கரத்தைக் குறைத், துக்காட்ட புலவர் முன்வருகிறார் போலும். அதனாற்தான் மேலும் பாவின் முதலாம் அடியை உலக அழிவை ''கொடுங்கால் குலவரை யேழேழ் பொழிலெழில் குன்று மன்றும''

என எடுத்தியம்ப வந்தாராயினும் இடையிடையே மெல்லோசை பயக்கும் ழகர லகரங்கள்



கலந்து வரும் பதங்களால் அமைக்கின்றாரோ? ஒருவேளை உலகம் அழியினும் நெஞ்சம் அழியாத் தன்மையன் தலைமகன் என்பதனைக் காட்ட மெல்லோசை பயக்கும் பதங்கள் இடம் பெற்றுமிருக்கலாம்.

மேலே காட்டிய திருக்கோவைச் செய்யுளின் இரு அடிகளையும் முறைப்படுத்தி ஒருசேர உரத்துப் படிக்கும்போது 'ட' கரத்தின் கடுமையால் ழகர ல்கரங்கள் மேலும் மெத்தென்ற தன்மை பெறுவது காதில் விழுகின்றது. இங்கு இடையின எழுத்துக்களில் ழகரத்திற்கு அடுத்தபடி லகரம் மென்மையுடன் ஒலிப்பது சிந்திக்கத்தக்கது.

''தேம லங்கலணி மாமணி மார்பிற்
செம்ம லங்கயல்கள் செங்கம லத்தண்
ப,ம லங்கவெதிர் பாய்வென மாடே
புள்ள லம்புதிரை வெள்வளை வாவித்
தாம லங்குக டடம்பணை சூழுந்
தண்ம ருங்கு தொழு வார்கட மும்மை
மாம லங்களற வீடரு டில்லை
மல்ல லம்பதியி னெல்லை வணங்கி''

இப்பெரியபுராணப் பாடலில் முதல் ஒன்றே கால் அடிகளில் மெல்லெழுத்துக்கள் (மகர லகரங்கள்) இடம்பெற்று லம் லம் லம் என மிருதுவாக ஒலிக்க மூன்றாம் நாலாம் அடிகளிற் பெரும்பாலும் டகரம் மகரத்தோடு சேர்ந்து டம் டம் டம் எனக் கடினமும் விறுவிறுப்பும பொருந்த மிருதங்க ஒலியை எழுப்புவதைப் பாடலை உரத்து வாசித்து உணர்ந்துகொள்ளலாம். இவ்விடத்திலும் முன்காட்டியது போல வன்மை ஓசை செறிந்து டகரம மெல்லெழுத்துக்களின் மென்மையை உயர்த்திக் காட்டுவதை நாம் கேட்டறியலாம்.

தமிழுக்கு இயல்பாக உள்ள குழைவை மெல்லின எழுத்துக்கள் கூடுதலாக வரும் பாடல்கள் புலப்படுத்துவதை நீதியை உணர்த்த எழுந்த திருக்குறளில்

''குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச்சொற் கேளா தவர்''

என்ற குறட்பா மூலம் நாம் அறிகின்றோம.

இந்த ஒன்றே முக்காலடிக் குறள் எத்தனை எத்தனை உயர்தரப் புலவர்களின் உள்ளத்தைக் கவர்ந்ததென்பதை கவிச்சக்கரவர்த்தி கம்பர், தெய்வச் சேக்கிழார் .போன்ற புலவர்களின் பாடல்கள் மூலம் நாமறியலாம்.

''குழலும் யாழுமென் றினையன குழைய
மழலைமென் மொழிகிளிக் கிருந்தளிக்
கின்றமகளிர்''

*–கம்பர்*

''தேம்பொழிந்த சின்மழலை மென்மொழிய
செவ்வழியாழ்''

*–சேக்கிழார்*

''எழுத்தாச்சொல் மழலைததும்பு பசுங்கு
தலைச் சோலைக்கிளி
குழலிசை பழகி முழுப்பிரசத்து.............
மழலையின் முதுரு சொற்கிளி''

*–குமரகுருபரர்*

மேலே காட்டிய பாடலடிகள் குழல் யாழ் என்ற வள்ளுவரின் வடித்தெடுத்த சொற்களின் எதிரொலி போல நம் காதில் விழுகின்றன.

''குழலொலி யாழொலி கூத்தொலி யேத்தொலி
யெங்குங் குழாம்பெருகி
விழவொலி விண்ணள வுஞ்சென்று விம்மிமிகு
திருவா ரூரின்
.................................................''

என்ற திருப்பல்லாண்டு பாடல்களிலேயே ழகர லகரங்களின் ஓசைச் சிறப்பு வெளிவந்து ஒரேகாலத்தில் இனிய குழலிசையையும் யாழொலியையும் திருவிழாவிலே கேட்கும் பல இனிய ஓசைகளையும் நுகரும் உணர்வு நமக்கு ஏற்படுகின்றது.

ஆண்டவனுடைய படத்தையே அடியார்கள் தம் கண்ணிலும் மனத்திரையிலும் பதித்து அவன் திருவடியைத் காணத் துடிப்பதைக் குமரகுருபர முனிவர்,

''கடவு மயிலு மயிலு மொழுகு கருணை
வதன பத்மமுங்
கமல விழியும் விழியும் மனமு மெழுதி
யெழுதி...... அடிகள்
பணியு மடியர்''

எனவரும் அடிகளில் நமக்குக் காண்பிக்கின்றார்.

(கடவும் மயிலும் – தீ செலுத்தும் மயில்; அயிலும் – உனது வேற்படையும்; கமல விழியும் – உனது. தாமரை போன்ற விழியும் (ஆகியவற்றை); விழியும் மனமும் எழுதி – (அவை தரும் அழகின் மிகுதியினாலே) தமது விழியின் கண்ணும் மனத்தின் கண்ணும் பொறித்து வைத்து)

மெல்லோசை பயின்றுவரும் எழுத்துக்களாகிய மகர லகரழகரங்கள் மாத்திரமன்றி அவை கலந்து வரும் பதங்களும் இரட்டித்து வருதலால் ஒழுகோசை மிகுந்து பாட்டே ஓவியமாகி விடுகின்றது.

புலவர்கள் இங்ஙனம் தமிழ் இலக்கியத்திற்குப் பல்வகைச் சிறப்புகள் ஏற்படக் கையாளும் உத்திக்கு இனிய ஓசை பயக்கும் எழுத்துக்களே உறுதுணையாய் உள்ளன.

''.............. சேண். நின்று
இழுமென இழிதரும் அருவிப்
பழமுதிர் சோலை மலைகிழ வோனே''

என இறைவனிடம் அடியார்களை ஆற்றுப்படுத்தும் நக்கீரரென்ற புலவர் பெருமான் திருமுருகாற்றுப் படையிலே தமிழின் விழுமிய ஓசை நயத்தை ஆற்றின் ஒலியோடு சேர்த்து அடியாரை இன்பக்கடலிலே நீந்தச் செய்கிறார். இத்தகைய தமிழினாலே போற்றப்படும்,

'இழுமெ னருவி சொரியு மிமைய முதல்வி
புதல்வன்'

முருகனும் குமரகுருபர சுவாமிகள் வாக்கிலே, 'இழுமென் மொழித் தெளி தமிழின் வடித்திடு நவரசமே' ஆகி நமக்கு இன்பம் அருளுகின்றான். தெய்வமே தமிழின் வசமாயின் தமிழைத் தெய்வத் தமிழ் என்று கூறாது வேறெப்படிக் கூற முடியும்.

அன்பொழுக்குள்ள மெல்லோசைத் தமிழை தெய்வம் தன் அன்பின் மிகுதியினாலே உள்ளத்திருத்தி இதயங்கனியச் செய்து ஆண்டருள்வாராக.



## கோபத்தின் நிறம்

இராமாயணத்தை எழுதிய 'ராமதாஸா' தினமும் ராமாயணத்தை மக்களுக்குப் படித்துக்காட்டுவார். அனுமார் மாறுவேடத்தில் வந்து கேட்பார்.

ஒருமுறை''அனுமார் அசோக வனத்தை அடைந்தார். அங்கு பூத்திருந்த வெண்ணிறமான புஷ்பங்களைப் பார்த்தார்'' என்று ராமதாஸர் படித்தார். அனுமார் சொன்னார், ''வெள்ளைப் பூக்களை அல்ல, அவை சிவப்பு நிறமுடையவை!''

''இல்லை''என மறுத்தார் ராமதாஸர்.

''பார்த்தவன் நான் சொல்கிறேன்'' என்றார் அனுமார். வழக்கு ராமரிடம் சென்றது.

''பூக்கள் வெள்ளை நிறமே. அனுமாரின் கண்கள் சிவப்பாக இருந்ததால் அவரின் கண்களுக்கு வெள்ளை, வண்ணப் பூக்கள் கூடச் சிவப்பாகவே தெரிந்தன''என்றார் ராமர்!

மனதின் கோபம் வெள்ளை மலர்களைக் கூட சிவப்பாகக் காட்டியது. கொடிது கொடிது கோபம் கொள்வதே!

''ஆதலினால் சினத்தை முன்னே வென்றிடுவர். மேதினியில் மரணமில்லை'' என்றார் பாரதியார்.



## நால்வகை மனிதர்கள்

ஆன்மீகத் தென்றல் வாரியார் சுவாமிகள் மனித இனத்தை நான்காக வகைப்படுத்தியிருக்கிறார். தனக்கே உரித்தான எளிய நடையில் பட்டிதொட்டியெங்கும் பேசியிருக்கிறார். அந்த நான்குவகை மனிதர்கள்.

சந்தனக்கட்டை: தான் தேய்ந்து பிறருக்கு எப்படி மணம் தருகிறதோ, அதுபோல தன்னை வருத்தி தியாகம் செய்து பிறருக்காகவே வாழ்பவர்கள்! சந்தனக்கட்டை போன்ற குணமுடைய இத்தகையோர் முதல் வகையைச் சேர்ந்தவர்கள்.

பசு : நாம் எந்தளவு உணவு கொடுக்கிறோமோ, அந்தளவுக்குத் தான் பால்தரும். அதுபோல கிடைக்கும் ஆதாயத்திற்குத் தகுந்த அளவு உழைப்பவர்கள் பசுவைப் போன்றவர்கள். இவர்களை இரண்டாம் வகையினர் எனலாம்.

மயில்: தானாக இறகு போடாது. அதைப்பிடித்துத்தான் இறகைப் பிடுங்கவேண்டும். அதுபோன்று சிலரை நாமாகப் பணியாற்றச் செய்ய வேண்டும். மூன்றாவது வகையில் இவர்களைச் சேர்க்கலாம்.

தேள்: நன்மை செய்யாவிட்டாலும் தேள் கொட்டும். அதுபோல நன்மையே செய்யாது தீமையே செய்பவர்கள் உண்டு. இவர்கள் நான்காம் வகையினர்.

தொடர்கதை

# என்னைப் பாட வைத்தவள்

## அங்கம் – 1

வெயில் அகோரமாக எறித்துக்கொண்டிருந்தது. முற்றத்தில் வளர்ந்து நின்ற, பூமரங்கள், குரோட்டன் செடிகள் யாவும் சோகமே உருவான நிலையில், புழுதிகளைத் தம் மீது அப்பியபடி, வரட்சியை உள்வாங்கிக்கொண்டு சோர்ந்துபோய் நின்றன. அந்தப் பருவத்தில் பெய்ய வேண்டிய மழை ஏனோ இம்முறை பெய்யத் தவறிவிட்டதால் நிலம் பாளம் பாளமாக வெடித்துக்கிடந்தது. எங்கும் புழுக்கமும் உஷ்ணமும் கலந்ததொரு நிலையே தென்பட்டது.

மதியச் சமையலைச் செய்து முடித்துவிட்டு, பெரியப்பாவுக்கும் பெரியம்மாவுக்கும் கோப்பைகளில் சோற்றை அளவாகப்போட்டு, சூடு ஆறுவதற்காக ஓலைப்பெட்டிகளினால் சிறிது இடைவெளிவிட்டு மூடிவிட்டு, கால்முகம் கழுவுவதற்காக கிணற்றடியை நோக்கிச் சென்றாள் புவனா.

'அப்பாடா! இதென்ன வெய்யில்...?'

வெயிலின் அகோரத்தால் அவளது உடல் வேர்த்து வழிகிறது.

கிணற்றின் அருகே மிக நெருக்கமாக வளர்ந்து நின்ற கமுக மரங்களில் பாக்குகள் நிறையக் காய்த்துக் கிடந்தன. செந்நிறத்தோற்றம் பெற்றுவிட்ட பாக்குக் குலையொன்றின் மீது அணில் ஒன்று இருந்து தனது சிறிய பற்களினால் அதன் தோலை உரித்துக்கொண்டிருந்தது. கிணற்றுக்கு மேலே தொங்குகின்ற கப்பியினூடாக கயிற்றினைக் கிணற்றுக்குள் விட்டவாறே நிமிர்ந்து கமுக மரங்களைப் பார்க்கின்றாள் புவனா.

பாக்குகள் மீது அமர்ந்திருந்த அணிலில் அவளது பார்வை குத்திட்டு நிற்கிறது. கிணற்றுக்குள்ளே வாளிக்கயிற்றை விட்டவாறு பிடித்திருந்த நிலையிலேயே, அந்த அணிலின் அழகிய தோற்றத்தினை மெய்மறந்து ரசித்தாள். அதன் மிருதுவான உடலமைப்பையும், குஞ்சம்போன்ற வாலினையும் ஒரு சிறுகுழந்தைக்குரிய மனோபாவத்தோடு பார்த்துக் கொண்டிருந்தாள்.

திடீரென அவளது வீட்டு நாய் குரைத்துக்கொண்டு தெருவோரத்துப் படலையை நோக்கி ஓடத் தொடங்கியது. நாயின் குரைப்பொலியால் அணில் மீது கொண்டிருந்த அழகிய ரசனை கெட்டுப்போய்விட்டது புவனாவுக்கு.

'இந்த நாய் ஏன் குலைக்குது...?' என்ற எண்ணம் மேலிட, திரும்பிப்பார்த்தாள் புவனா.

அன்பின் மிகுதியால் தன்மீது தொங்கித் தொங்கிப் பாயும் புவனா வீட்டு நாயைத் தள்ளிக்கொண்டு உள்ளே வந்துகொண்டிருந்தாள் கிளி.

கிளியைக் கண்டதும் புவனாவின் முகம் சந்தோஷத்தால் மலர்ந்தது. அவள் இந்தப் புதுக்குடியிருப்புக் கிராமத்துக்கு வந்த காலத்திலிருந்து கிளிதான் புவனாவுக்கு உற்ற சினேகிதியாக இருக்கிறாள். புவனாவைவிட கிளி இரண்டுவயது மூத்தவளாக இருந்தாலும், இருவரது உடற்தோற்றமும் குணவியல்புகளும் ஒருவரோடொருவர் நெருங்கிப்போகக் கூடியதாகவே இருந்தது.

பெரியம்மாவின் சுடுசொற்களால் புண்பட்டுப்போகும் புவனாவின் மனதிற்கு கிளி கூறும் அன்பான, ஆதரவான வார்த்தைகள்தான் அருமருந்தாக இருந்தன.


சிலவேளைகளில், பெரியப்பா இல்லாத சமயங்களில் புவனாவை பெரியம்மா கேட்கும் கேள்விகள், வசையாய் ஒலிக்கும் ஏளனப் பேச்சுக்கள் யாவும் கிளியின் காதில் விழும்போது அவளுக்கு இனம்புரியாத ஆத்திரம் மேலெழும்.

'என்ன கேடுகெட்ட பிறப்பு இது...?'

கிளிக்கு அக்கணத்தில் பெரியம்மாவை நினைக்க அருவருப்பாக இருக்கும். ஒரு குடும்பப்பெண் பேசாத பேச்செல்லாம் அவள் பேசுவதைக் கேட்டு, 'உதுக்குத்தான் உந்த மனிசிக்கு கடவுள் பிள்ளைப் பாக்கியம் இல்லாமல் செய்தாரோ?' என்று தனக்குள் நினைத்துக்கொள்வாள்.

''எடியேய், இஞ்சை தண்டச் சோறு தின்னுறதுக்கோடி இருக்கிறாய்? கொப்பனும் கோத்தையும் அங்கை நெல்லியடியிலை 'ஷெல்' விழுந்து சாகேக்கை நீ மட்டும் ஏனடி தப்பினனீ? அந்தாளுக்கு ஏதோ தம்பியின்ரை மோள் எண்ட பாசமாம். கண்டறியாத பாசம்...?''

பெரியம்மாவின் வாயிலிருந்து வார்த்தைகள் நெருப்புத்தணல்லாக விழுந்து சிதறுகின்றன.




புவனாவின் இதயத்திலிருந்து பீறிட்டு எழும் துக்கம், அவளைப் பெரியம்மாவின் கண்களில் படாமல் வீட்டுக் கோடிப்புறத்தே போய் நின்று அழச்செய்துவிடும்.

* * *

யாழ். குடாநாட்டில் வடமராட்சி எனும் பகுதியில் உள்ள நெல்லியடிக் கிராமத்தில் வாழ்ந்தவள்தான் புவனா. அந்தக் கிராமத்து மண் மீது சிறுவயதில் இருந்தே ஓடி விளையாடி, அங்குள்ள ஒரு பாடசாலையில் கல்விகற்று, பருவப் பெண்ணாகி நின்ற வேளையில்தான் சிங்கள அரச படைகளினால் அக் கிராமத்தின் மீது 'ஒப்ரேசன்–லிபரேசன்' நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கைக்குள் புவனாவின் பெற்றோர், சகோதரர்கள் பலியாகிப் போக, அவள் மட்டும் சிறு காயங்களுடன் உயிர் தப்பிக்கொண்டாள்.

அதன்பின், யாருமற்ற அநாதையான நிலையில் நின்ற புவனாவை புதுக்குடியிருப்பில் இருக்கும் அவளது பெரியப்பா, நடந்துமுடிந்த அவலத்தைக் கேள்விப்பட்டு, கிராமத்துக்கு தன்னோடு கூட்டிக்கொண்டு வந்துவிட்டார். பெரியம்மாவின் விட்டுக்கொடாத பிடிவாதமான போக்கும், குணமும் பற்றி புவனா ஏற்கனவே ஓரளவு தெரிந்து வைத்திருந்தாலும், அப்போதைய நிலையில் பெரியப்பாவினுடைய ஆதரவைக் கைவிட்டால், தனக்கு வேறு ஆதரவு இல்லையே என்கிற நிலை தோன்றவே அவள் பெரியப்பாவோடு செல்வதற்கு சம்மதித்தாள்.

விருந்தும் மருந்தும் மூன்று நாளைக்கு என்பதுபோல, வெந்துநொந்துபோன உள்ளத்துடன் வந்த புவனாவை விடுப்புப் புடுங்கும் பாணியில் எல்லாவற்றையும் விபரமாகக் கேட்டறிந்தாள் பெரியம்மா. அவளையும் தன் தாயாக நினைத்து தனது சோகங்களையெல்லாம் விக்கிவிக்கி அழுதபடி சொல்லிமுடித்தாள் புவனா.

''ம்... உதுக்கு நாங்கள் என்ன செய்யிறது? எல்லாம் அவையளின்ரை தலையெழுத்து'' என பெரியம்மா அலுப்போடு கூறிக்கொண்டாள்.

நாட்கள் நகர்ந்துகொண்டிருந்தன. கவலை படிந்த ரேகைகளால் புவனாவின் முகம் களங்கப்பட்டுக் கிடந்தது. ஒருவரோடும் அதிகம் பேசாது ஒதுங்கியிருந்தாள். பெரியப்பாதான் அவளில் அக்க்றைகொண்டவராக சகலதையும் கவனித்துக் கொண்டார்.

''பிள்ளை, சாப்பிட்டியா? தலைக்கு ஏன் எண்ணெய் வைக்கேல்லை? முகம் ஏனிப்படிக் காய்ஞ்சுபோய்க் கிடக்குது?'' என்றெல்லாம் பரிவோடு வினாவுவார்.

புவனா அந்த வீட்டுக்கு வந்த நாளிலிருந்து பெரியம்மாவுக்குச் சாப்பிடும் உணவு அதிகம் சமிபாடு அடைவதில்லை. 'ஆண்மகனாய் வந்திருந்தால் வீட்டுக்கு காவலாகவும், அவனைக்கொண்டு உழைப்பித்துச் சோறு உண்ணவும் முடியும். இந்தப் பெட்டை என்னத்தைச் செய்து கிழிக்கப் போகுது? இருக்கும்வரைக்கும் சோற்றுக்கும் உடுபுடவைக்கும் என்ன செய்யிறது? அத்தோடு கலியாணம் எண்டு ஒன்று வரும்போது எவன் சீதனம், நகைநட்டு இல்லாமல் இவளை முடிக்கப்போறான்?' என்ற புலம்பல்.

வேண்டா விருந்தாளியாக வந்துவிட்ட புவனாவைக் குறித்து பெரியம்மா தனக்குள் பெரிதும் கலக்கமும், எரிச்சலும் அடையத்தொடங்கினாள். இதன் காரணமாகப பெரியம்மாவின் மனதில், புவனா அந்நியமாகிப்போன நிலையில், எநதநேரமும் அவளை மாற்றாந்தாய் மனப்பான்மையோடு பாகுபாடாக நடத்தத்தொடங்கினாள்.

ஆரம்பத்தில் நொந்துபோயிருந்த புவனாவுக்கு பெரியம்மாவின் நாளாந்த நடவடிக்கைகள்பெரிதும் கலக்கத்தைக் கொடுக்கத்தொடங்கின. தனது எதிர்காலம் ஒருகேள்விக் குறியாக தன்முன்னே வளைந்து நிற்பதைக் கண்டு திகிலடைந்தாள். பெரியப்பா இல்லாத காலத்தில் பெரியம்மாவோடு தங்கியிருந்து வாழும் காலத்தை நினைக்க புவனாவுக்கு மிகுந்த கலக்கமாக இருந்தது.

வாழ்வதற்குப் பாதை தெரியாத நிலையில், சாவதற்கு வழி புரியாமலும் தவித்துக்கொண்டே ஒரு மௌனப்போராட்டத்தினூடு தனது வாழ்வினைக் கடத்திக்கொணடிருந்த புவனாவுக்கு, பக்கத்து வீட்டுக் கிளியின் அன்பும், ஆதரவும், அவளது பெற்றோரின் பாசமிகு வார்தததைகளும் வாழ்க்கையில் புதியதொரு நம்பீக்கையையும் துளிர்ப்பையும் மனதில் தோன்றுவதற்கு வழிவகுத்துக் கொடுத்தன.

நெல்லியடிக் கிராமத்து மண் வாசனையையும், தனது பூாவீகக்கதைகளையும், இராணுவம் மேற்கொண்ட நடவடிக்கையின்போது பெற்றோர், உடன்பிறந்தவர்களுக்கு ஏற்பட்ட அவலச்சாவினையும் கிளிக்குச் சொல்லித் தன் மனதை ஆறுதல்படுத்திக் கொள்வாள் புவனா.

திக்கித்திணறிப் பேசும் தன் மழலையின் பேச்சினை ஒருதாய் எப்படி ஆவலோடும், ஆசையோடும் கேட்பாளோ அதேபோலத்தான் கிளியும் புவனா சொல்லும் கதைகளைக் கேட்டு அவளின துன்ப துயரங்களில் தானும் பங்குகொண்டு, அவளுக்கு ஆறுதல் வார்த்தைகளைச் சொல்லி அவள் மனதைச் சாந்தப்படுத்துவாள்.

தாய், தந்தை, சகோதரர்களுடன் பிறந்து, அவர்கள் அநியாயத்தின் பிடியில் சிக்கிச் சீரழிந்துபோய் விட்ட காரணத்தினாலும், பெரியதாயிடம் எதிர்பார்த்த அன்பு அவளுக்குக் கிடைக்காததினாலும் புவனா மீது கிளிக்கு எப்போதும் மிகுந்த அனுதாபம் எழுந்துகொண்டேயிருக்கும்.

அதன் நிமித்தம், கிளியே அடிக்கடி புவனாவைத் தேடி அவள் வீட்டிற்கு வரத்தொடங்கினாள்.

* * *

''என்ன கிளியக்கா, இண்டைக்கு வெள்ளென வாறியள்?'' கிணற்றடியில் இருந்து குரல்கொடுத்தாள் புவனா.

''உங்கடை வீட்டிலை ஒருத்தரும் இல்லையெண்டு எங்கடை அம்மா அப்போத சொன்னவா. அதுதான் உன்னைப் பாத்திட்டுப் போவமெண்டு வாறன்...'' கூறியபடியே கிணற்றடியை நோக்கி நடநதாள் கிளி.

''ஓம் கிளியக்கா, அப்போத உங்கடை அம்மா சந்தையாலை வரேககை இஞ்சை வந்திட்டுப் போனவா''

''எஙகை உங்கடை பெரியபா பெயம்மாவைக் காணேலலை. எங்க போட்டினம்?'' கிளி கேட்டாள்.

''செத்தவீட்டை போட்டினம்...''

''எங்கை செத்தவீடு?''

''தண்ணீரூற்றிலையக்கா. பெரியம்மான்ரை வழியிலை ஆரோ செத்தவையாம். எனகது இஞ்சததே ஆடகளைச் சரியாத் தெரியாது. எங்கடை ஐயா, அம்மாவைக்குத்தான் தெரியும்''

அலெக்ஸ் பரந்தாமன்

''இப்ப நேரம் இரண்டரைக்கு மேலாகுது. இனி எத்தனை மணிக்கு வரப்போகினமோ?''

''முல்லைத்தீவிலையிருந்து புதுக்குடியிருப்புக்கு கடைசியா வாற பஸ் ஐஞ்சரை மணிக்கு வரும் அக்கா. ஒருவேளை அதிலை வந்தாலும் வரலாம்....'' என்று கூறிய புவனா,

''கொஞ்சம் பொறுங்கோ கால் முகம் கழுவிப்போட்டு வாறன்....''

கிணற்றிலிருந்து அவசரமாகத் தண்ணீரை அள்ளி வாளியொன்றுக்குள் ஊற்றியவள், கிணற்றுவாளியை ஓரமாக வைத்துவிட்டு, ஊற்றிய தண்ணீரை இரு கைகளினாலும் அள்ளி முகத்தில் அடித்துக் கழுவினாள். பக்கத்தில சவாக்காரப் பெட்டிக்குள் கிடந்த 'ரெக்சோனா' வாசனைச் சவர்க்காரத்தை எடுத்து சிறிது தேய்த்து முகத்தில் பூசி... மீண்டும் நீரால முகத்தைக் கழுவினாள்

புவனாவின் அனைத்துச் செயல்களையும் உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தாள் கிளி.

*(பாட வருவாள்...)*

## அடிமைகள்தான்

மலையடிவாரம்
மலையருவியோசையில்
மங்கையர்கள் கிள்ளி
வாடியே கிடந்து
மெசினால் அரைபட்டு
தீயிலே வெந்து
தேயிலைத் தூளாகிறது!
தெவிட்டாத பானம்
உற்சாகந்தரும் பானம்
ஊக்கந்தரும் பானம்
ஏற்றுமதியாகும்
தேயிலை பலவகையால்
அன்னியச் செலாவணி
ஈட்டித்தருகிறது!
ஆனாலும் எம்மினம்
அடிமைகள்தான்!

மாருதி, ஆவரங்கால்.

## வாழ்வு எப்போது விடியும்?

மலையகத்தை வாழவைக்கும்
மகளிர் கூட்டமே!
உங்கள் உரிமையை மீட்டெடுக்க
உண்மையாக உழைத்திடுவீர்!
அரசுகள் பல தோன்றினாலும்
அடக்குமுறைகள் மாறவில்லை
தோட்டத் தொழிலாளர் சங்கங்கள்
பலவிருந்தும் - உங்கள்
தலைவிதிகள் மறையவில்லை
நாடாளுமன்றம் சென்றோர்
நாவடங்கிப் போய்விட்டார்கள்!
பதவியிலிருக்கும் அரசுக்கு
பலிக்கடாவானார்கள்!
உங்கள் வாழ்வில்
வசந்தம் வீசுவது எப்போ?
விடிவு கிடைக்குமா?

கந்த.ஞானமுத்து.
கைதடி.

## விடியலை நோக்கி...

காலைப் பொழுது புலரமுன்
உங்கள் பயணங்கள்
தோட்டத்தை நோக்கி...
இறுகிய மனத்தோடும்
நிமிர்ந்த உடலோடும்
உங்கள் குழந்தைகளை வளர்த்திட
கூலிக்காய்..... தேயிலைக்
கொழுந்தினைக் கிள்ளி
ஒட்டிய வயிறினை
ஓடுகின்ற அருவியால் நிரப்பி
மாலைவரை உங்கள்
வேலை நடைபெறும்!
கொளுத்தும் வெயிலிலும் - நீங்கள்
தளராது உழைத்திட
குடையின் கீழ் நின்று - முதலாளி
உங்களை ஏய்க்கின்றாரே!

M.இந்திரகலா,
யோகபுரம்.

## தேயிலைத் தோட்டமே....!

தேயிலைத் தோட்டமே வாழ்வென்று
புழுதிப் படலத்திற்குள் மூழ்கியோர்
சோகக் கதையைக் கேளுங்கள்!
பத்தடிக் காம்பரா வீடு - லயமே உயிர்நாடி
மகாவலி கங்கை பாய்வதால் - கண்டி
மாநிலம் முழுதும் தாவரப்பூங்காவா?
நெற்றிவியர்வை நிலத்தில் சிந்தி
உதிரத்தை வியர்வையாக்கி - தேயிலையை
பானமாகத் தருகிறார் போலும்!
பொருளாதார வளர்ச்சிக்கு உழைக்குமிவரை
பொல்லாலும் கந்தப்பளையில் தாக்கினர்!
சின்ன பெரிய ஜெமீன்கள்
சிங்காரக் குடைபிடித்து
கருக்கியில் இயந்திரவேலை செய்ய
கட்டளையிடுவதைப் பாருமையா!
கொப்பூழ் கொடி உறவுக்காக
உங்கள் நெஞ்சு குமுறவில்லையா?

இரா.குமரகுரு,
பண்டத்தரிப்பு.

## புரியாத புதிர்

பெரு வருவாய்தனை
நாட்டுக்கு ஈட்டித்தந்து
பெருமைதனை மறந்து
பொழுதெல்லாமுழைக்கும்
பெண்ணினது நிலைமை
புரியாது கட்டளையிடும்
கங்காணியாரைக்
கண்காணிப்பவர் யாரோ?

ஸ்ரீ.சோபிகா,
வட்டுக்கோட்டை.

# மௌனத்தின்

## வதைபடும் தொழிலாளர்

முதுகினிலே கூடைபோட்டு
முந்தானையால் தலையைக் கட்டி
முடவர்கள் போல் பொல்லுடன்
பனிமலைச்சாரலேறித் தினம்
தேயிலைக் கொழுந்து பறிக்கும்
தாய்க்குலமே! - நீங்கள்
வியர்வை சிந்தாவிட்டால்
தாகம் தீர்க்க எங்களுக்கேது தேனீர்
கஷ்டப்பட்டு உழைக்கும்போது
கங்காணியார் குடையுடனிங்கே
நின்றுகொண்டு என்ன செய்கிறார்?
தொழிலாளி வர்க்கத்தை இவர்
வதைத்துக்கொண்டு நிற்கிறாரோ?

நியாயவாதி.



## இயற்கையும் செயற்கையும்

இயற்கைத் தாயின் கொடையினிலே
கிடைத்ததற்கரிய பெரிய செல்வம்
வான்முட்டும் மலைதன்னை மார்பாக்கி
பச்சைப் பசேலென விளைந்த தேயிலை!
குமரிப் பெண்கள் கைகளால் பறிக்கும்
கொழுந்துகளை கூடையில் நிரப்பி
கொண்டுபோக வந்துள்ளான் கங்காணி!
கிள்ளப்படுவது கொழுந்துகள் மட்டுமல்ல
இவர்களது இதயங்களும்தான் - ஏனெனில்
எந்த உரிமையும் கிடைக்கப்பெறாத
மலைவாழ் தமிழர்கள் - இவர்கள்
சிந்திய வியர்வையில் சிலிர்க்குது மலையகம்!

M.சந்திரகலா,
உரும்பிராய்.

## மாந்தரிவரைப் பார்க்கையில்...!

மௌனத்தின் தேடலில்
மலையக மாந்தர்
தேயிலைக் கொழுந்து
பறிப்பதைப் பார்க்கையில்
அவர் வேதனைகளை நினைத்து
குடிக்கும் தேநீரை
குடிக்காது நிறுத்திவிட
மனம் நினைக்கிறதே....!

த. தனேஸ்,
மல்லாவி.

# தேடல்கள் —17

## உரிமை வழங்காததேன்?

கறுத்தக் கோட்டுக் கங்காணியார்
கச்சிதமாய் கணக்கெழுதி
பறித்த தேயிலைக் கொழுந்தையெல்லாம்
பக்குவமாய் பண்படுத்தி
ஒறுத்த விலையினிலே உலக சந்தையில்
பேரம் பேசி பெருத்த செலாவணியைப் பெற்று
பெருமை பெறச் செய்து - தினமும்
வருத்தமுடன் உழைக்கும்
தோட்டத் தொழிலாளர்க்கு - மனம்
விரும்பமுற வாக்குரிமை வழங்காததேனோ?

த்.அகல்யா,
சந்நிதி.

## அன்பு பொழிய நேரமில்லை

குழந்தை அம்மா அம்மா
என்று அழைக்க
அன்புபொழிய நேரமில்லாது
தேயிலைக் கொழுந்துகளை
கொழுத்தும் வெயிலில்
வியர்வை சிந்தி பறித்து
உன் குடும்பத்தை உயர்த்த
அயராது உழைக்கிறாயே!
உன் வாழ்வில் எப்போது
வசந்தம் வீசும்?

பா.சிறிமோகன்,
பொற்பதி.

## எழுந்திடுவீர்!

அதிகார வர்க்கத்திடம்
அடிமைப்பட்டு இருக்கும் தாய்மாரே!
உங்கள் இரத்தத்தைப் பாலாக்கி
உங்கள் குழந்தைகளுக்குக் கொடுத்தீர்கள்!
அதில் நியாயம் இருக்கின்றது
ஆனால்...
உங்கள் இரத்தத்தை உழைப்பாக்கி
அந்நிய தேசத்திற்கு அனுப்புகிறீர்களே!
அதில் என்ன நியாயம் இருக்கின்றது?
அதுவும் நாட்டை சின்னாபின்னமாக்கிடும்
ஆயுதக் கொள்வனவுக்கல்லவா - உங்கள்
உழைப்புகள் ஊதியமாகின்றன!
சிந்தியுங்கள் தாய்மாரே!
விழித்திடுங்கள் தாய்மாரே!
அடிமை விலங்கறுத்து எழுந்திடுவீர்!
புதிய பரணி பாடிடுவீர்!

த.பிரபாஜினி,சாவகச்சேரி.

## என்று முடியும் எங்கள் அடிமைக் கோலம்?

இந்த நாட்டின் பொருளாதாரத்தை
உயர்த்திவிடுபவர்கள் நாங்கள்
இலங்கைத் தேயிலை என்று
உலகமெல்லாம் இலங்கையின் பெயரை
பரப்புபவர்கள் நாங்கள் - ஆனால்
இன்றும் எமது தங்குமிடம்
தகரக் கொட்டகைகளே!
எமக்கும் விடிவுவேண்டும்
தங்குவதற்கு ஒரு வீடு, ஒரு கிணறு,
ஒரு மலசலகூடம்....
பிள்ளைகள் படிக்க ஒரு பாடசாலை....
இவ்வளவும் போதும் - கிடைக்குமா?
என்று தணியும் எங்கள் சுதந்திரதாகம்?
என்று முடியும் இந்த அடிமைக் கோலம்?

புதுக்கவி.

## மௌனத்தின் தேடல்கள் - 19



அன்பு வாசகர்களே! உங்கள் எண்ணத்தில் தோன்றும் உள்ளதது உணர்வுகளை *மக்கச் சிறிய* கவிதைகளாக்கித் *தபால் அட்டையில்* சங்குநாதத்திற்கு அனுப்பிவையுங்கள்.

**கிடைக்கவேண்டிய இறுதித்திகதி** - 17.07.2004

அனுப்பவேண்டிய முகவரி:- மௌனத்தின் தேடல்கள் - 19
சங்குநாதம்
15, வெள்ளாந்தெரு, வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

## உம் விரல் ஆடாவிட்டால்...

பெருந்தோட்டப் பயிரென்ற
பெருமையைப் பெற்றுவிட்ட
தேயிலைச் செடியே நீ வாழ்க!
துளிர்விட்டால் துண்டிக்க
மலையேறி மரக்கூடை முதுகேற்றி
முக்காடு போட்டிங்கே
முழுசாய் உழைக்கும் தாய்க்குலமே!
உம் பசிபோக்க உழைக்கின்றீரோ? -இல்லை
எம் பசிபோக்க உழைக்கின்றீரோ?
எது உண்மை என்பது
எங்களுக்குத் தெரியுமம்மா!
வேலைக்கேற்ற கூலியொன்றை
வெகுவிரைவில் கேளுமம்மா!
உம் விரல் ஆடாவிட்டால்
அரசு விரலும் ஆடாதம்மா.

பா.செல்வராணி வட்டுக்கோட்டை.

## அடிமையாக்காதே!

இரத்தம் குடித்து மகிழும் மர அட்டைகளே!
இரத்தம் சிந்தி வாழும் பாட்டாளிகளின்
அர்த்தம் புரியாது அல்லற்படுத்துவது ஏன்?
அந்த வர்க்கம் இல்லையெனில்
உங்கள் ஆடம்பர வாழ்வேது?
சற்றுச் சிந்தித்துப் பாருமையா!
மற்ற மனிதரையும் மனிதராய் மதியுமையா!
கற்றீர் நீர் பலவற்றை அவர்களிடமிருந்து
சிற்றறிவு வேண்டாம் அடிமையாக்காதே!
சிந்தித்து உழைப்பின் ஊதியத்தை
வெட்டாது கொடுமையா!

பொ.புனிதன், வரியப்புலம்.

## நன்றிகள்

கொய்தெடுக்கும் நின் தொழிலால்
உலகெங்கும் பல்லோரும் - காலை
உற்சாகம் பெறுகின்றார்
நன்றிகள் பல்கோடி நின் கரங்களுக்கு.

ஜெ.சுபாஷினி.



'கஜேந்திரா'
விஜயகாந்த், ப்ளோரா

## ஸ்லிம்மான மும்தாஜ்

உடம்பைக் குறைத்தால் மட்டுமே வாழ்வு உண்டு என்கிற நிலைக்கு வந்துவிட்டார் மும்தாஜ். அவரைத் தவிர்த்து ஏகப்பட்ட 'மும்தாஜ்கள்' தற்போது திரையில் ஜொலிக்கும் நிலையில், 'விட்ட இடத்தைப் பிடித்தே தீருவேன்' என கச்சை கட்டிக்கொண்டு களத்தில் இறங்கியிருக்கிறார் மும்தாஜ்.

தினமும் இருவேளை உடற்பயிற்சி, அதோடு கடுமையான டயட் என வாயையும், வயிற்றையும் காயவிட்டுக்கொண்டிருக்கிறாராம். ஸ்லிம்மான மும்தாஜை விரைவில் திரையில் பார்க்கலாம்.

## அனு(னு) அனு(னு)வாகப் பாராட்டுவார்கள்

கவர்ச்சியாக நடிக்கவும் ஒரு ராசி வேண்டும். ஒர்க் அவுட் ஆனால் வண்டி ஓடும். இல்லாவிட்டால் அம்பேல் தான். ஆனால் 'சூப்பர்டா' படத்தில் நடித்திருக்கும் அனு, ஏக நம்பிக்கையோடு இருக்கிறார். படத்தில் கவர்ச்சிக் கலக்கலும் குலுக்கலும் நடத்தி, ஏக ரகளை செய்திருக்கிறாராம். இந்தப் படத்துக்குப் பிறகு தமிழ் சினிமா ரசிகர்கள் தன்னை 'அனு(ணு) அனு(ணு)'வாக ரசித்துப் பாராட்டுவார்கள் என்ற நம்பிக்கையோடு இருக்கிறார் அம்மணி. கனவு பலிக்கட்டும்.



## அரசியலில் பரபரப்

சூப்பர் நடிகர் நடிக்கப்போகும் கதை வ...தப் ...
பரபரப்புக்கள் ஓயட்டும். கொஞ்சம் நிதானமாக இருப்போம்'
பிரேக்! ஓகஸ்டிலிருந்து முழுவீச்சில் களத்தில் இறங்குவ

## ஜெய் ஆகாஷ் – ராஜ்கிரண் இணைப்பில் 'செவ்வேல்'

'ராமகிருஷ்ணா' படத்திற்குப் பிறகு ஜெய் ஆகாஷ் கதாநாயகனாக நடித்துவரும் படம் 'செவ்வேல்'. இதில் ராஜ்கிரண் முக்கியமான மாறுபட்ட ஒரு வேடத்தில் நடிக்கிறார்.

'தெராஸ் பிலிம் கார்ப்பரேசன்' பானரில் தயாராகும் இப்படத்தில் ஜெய் ஆகாஷ் முற்றிலும் மாறுபட்ட ஒரு ஆக்ஷன் கரக்டரில் தோன்றி நடிக்கிறார். அவரது ஜோடியாக மும்பையைச் சேர்ந்த புதுமுகம் டெய்ஸி கதாநாயகியாக நடிக்கிறார். இவர் சில ஹிந்திப்படங்களிலும், தெலுங்குப் படங்களிலும் நடித்துள்ளார்.

மற்றும் கலாபவன் மணி, அலெக்ஸ், செந்தில், இளவரசு ஆகியோரும் நடிக்கும் இப்படத்தின் கதை, திரைக்கதை, ஒளிப்பதிவு, இயக்கம் ஆகிய பொறுப்புகளை பி.பிரிமூஸ் கவனிக்கிறார். இவரே படத்தைத் தயாரிக்கிறார்.

இப்படத்தின் பாடல்களை கபிலன், முத்துவிஜயன், மணவை பொன்மாணிக்கம், நிலாப்பிரியன், குகன் ஆகியோர் இயற்றுகிறார்கள்.


பிரமாண்டமான முறையில் வேகமாக வளர்ந்து வருகிறது 'செவ்வேல்'.



## ஆக்ஷன் காந்த

'காதல் படங்களை விட ஆக்ஷன் படங்களில் நடிப்பதே எனக்குப் பிடித்தது' என்கிறார் நடிகர் ஸ்ரீகாந்த். 'போஸ்' படத்தில் ஆக்ஷன் காட்சிகளில் அசத்தியிருக்கிறாராம்.

'அதேசமயம் வெறும் ஆக்ஷன் ஹீரோ என்ற முத்திரை விழுந்துவிடாமல் பார்த்துக்கொள்வேன்' என்கிறார் காந்த்.




## இன்னொரு மும்தாஜ்



பொன்னம்பலம் இயக்கும் 'பட்டயக் கிளப்பு' படத்தில் நடித்து வருகிறார் பாயல். படம் வந்ததும் மும்தாஜின் இடத்தை இவர் பிடிப்பார் என்கிறது பொன்னம்பலம் டீம்.

## பாடாய்ப்படுத்தும் ப்ரியங்கா!

பாதிப் படத்தில் நடித்துக்கொண்டிருக்கும போதே கல்யாணம்தான் கட்டிக்கொண்டு ஓடிப்போனவர் ப்ரியங்கா திரிவேதி. 'ஜனனம்' படத்தின் நாயகி இவர். இந்தத் திடீர் முகூர்த்தத்தால் பஞ்சாயத்துக்கு மேல் பஞ்சாயத்தாகி கடைசியில் படத்தை முடித்துக்கொடுப்பதாக ஒப்புக்கொண்டார். ஆனாலும் சொன்ன தேதிகளில் ஷூட்டிங்குக்கு வராமல் பாடாய்பபடுத்திக் கொண்டிருக்கிறாராம். பணத்தைக் கொட்டி முடக்கியிருக்கும் தயாரிப்பாளரோ ப்ரியங்கா வரும் திசையைப் பார்த்தபடி காத்திருக்கிறாராம்.



'அன்புச் சகோதரன்'
ஸ்வாதி, மீனா, அர்ஜுன்

## 'ட்ரீம்ஸில் தனுஷ்

சரஸ்வதி ஸ்ரீகாந்த் வழங்க அக்ஷய பிலிம்ஸ் பட
முறையில் தயாரிக்கும் படம் 'ட்ரீம்ஸ்'.

தனுஷ் ஜோடியாக இரண்டு கதாநாயகிகள் நடிக்கிறா
பாரு என்பவர் இப்படத்தின் மூலம் அறிமுகமாகிறார். இன்
ரமேஷ் கண்ணா, பிரமிட் நடராஜன், குயிலி இவர்களு
நட்சத்திரங்களும் நடிக்கிறார்கள். அதற்கான தேர்வு நடை
இப்படத்தின் படப்பிடிப்பு வேகமாக நடைபெற்று வருகிறது.

'அலை அலையாய் ஆசைகள் வரு
அதிரடியாய் இதயத்தில் விழுதே

என்ற பாடல் காட்சி நடனத்தில் தனுஷுடன் புதுமு
இதற்காக பல லட்ச ரூபாய் செலவில் பிரம்மாண்டமான அர
ளது. இந்தப் பாடல் காட்சி வித்தியாசமான முறையில் பட

# சினிமாச் சிதறல்



'துள்ளல்'
பிரவீன்காந்த்,
குர்லின் சோப்ரா, சோனிகா

## ...பரப்புக்கள் ஓயட்டும்!


...தப் ப...களில் சிறிது சுணக்கம் ஏற்பட்டுள்ளது. 'அரசியல் ...இருப்போம்' என்று கூறிவிட்டாராம். அதனால் இரண்டு மாதங்கள் ... இறங்குவார்களாம்.

'குடைக்குள் மழை'
பார்த்திபன், மதுமிதா




## ...ஷ் - பாரு நடனம்

...லிம்ஸ் பட நிறுவனம் பிரம்மாண்டமான ...
...ர் நடிக்கிறார்கள். மும்பையைச் சேர்ந்த ...றார். இன்னொருவர் தியா.
...' இவர்களுடன் இன்னும் சில முன்னணி ...தர்வு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.
... வருகிறது.
...சகள் வருதே
...ல் விழுதே'
...ட்ன் புதுமுகம் பாரு பங்கேற்றுள்ளார். ...மான அரங்குகள் அமைக்கப்பட உள் ...றையில் படமாக்கப்பட உள்ளது.



# 'மதுர' - பற்றி விஜய்



''வாழ்க்கை ஒரு வட்டம்டா. இங்கே ஜெயிக்கிற வன் தோப்பான். தோக்கிறவன் ஜெயிப்பான்''

இது திருமலை படத்தில் விஜய் பேசிய வசனம்.

விஜயைப் பொறுத்தவரை இது வெறும் வசனம் அல்ல வாழ்க்கையிலும் அவர் பட்டுத் தெரிந்துகொண்ட அனுபவப் பாடம் என்பது போலத்தான் தெரிகிறது அவரது அடக்கத்தைப் பார்த்தால்... விஜயின் நடவடிக்கையைக் கிரகித்ததன் மூலம் நாம் புரிந்துகொண்ட விஷயத்தை அவரிடம் வெளிப்படுத்துகிறோம்.

அதை ஆமோதிக்கிறது விஜயின் பேச்சு...

''நீங்க சொன்னது நூத்துக்கு நூறு உண்மை. வெற்றிங்கிறது யாருக்குமே நிலையான விஷயமில்லை. வெற்றி, தோல்வி எல்லாம் சேர்ந்ததுதான் வாழ்க்கை. இதை தெளிவா புரிஞ்சுக்கிட்டிருக்கேன்.

இதுவரைக்கும் 38 படங்கள்ல நடிச்சிருக்கேன். இதில் எத்தனையோ வெற்றியையும், தோல்வியையும் பாத்திருக்கேன். ஆரம்பத்தில, வெற்றி வர்றப்ப மனசு குதியாட்டம் போடும். தோல்வியடையறப்ப் சோர்ந்து பேகும். இப்ப அப்படி இல்லை. இரண்டையும் சமமாப் பாக்குற பக்குவம் வந்திடுச்சு''

ஆனால் அவரது ரசிகர்கள்? கட்டை விரலை அனுப்புமளவுக்கு தீவிர ரசிகர்களாச்சே...

''என் ரசிகர்கள் என் எல்லாப் படமும் நூறு நாள் ஓடவேண்டும் என்று நினைக்கிறார்கள். அவர்களின் ஆசையை நிறைவேற்றவேண்டும் என்றுதான் கடுமையாக உழைக்கிறேன். அப்படி உழைத்தும் சிலசமயம் படம் சரியாகப் போகாதபோது என்னைவிட அவர்கள் அதிகமாக வேதனைப்படுகிறார்கள். அதை நினைக்கிறப்ப எனக்கு வருத்தமா இருக்கு.

வெற்றிப்படம் கொடுக்கிறப்ப என் ரசிகர்கள் அடையற மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அதை பாக்குறப்ப, இவங்களை எப்பவும் மகிழ்ச்சியாவச்சிருக்கனும்னு தோனுது. ஏன்னா... என்னை மாதிரி ஹீரோக்களோட சொத்தே ரசிகர்கள்தான்'' என்று சொல்லும் விஜய் வெகு விரைவில் அரைச்சதம் அடிக்கப்போகிறார்.

இத்தனை படங்களில் நடித்த அனுபவம் இருந்தும். அவ்வப்போது சறுக்குகிறாரே...!

''வெற்றி தோல்வியை யாரும் முன்கூட்டியே கணிக்கமுடியாது. ஓரளவு கணக்குத்தான் போட முடியும். அந்தக் கணக்கு சில சமயம் சரியா இருக்கும். சில சமயம் தப்பாயிடும். அதுக்காக யாரையும் குற்றம் சொல்லமாட்டேன். ஏன்னா, தோல்விப் படம் கொடுக்கனும்னு யாருமே படம் எடுக்கிறதில்லை. எல்லாருமே ஜெயிக்கத்தான் போராடுறாங்க''.

'கில்லி'யில் நடிக்கும்போது இந்தளவுக்கு வெற்றியடையும் என்று நினைத்தாரா விஜய்?

''கில்லி ஜெயிக்கும்னு தெரியும். ஆனா இப்படி ரெக்கார்டு பிறேக் பண்ணும்னு நினைக்கலே. இவ்வளவு பெரிய வெற்றிக்கு டைரக்டர் தரணி, புரடியூசர் ஏ.எம். ரத்னம் இரண்டு பேருக்கும் பெரிய பங்கு இருக்கு. அப்புறம் தான் நான். தன்னடக்கத்துக்காக இப்படி சொல்லுறதா நினைக்கவேணாம் மனப்பூர்வமா சொல்றேன்''

என்று சொல்லும் விஜயின் இபபோதைய சிந்தனை செயல் எல்லாமே 'மதுர' தான். மாதேஷ் இயக்கும் புதுப்படம்.

''இதுவும் பக்காவான கமர்ஷியல் சப்ஜெக்ட்தான். ஆனா 'கில்லி'க்கும் மதுர'க்கும் நிறைய வித்தியாசம் இருக்கு. 'கில்லி' பவர் ஃபுல் ஸ்கின்ப்ளே. 'மதுர' கதையைப் பொறுத்தவரைக்கும் இயல்பாகவே எல்லா அம்சமும் அமைந்த சப்ஜெக்ட். அடுத்தது என்னன்னு யாரும் கெஸ் பண்ண முடியாதளவுக்கு ஒவ்வொரு சீனும் இருக்கும். என் ரசிகர்கள் என்ஜோய் பண்ணுற மாதிரியான படம் இது''

கெட்டப்பை மாற்றுவதில் என்ன தயக்கம் விஜய்?

''கெட்டப் அது இதுன்னு ரிஸ்க் எடுக்க இப்போதைக்கு நான் தயாராக இல்லை. என் வயசுக்கும், உருவத்திற்கும், இமேஜ"க்கும் சூட்டாகிற கரக்டர்ஸ் பண்ணிக்கிட்டிருக்கேன். இப்போதைக்கு இதுதான் நல்ல ரூட்டுன்னு தோனுது.

அதுக்காக கெட்டப்பை மாற்றி நடிக்க மாட்டேன்னு அர்த்தமில்லை. சரியான கதையும் கரக்டரும் அமையுறப்போ கண்டிப்பா நடிப்பேன்''

என்று சொல்லும் விஜய் 'மதுர' படத்தைத் தொடர்ந்து சூப்பர் குட் பிலிம்ஸ் பேனரில் ஒரு படம் நடிக்க இருக்கிறாராம் படத்தின் பெயர் 'திருப்பாச்சி'.

*விஜய் ஒரு முடிவோடதான் இருக்கிறார் போலிருக்கிறது.*

## மன்மத முரளி

'மன்மதராசா' ஸ்ரைலில் ஒரு பாடலுக்கு நடனமாடியிருக்கிறார் முரளி. 'அறிவுமணி' படத்துக்காக.

என்ன முரளி திடீரென்று இப்படியெல்லாம் பயமுறுத்து றீங்க எனக்கேட்டோம்.

''நான் எப்போதும் லைட் டான்ஸ்தான் ஆடுவேன். இந்த முறை டைரக்டர் கேட்டதால் இப்படி ஆடியிருக்கிறேன்'' என்றார். அவருடன் கலக்கியிருப்பவர் மீரா வாசுதேவன்.

'அட்டகாசம்' முடிந்ததும் சூர்யாவை வைத்து ஒரு படம் இயக்குகிறார் சரண் இதில் நாயகி அசின்.

'அறிவு மணி'
முரளி, மீரா வாசுதேவன்



# கவிதைக் கலசம்

## சோதனை மேல் சோதனை

நெஞ்சு கனக்கிறதே.....!
பிஞ்சிலே என்ன இந்தவலி?
என்று மனம் பேதலித்தும்
நேற்று ஓர் கவலை...
இன்று ஓர் புலம்பலாய்...
நாளைக்கும்...?!
நம்பிக்கையேயில்லை
இந்த வாழ்க்கையில்
மனம் பாரம் சுமந்ததால்
விழிகள் ஈரம் சொரிந்து....
கண்ணீர் காலியாகி விட்டது - என்
இதயத்து ராகத்தை மீட்ட
எனக்கோர் வீணை தேவை
என்று வாசிக்க எடுத்தேன்
அதுவே எனக்கோர்
சோதனையைத் தந்துவிட்டதே!

ஜெ.சுபாஷினி.

## ஓர் மனதின் ஏக்கம்....



எத்தனை சோதனைகள் ~ அவை
அத்தனையும் தருகின்ற வேதனைகள்
கண்ணீருடன் கலந்துவிட்ட வாழ்க்கை
கண்மணியே உனக்குத்தானா?
வாழ்க்கையின் முக்கால்பாகமும் கண்ணீருடன்.....
வழக்கப்படுத்தியது உன் தவறா?
உன்னை சூழ்ந்திருப்போர் சிரிக்கின்றார்கள் ~ நீயோ
உள்ளாய் எங்கோ ஒரு மூலையில் அழுத வண்ணம்
கண்ணீர் சிந்துகின்ற போதாவது என்னை நினையென
கடவுள் உனக்கிட்ட சாபமோ யாரறிவார்?
எதிர்கால வாழ்வும் கண்ணீருடன் சங்கமமோ?
எதிர்கொள்ள முடியும் உன்னால் ~ எனினும்
கண்ணீராய் உடலிலுள்ள நீரெல்லாம்
கரைந்து வற்றிவிட்டதோ? வற்றிடுமோ? ~ என
ஏங்குகின்றது இங்கு ஓர் மனம் ~ இது
எத்தனை மனங்களின் ஏக்கமோ?

R.றம்மியா,யாழ்ப்பாணம்.

## அன்புள்ள மனத்திற்கு

*மனமே!*
*இருக்கும் இடமே தெரியாத நீ*
*சூட்சுமமாய் என்ன வித்தை காட்டுகிறாய்?*
*உன்னில் கூட பிரிவுகள்*
*இரக்கமனம் அரக்கமனம் என*
*எந்தப் பிரிவானாலும் முதலிடத்தில் நீ*
*எல்லாக் கடவுள்களும் உனை*
*பக்குவமடைந்துவிடு என்கின்றனர்*
*நீயோ கடவுளுக்கே தண்ணி...!*
*கடவுளின் பெயராலேயே கொலை*
*கொள்ளை கற்பழிப்புக்கள்....*
*அத்துமீறலுக்கு அடிப்படையாய் நீ*
*எப்போ குளிர்ந்து சாந்தியடைவாய்?*
*அதைமட்டும் கூறு அப்போது*
*நான் உயிர்க்கின்றேன்!*
*இப்படிக்கு நான்.*

*தி.சுதர்மன்,மானிப்பாய்.*

### கவிதை

சொற் காவடிகள்
சுமந்து
மனம் ஆடும்
பரவச ஆட்டம்

### திருமணம்

இளமை என்னும்
இடைக்கால நிர்வாகத்தில்
இதயம் பெற்றுக் கொள்ளும்
இறுதித் தீர்வு

### தமிழ்

என் கற்பனைகளுக்கு
என்றும் உயிர் கொடுக்கும்
கருவறை

### மோட்டார் சைக்கிள்

விபத்துக்களுக்காகவே
விதம்விதமாய்
உருவாக்கப்பட்டுள்ள
விதியின் விசை வடிவங்கள்

### கைத்தொலைபேசி

கைப்பிடித்து
காதோடு பேசிடும்
இரண்டாவது மனைவி.

நந்தன்,
புலோலியூர்.


## நியமனம்



நிபுணத்துவம்
குறைவில்லாத உனக்கு
நியமனம் தருவதில்
சந்தோசம் எனக்கு!
தோல்வியில் நொந்த
வெற்றிக்களிப்பில்
துள்ளிக்குதிக்கிறது - உன்
பணி துவங்கியபின்
தெருவில்
நான் ஊர்ந்து செல்கையில்
இமை அசைத்து
இதயம் பரவசப்படுத்துவாய்...
உன்னைத் தாண்டியதும்
முதல் காதலின் சோகம்
முக்காடு போடும்!
என் நடவடிக்கை முழுவதும்
உளவு பார்த்து
மனசுக்கு நியாயம் சொல்லி - நீ
காதல் மனுச் செய்தாய் - உன்
நிபுணத்துவத்திற்கும்
நற்குணத்திற்கும்
நான் கொடுக்கும் பரிசு!
என் முதல் காதல்(லி)
இதய அலுவலகத்தை - அவள்
அசிங்கப்படுத்தியதால்....
இனிமேல் - என் இதயத்தில்
நியமனமில்லை என்று
அன்று தீர்மானித்தேன் - உன்
நேசிப்பும் சாதுரியமும்தான்
உத்தியோகபூர்வமாய் என்னிதயத்தில்
நியமனம் பெற்றுக்கொண்டன.

தமிழ்ப்ரியன்.
வட்டுக்கோட்டை.

## மதியாதார் தலைவாசல்



நீ என் நினைவு
நிலவுக்கு உறவு - என்
நினைவுக்கு இனிப்பு!
உனக்கோ நான்
அப்படி இல்லையா?
சாதிச் சாத்தான்களுக்கு
செவி சாய்த்து - என்னை
எடுத்தெறிந்தாய் இரக்கமின்றி....
மதியாதார் தலைவாசல்
மிதியாதே என்று
இந்துமத ஔவைக்கிழவி
சொன்ன வார்த்தை
புரியவில்லை அப்போது!
எனவேதான்
மிதிபட்டேன் பல தடவை
உன் வாசலுக்கு வந்து நின்று.
என் காதுகளுக்கு
இசையாக மீட்டிய
உன் வார்த்தைகள்
இப்போதும் கூட என் காதோடு
ஒலித்துக்கொண்டிருக்கிறது
இப்போது
ஏன் நீ மட்டும் உன் காதுகளைப்
பொத்திக்கொள்கிறாய்
என் பெயரைக் கேட்டதும்!

ச.முருகானந்தன்.


## இருட்டு முகங்கள்



பட்டப்பகலில்
இருட்டு முகங்கள்!
மண்ணிலே நிமிர்ந்து
புண்படுத்த நோக்குது
முக வீதியில்
சோகத் தழும்புகள்!
சுயத்தை மறந்து
பகடைக்காய்களாய்...
புன்னகை வேசத்திற்கு
மட்டும் குறைவில்லை
எலும்புகளின் ஒற்றுமையை
சுறுசுறுப்பான உறுதியை
ஆறடிகள் உணரவில்லை
பொறாமையையும்போலிவாழ்க்கையும்
அணிகலன்களாய் பூட்டி
திறந்துவிட்ட கைவிலங்குடன்
கும்பிடுபோட்டு
ஓட்டுக் கேட்கும் கும்பல்
விழுந்த வாக்குகளைக் கண்டு
கொடுத்த வாக்குறுதிகளை மறந்து
கற்பழித்தார்கள் எம் தேசத்தை!
கதிரைக்கு இழுபறி
உள்ளே சதி
வெளியே சமாதானம்!
எரிகின்ற நெருப்பில்
அயல்நாடும் ஆதிக்க நாடும்
ஊற்றுது பெற்றோலை!
கருகப்போவது மக்கள்
இறுகப்போகிறது சிக்கல்
உறுதி தளராத சூரியன்கள்
பொறுமையின் எல்லையில்
தமிழ் உதயத்திற்காய்
தவமிருக்கின்றார்கள்!
வெண்புறாவின் சினை முட்டையை
கருக்கலைப்புச் செய்ய
படித்த பைத்தியங்கள்
முடியாத முடிபுகளோடு முயற்சி!
வேடங்கள் கலைந்து
நாடகம் வெளிப்படும்
முகமூடிகள் கிழிக்க
நீதியான வேட்டை தொடரும்
சலுகைகளிற்காக
மயங்கிப் போவதால்
வலுவிழந்து போகின்றது
வாழ்க்கைகள்!
விழிப்பாய் இருக்காவிடின்
விழிகளே திருட்டுப்போகும்
போசாதிருந்தால் உதடுகள்
ஊமை என்று மொழிபெயர்க்கப்படும்
காதுகளும் அடைபட்டது
நாங்கள் வாழும்
திறந்தவெளிச் சிறைச்சாலையில்
இன்னும் எத்தனையோ...
எழுதப்படாத அறிக்கைகளாய்
குவிந்து கிடக்கின்றது!

ஜோ.ஜெஸ்ரின்.

## சிரிப்பில் சிந்திப்பு...! 21



தீர கருடன் மோதி வீழ்ந்த சுப்பருமே திகைத்துப்
போயே நிற்கவே
சிரந்தாழ்த்தி நன்றிதனை
சுப்பருக்கும் தரகர் சொன்னாரே
உரம் பெற்ற மனத்தோடு நன்றி சொன்ன
காரணமதை சுப்பரும் கேட்கவே
தரகரும் தயக்கமின்றி தனக்கு நிகழ்ந்த இருட்டடியை
கூறத் தொடங்கினாரே
வரண் பார்த்த விடத்தே வாயில் வந்த பொய்யால்
வடிவாய் தந்தார்கள் எனக்கே
மரக்கட்டையால் மண்டையில் பெற்ற அடியால்
கழுத்தும் உழுக்கிப் போனதே
வரம் தந்ததே போல் நீ வந்து மோதியதில் கழுத்து
உழுக்கும் போனதே
கரணமிட்டு விழுந்தாலும் கழுத்து உழுக்கு
நீங்கியதால் நன்றி சொன்னார் தரகருமே....

(சுப்பர் வருவார்)

பொன்.சுகந்தன்,
நெல்லியடி.

## கவலை எதற்காக?

'கவலை' இது மனிதனைச் செயல் புரியவிடாமற் தடுப்பது. சோர்வுக்கு அடிப்படையும் இதுதான். கவலை கொள்ளாத மனிதர்கள் உலகில் இரண்டு வகையினர். ஒன்று ஞானிகள் மற்றோர் புத்திசுயாதீனம் அற்றோர். இதனாற்தான் ஞானிகளைக் கூட நம்மவர் 'விசர்' என்று கூறினர். நல்லூரில் வாழ்ந்த செல்லப்பா சுவாமிகளை 'விசர்ச் செல்லப்பா' என்றே அழைத்தனர். எனவே கவலை என்பது மனிதர்கள், தேவர்கள், அசுரர்கள் உட்பட அனைவரையுமே ஆட்கொண்டுள்ளது.

கவலை எதற்காக? என்று விடைகாணச் சென்றவர்கள் பலர். சித்தார்த்தன் துறவுகொண்டு சென்று போதிமர நிழலில் ஞானம் பெற்றுப் புத்தரானார். பௌத்தமதம் துக்கம், துக்க உற்பத்தி, துக்க நிவாரணம், துக்க நிவாரண மார்க்கம் என்பவற்றைப் பற்றிக் கூறுகின்றது.

நமது துன்பத்திற்கு நாம் தான் காரணம் என்பது சைவ சித்தாந்திகள் முடிவு. மனிதன் கவலையின்றி இருக்க பிறவித் தளையிலிருந்து விடுபடவேண்டும். இதுவே முக்தி. ஆன்மாக்கள் முக்தியடைதற் பொருட்டே இறைவன் தனு கரண புவன போகங்களைப் படைக்கின்றான். ஆன்மாக்கள் போகங்களை அனுபவிக்கும் பொழுது பாவ புண்ணியங்களைப் புரிகின்றன. இப் பாவ புண்ணியங்களுக்கு ஏற்பவே இன்ப துன்பங்கள் ஏற்படுகின்றன. இன்பங்களைக் கண்டு களிப்படையும் மனிதன் துன்பங்களைக் கண்டு துவண்டுவிடுகின்றான்.

துன்பப்படாமல் எப்படி இருப்பது? இதற்குத்தான் சமயங்கள் வழி காட்டுகின்றன.

'பற்றுக பற்றற்றான் பற்றைப் பற்றுக....' என உலகப் பொதுமறையாகிய திருக்குறள் கூறுகின்றது. பற்றுகளைத் துறப்பதும் பற்றற்றவனாகிய ஆண்டவனைப பற்றுவதும் இலகுவான காரியமா? நம்மவர் பற்றுகளைத் துறப்பது என்பதை செயலில் இருந்து விலகுவது என்பதையே மையமாக நினைக்கிறார்கள். கடமையைக் கடமையாக எண்ணிச் செயல்புரியவேண்டுமேயன்றிக் கடனாகவோ, வெறியுடனோ செய்யக்கூடாது. இதற்கு விளக்கமளிப்பதாக அமைகின்றது பகவத்கீதையின் கர்மயோகம்.

'கர்மம் செய்வதற்கு மட்டுமே உனக்கு அதிகாரம் உண்டு. அதன் பலன்களில் உனக்கு ஒருபோதும் உரிமையில்லை. பயனைக் கருதிக் கன்மம் செய்பவனாக இருக்காதே. செயலாற்றாமல் இருப்பதில் பற்றுதலும் கொள்ளாதே' எனக் கூறுகின்றது கீதை. ''நான் எல்லாப் பற்றுகளையும் துறந்துவிட்டேன். என்னுடைய கடமைகளையும் முடித்துவிட்டேன். கடவுள் எப்பொழுது ஓலை அனுப்புகின்றாரோ அப்பொழுது போய்விடுவேன்'' என நம்மவர் பலர் கூறக் கேட்கின்றோம். கர்மம் செய்ய விருப்பமற்றவர்கள் சுயநலம் உடையவர்கள். ஓய்வாகப் பொழுதுபோக்க விரும்புபவர்கள் இவ்வாறு ஞானம் வந்துவிட்டதாக வரட்டுத் தத்துவம் கூறுவார்கள். இவர்கள் தங்கள் கடமைகள் முடிந்துவிட்டதாக எதனைக் கருதுகிறார்கள்.

பிறந்து வளர்ந்து கல்வி கற்று பட்டம் பதவி பெற்றுப் பின் திருமணம் செய்து பிள்ளைகளைப் பெற்று அவர்கள் கடமைகளை முடிப்பதைத் தானா? அப்படியானால் இவர்களது உலகம் என்பது குடும்பம் என்ற வட்டம் மட்டும்தானா? குடும்ப வட்டத்தைத் தாண்டி உலகத்திற்கு எப்போது வரப்போகின்றனர். குடும்பக் கடமையை புரியும் மனிதர் உலகத்திற்கு ஆற்றவேண்டிய தம் கடமையை ஏன் மறந்துபோகின்றனர்?

உலகத்திற்கு நல்லது செய்ய வேண்டும் என எண்ணிய பலர் பிரமச்சாரியாகவே இருந்து மறைந்தனர். பற்றுகளை அறுக்கவேண்டுமே தவிர வளர்க்கக்கூடாது. பற்றுகள் கடமைக்குத் தடைகளாக அமைந்து விடுகின்றன. பற்றினால் தவறுகள் மறைக்கப்படுகின்றன. இரக்கம் ஏற்படுகின்றது. இரக்கம் தவறானதல்ல. ஆனால் தகுதியானவர்களுக்கு இரங்கவேண்டும். நீதியான ஒருவனுக்குத் தண்டனை வழங்கும்போது இரங்கலாம்.

ஜேசுவை சிலுவையில் அறையக் கொண்டு சென்றவேளை அவர் பட்ட பாடுகளைக் கண்ட மக்களும்

**அ.மீனலோசினி**
**சாவகச்சேரி**

மாக்களும் கண்ணீர்விட்டன. ஆனால் ஜேசுவின் உடல் வேதனைப்பட்டதேயன்றி உள்ளம் வேதனைப்படவில்லை. காரணம் தான் பட்டபாடுகளைத் தேவனுக்கே அர்ப்பணித்தார்.

வாகீச முனிவர் கைலாய மலையில் அகப்பட்ட இராவணனை 'சாமகானம் பாடி இறைவனை மகிழ்வி' என இறைவனின் நோக்கம் புரியாது இராவணனுக்கு இரக்கம் காட்டினார். இதனால் அவர் அப்பராகப் பிறந்து 81 வருடங்கள் துன்பப்பட வேண்டி ஏற்பட்டது.

*(18ஆம் பக்கம் பார்க்க....)*

# தண்ணீரிலே மீன் அழுதால்...

சிறுகதை

பொழுது விடிந்து நீண்ட நேரம் ஆகியும் பூவிழியின் இதயம் இருட்டாகவே இருந்தது. அவள் தலையை சுவருடன் சாய்த்தாள். விழிகள் தண்ணீரில் ததும்பும் தாமரை போல் கண்ணீரிலே ததும்பியது. அவள் திருமணமாகி சில மாதங்கள்தான். அதுவும் காதல் திருமணம் தான்..

இதில் அவளது வீட்டாருக்கு சிறிதளவேனும் இஷ்ரம் இல்லை. அவளது கணவருக்கென்று சொந்தங்களும் இல்லை. எல்லாவற்றையும் மீறி இருவரும் பதிவுத் திருமணம் செய்துகொண்டு தனியாக குடித்தனமும் நடத்த ஆரம்பித்துவிட்டனர். இரண்டு மாதங்கள் இருவரும் ஈருடலும் ஓருயிருமாகத்தானிருந்தனர்.

யார் கண்பட்டதோ? காதலுக்கு கண்கள் இல்லை என்பது போல் அவர்கள் கல்யாணத்துக்கும் கண்கள் இல்லாமல் போய்விட்டது. இப்போது அவளது கணவன் 'அன்பு' அன்பே இல்லாதவனாக அவளை துன்புறுத்தி வருகிறான்.

அவள் எந்த ஆண்களுடன் கதைத்தாலும்அவர்கள் அவளின் கள்ளக்காதலன் என்று மிகவும் கீழ்த்தரமாக பேசுகின்றான். அவர்கள் அவளிற்கு என்ன உறவு, என்ன வயது என்றும் இல்லை. இத்தனைக்கும் அவனிடம் எந்தக் கெட்ட பழக்கவழக்கமும் இல்லை.

பூவிழி தலையை நிமிர்த்தி சுவரில் இருந்த கடிகாரத்தைப் பார்த்தாள். கடிகார முட்கள் இரண்டும் சில செக்கன்கள் ஒன்றாக நின்றுவிட்டு பூவிழியின் வாழ்க்கை மாதிரி விலகத் தொடங்கியது.அவள் ஆழ்ந்திருந்த கவலையில் இருந்து மீண்டு சமையல் செய்வதற்காக சமையற்கட்டுக்குச் சென்றாள்.

''பூவிழி ..யேய் பூவிழி...'' என உரக்க கத்தியவாறு வாசலில் நின்றான் அன்பு.

''இந்தா வந்திட்டேன்'' என்று மருட்சியான குரலில் கூறியவாறு வந்தாள் பூவிழி. கண்ணே மணியே என்று கூறிய வாய் இன்று அக்கினி கனலை வீசியது. வேடனைக் கண்ட மான் போல் அவன்முன் நின்றாள்.

''நான் வெளியிலே போகேக்கை கதவை பூட்டிட்டு இரு என்று சொன்னனான். இப்படியே திறந்துபோட்டு எவன்ரை வருகையையடி எதிர்பார்க்கிற...'' என்று நாக்கூசாமல் மிகவும் அசிங்கமாய் ஏசினான்.

''ஏனுங்கோ இப்படி அசிங்கமாய் எல்லாம் திட்டுறீங்கள்'' என்று கண்ணீர் விட்டாள் பூவிழி.

''என்னடி கதைக்கின்றாய்'' என்று ஓங்கி கன்னத்தில் அறைந்துவிட்டு ''நல்லாய் நடிக்கிறாய். இந்தியாவில பிறக்கவேண்டியவள். என் கிட்ட உந்த நடிப்பெல்லாம் வைச்சா துலைச்சுப் போடுவன்...'' என்றவாறே வாய்க்குள் ஏதோ கெட்டவார்த்தையைக் கூறிக்கொண்டு சென்றான்.


சாமியறையிலிருந்த சுவாமிப் படங்களைப் பார்த்து மனதுக்குள் சிரித்தான். அந்த சிரிப்புக்கு அர்த்தம் அவனுக்குத்தான் தெரியும். அவன் போவதை கண்வெட்டாமல் பார்த்துவிட்டு பெருமூச்சுடன் மீண்டும் சமையல் கட்டை நோக்கிச் சென்றாள். இரவு தூக்கத்துக்கு துக்கத்துடன் சென்றாள் அவள். மல்லாக்கப்படுத்தாள்.

''கடவுளே என்னை ஏன் இப்படிச் சோதிக்கிறாய். காலையில் கண்விழித்த நேரம் முதல் கண்ணுறங்கும் வேளைவரை என் வாழ்க்கை கண்ணீரில்தான் மூழ்கிக்கொண்டு இருக்கிறது. இறைவா எனக்கு ஏற்பட்ட நிலை போல வேறு எந்தப் பெண்ணுக்கும் ஏற்படக்கூடாது'' என்று இறைவனை வேண்டிக்கொண்டாள். தான் தனது பெற்றோர்களிற்கு செய்த துரோகத்தை எண்ணிக் குலுங்கிக் குலுங்கி அழுதாள். கண்ணீர் ஆறாக ஓடியது. அழுது அலுத்து அயர்ந்து தூங்கிப் போனாள்.

மறுநாள் மதியம் அவள் வீட்டுக்கு ஓர் பிச்சைக்கார வயோதிபர் வந்திருந்தார்.

''மகளே நான் சாப்பிட்டு நாலு நாளுக்கு மேலாகிறது. ஏதும் சாப்பிட இருந்தால் தயவுசெய்து கொடம்மா உன் குடும்பம் நல்லாயிருக்கும்'' என்று இரந்து கேட்டார்.

பூவிழி வரண்ட புன்னகையை சிந்திவிட்டு இல்லை என்று கூற முடியாமல்,



''இருங்கோ வாறன்'' என்று கூறிவிட்டு சமையல் அறைக்குள் சென்று சாப்பாடு கொண்டுவந்து கொடுத்தாள்.

ஏதோ காணாததைக் கண்டவர்போல் அதை வாங்கியுண்ணத் தொடங்கினார். அப்போது வாசலில் செருப்புச் சத்தங்கேட்டது. சக்திமான் வந்து நின்றது போல் நின்றான் அன்பு. அவன் கிழவரை விழுங்குவது போல் பார்த்தான். கிழவர் அதை எல்லாம் பொருட்படுத்தாமல் சாப்பாட்டிலேயே கவனமாக இருந்தார்.

''ஓ.... கிழவருக்கு என்னும் இருந்தால் கொண்டுவந்து பரிமாறு. எல்லாம் பரிமாறி முடிந்துவிட்டதா இல்லை இனித்தானா...'' என்று ஏளனமாக கேட்டான் அன்பு.

ஒருநிமிடம் அவள் மூச்சே நின்றது போல் இருந்தது. பின் அவள் பூவிழிகள் அக்கினி விழிகளாக மாறின. அவனை சுட்டுப் பொசுக்குவது போல் பார்த்தாள். அவள் பார்த்த பார்வை ஒன்றேபோதும். அவனை எப்படி எல்லாம் மனதுக்குள் திட்டித்தீர்த்தாள் என்பதைக் காட்டுவதற்கு. பூவிழி மனதில்திட்டவட்டமானமுடிவுடன்உள்ளே சென்றாள். அவனும் அவள் சென்றதைப் பொருட்படுத்தாமல் உள்ளே சென்றான்.

அடுத்த நாட்காலை கண் விழித்துப் பார்த்தபோது அவன் கண் முன்னால் இருந்த மேசைமேல் வெள்ளைக் காகிதம் ஒன்று காற்றில் ஆடிக் கொண்டிருந்தது. அதன்மேல் பாரம் வைத்திருந்ததனால் அது அதிலேயே இருந்தது. அதுவேறொன்றுமில்லை பூவிழி எழுதிய கடிதம்தான்.

'நான் வீடு செல்கின்றேன். தயவுசெய்து என் வாழ்வில் குறுக்கிட வேண்டாம்'

இப்படிக்கு பூவிழி.

என்று இருந்தது. அன்பு படித்துவிட்டு ஓர் நிம்மதிப் பெருமூச்சுவிட்டான். அவன் விட்ட மூச்சின் அர்த்தம் என்னவாக இருக்கும்.

அன்பு அந்தக்கிழமை மிகவும் சந்தோஷமாக இருந்தான். ஒருநாள் அதிகாலையிலேயே எழுந்து மிகவும் உற்சாகமாகக் குளித்துவிட்டு எங்கேயோ அவசரமாக பயணம் செல்பவன் போல் புறப்பட்டு தனது முகத்தினைக் கண்ணாடியில் பார்த்தான். முகம் சந்தோஷமாக இல்லை. சட்டையில் கொழுப்புப் பிரண்ட்மாதிரி அவனது முகத்திலும் சோகம் நிறைந்திருந்தது தெரிந்தது. அவன் அதைப் பொருட்படுத்தாது வெளியே வந்து கதவைப் பூட்டினான்.

'பூவிழி இப்போது எங்கே இருப்பாள்.' என யோசித்தான்.

அவள் தாய் வீடு சென்று அங்கிருந்து தன் தமையன்மாரிடம் வெளிநாடு செல்வதற்கு அலுவல் பார்த்து இன்றுதான் பிளைட் எனக் கேள்விப்பட்டான்.

'அவள் அதிகாலையிலேயே விமான நிலையம் சென்றிருப்பாள்' என மனதில் நினைத்தபடி சைக்கிளை எடுத்து சாலையில் ஓடவிட்டு தன் மனதினை எங்கேயோ செல்லவிட்டிருந்தான். எங்கே என்பது அவனுக்கு மட்டும்தான் தெரியும்.

அப்போது அவனது சைக்கிள் பெருஞ்சாலை ஒன்றிலே ஏறப்போவது தெரியாமல் ஆழ்ந்த யோசனையில் சென்றான். அவனது சைக்கிள் பெருஞ்சாலையிலேறவும் அச்சாலையின் எதிரேயிருந்து மிக வேகமாக வந்த வாகனமொன்றின் மீது மோதவும் சரியாக இருந்தது. எதிர்பாராது வந்ததால் இருவராலும் ஒன்றும் செய்யமுடியாதுவிட்டது. அன்பு சைக்கிளுடன் தூக்கி வீசப்பட்டு மரமொன்றுடன் மோதி கீழே விழுந்தான்.

அவன் மனத்தில் இருந்தவை என்னவென்று தெரியாமல் அவனது உயிர் வானத்தில் பறந்து இந்த உலகை விட்டே சென்றது. அப்போது பூவிழி இந்த நாட்டை விட்டுச் செல்லும் விமானமும் பறந்துகொண்டிருந்தது. அந்த நெடுஞ்சாலையில் அவனது உடல் அனாதரவாகக் கிடந்தது.

அவனின் உடலைச் சொந்தம் என்று சொல்வதற்கு இப்போது இங்கு யாருமே கிடையாது. அவனது உடலை பலர் வேடிக்கை பார்த்தார்கள். ஆனால் வேதனைப்பட யாருமே இல்லை.

வந்தவர்களில் சிலர் 'அட இவனா, இந்தக் கொடுமைக்காரனா? இவன் ஒரு பெண்ணை வைத்துப் படுத்திய பாட்டிற்கு இவனுக்கு இப்படித்தான் வேண்டும்' எனத் திட்டினர். அப்போது அங்கே வந்த ஒரு உருவம் அவனது உடலைக் கண்டதும் பதறிப் போனது. அந்த உருவம் டொக்டர் பல்லவகுமார். அவர் தனது மூக்குக்கண்ணாடியை துடைத்தவாறே சிலமாதங்களுக்குமுன் நடந்தவைகளை நினைத்துப் பார்த்தார்.

டொக்டர் பல்லவகுமார் அன்று எந்த நோயாளிகளையும் பார்க்காமல் மனதில் ஏதோவொரு கவலையுடன் தன் அறையிலேயே இருந்தார். நேரம் ஆகியும் அவர் அந்தஇடத்திலேயே இடிந்துபோய் அமர்ந்திருந்தார். அதற்கு காரணம் அன்புவின் தேகப் பரிசோதனை அறிக்கைதான்.

'இதை நான் எப்படி அன்புவிடம் சொல்லப்போகிறேன். இதை அவன் எப்படித் தாங்கிக்கொள்வான். அவன் திருமணம் செய்து ஒரு சில மாதங்கள் தான். அவனுக்கு இப்படிப்பட்ட கொடிய நோயினை ஏன்தான் இறைவன் கொடுத்தான். அவனிடம் நான் எப்படி ''நீ இன்னும் சில மாதங்கள்தான் உயிருடன் இருப்பாய்'' என்று சொல்வது. கடவுளே நீயெல்லாம் கடவுளே இல்லை. இல்லையென்றால் இப்படி ஒருவனுக்கு கொடுமை செய்வாயா நான் என்ன செய்வேன் அன்புவிடம் கூறுவதைத் தவிர வேறு வழியே இல்லை' என்று சிந்தித்தவாறு இருந்தார்.

அப்போது ''உள்ளே வரலாமா'' என்று கேட்டது ஒருகுரல். அது அன்புவின் குரல்தான்.

''வாருங்கள் அன்பு இப்படி உட்காருங்க'' என்று நாற்காலியைக் காட்டினார் டொக்டர் பல்லவகுமார்.

'' ஏன் டொக்டர் இன்று உங்கள் முகம் வாடியிருக்குது'' என்று கேட்டான் அன்பு.

''ஒன்று...ம்... இல்லையே.ஆ... என்ன நீங்கள் கோவிலுக்குப் போட்டு வருகிற மாதிரிக் கிடக்கு'' என்று கதையை மாத்தினார் பல்லவகுமார்.

''ஓம் டொக்டர் கடவுள் எனக்கு தாய் தந்தை உறவுகளை தாராது விட்டாலும் இப்போது அந்த உறவுகளிற்கு மேலாக எனக்கொரு மனைவியைத் தந்திருக்கிறார். இந்த உறவு உயிர் உள்ளவரையும் நிலைத்திருக்க வேண்டும் என்றுதான் இறைவனை வணங்கிவிட்டு வருகின்றேன்...'' என்று புன்னகைத்தான் அன்பு.

இந்த வார்த்தையை கேட்டவருக்கு இதயத்தைப் பிழிந்து சாறு எடுப்பதுபோல் இருந்தது. 'உனது காலம் முடியப் போகிறது' என எவ்வாறு அவனிடம் கூறுவது என யோசித்தார் டொக்டர் பல்லவகுமார்.

''என்ன டொக்டர் கப்பல் கவுண்ட மாதிரி யோசிக்கிறியள்'' என்றான் அன்பு கிண்டலாக.

''ஓம்.ம்.ம்.. கப்பல் ஒன்று கவிழ்த்தான் போகுது. அதை இனி யாராலும் காப்பாற்ற முடியாது'' என்றுவிட்டு பெரு மூச்சொன்றை விட்டார்.

''அன்பு நான் சொல்லப்போவதை கேட்டு உங்கள் இதயம் தாங்குமோ தெரியேல்ல. இதைச் சொல்லாமல் மறைத்து வைப்பதிலும் இனிப் பிரயோசனமில்ல. அன்பு நீங்கள் இன்னும் சிறிது நாட்கள்தான் உயிர்வாழ முடியும். உங்கள் உடம்பில் கொடிய புற்றுநோய் வந்து மாற்றமுடியாத அளவுக்கு வளர்ந்துவிட்டது...'' மிகவும் கவலையுடனும் பரபரப்புடனும் சொல்லிமுடித்தார்.

அன்பு ஒருகணம் அதிர்ந்து போனான். ''எ... என்ன டொ...க்..டர் சொல்லுறீங்கள். அது....எனது உடல்... பரி...சோதனை அறிக்கையாக இருக்க முடியாது.. நான்... நல்ல திடமாத் தானிருக்கிறன் வே....று யாரோவுடையதாகத்தான் இருக்கும்... நல்லாப் பாருங்கள் டொக்டர். பி...ளீ...ஸ்...'' என்று அவரின் காலைப்பிடித்துக் கதறினான் அன்பு.

டொக்டர் பல்லவகுமார் அவனின் துடிப்பைக் கண்டு அழுதேவிட்டார்.

''எழுந்திருங்கள் அன்பு. கடவுள் கல்லாக இருப்பது மட்டுமல்ல அவன் இதயமும் கல்லாகத்தான் இருக்கிறது. இல்லாவிட்டால் இப்படி ஒரு கொடுமையை நான் இதுவரையில் பார்த்ததேயில்லை.'' பரிதாபமான குரலில் சொன்னார் டொக்டர்.

''தயவு செய்து எப்படியாவது காப்பாற்றுங்கள் என்னை நம்பி என் மனைவி. தாய் சகோதரர்களை மறந்து என்னுடன் வந்தவள். அவளை அனாதரவாக விட்டுச்செல்ல என்னால் எப்படி முடியும். டொக்டர் என்னை நீங்கள் தான் காப்பாற்றவேண்டும்.'' என்று கெஞ்சினான் கதறினான் ஏதோவெல்லாம் செய்தான்.

டொக்டர் பல்லவகுமார் மரமாக அப்படியே நின்றார். இனி அவரால் ஒன்றுஞ் செய்யமுடியாது.

கடைசியாக அன்பு மரணத்தின் இறுதியில் நின்று கதைப்பவன்போல் கூறினான். ''டொக்டர் எனக்கு ஏற்பட்ட நிலைபோல் இங்கு ஒருத்தருக்கும் நடக்கக்கூடாது. கடவுள் ஏன்தான் என்னை இவ்வளவுதூரம் ஆளாக்கி இப்போது எனது கதையை முடிக்கப் பார்க்கிறானோ. கடவுளை நொந்து என்ன செய்வது எனது முடிவு இதுதான் என்றபின் யாரால் என்ன செய்யமுடியும். ஆனால் எனது நிலையைப் பார்த்தாவது இந்த கொடிய நோயுக்கு மருந்தை சீக்கிரம் கண்டு பிடியுங்கள்'' என விரக்தியாகக் கூறினான் அன்பு.

''நான் வருகின்றேன் டொக்டர் ''

''வெளியில் மழை வரும் போலிருக்குது கொஞ்சம் பார்த்துப் போங்கள்'' என்றார் டொக்டர்.

''இனி இந்த உடலுக்கு மழை பட்டால் என்ன வெயில் பட்டால் என்ன?'' வறட்சியான புன்னகையுடன் கூறினான்.

''டொக்டர் எனக்கு ஒரு கடைசி ஆசை. தயவுசெய்து அதை நிறைவேற்றுவீர்களா''

''சொல்லுங்கள் கட்டாயம் நிறைவேற்றுகிறேன்''

''எனக்கு இந்த நோய் இருப்பதை எந்தக் காலத்திலும் எனது மனைவி அறியக்கூடாது. இந்த விஷயம் இருவருடனும் இருக்கட்டும். சத்தியம் பண்ணுங்கள்'' என்றான்.

த. சத்தியசீலன்
வயாவிளான்

(19ஆம் பக்கம் பார்க்க....)

# சிறுவர் அரங்கம்



## பார்த்துப் போ தம்பி!

பார்த்துப் போ தம்பி!
நன்றாய்ப் பார்த்துப் போ தம்பி!
பாதையோரம் ஆபத்துண்டு பார்த்துப் போ தம்பி!
நிலத்தின் கீழும் மிதிவெடிகள் நிறைய இருக்கலாம்
நிலத்தின் மேலும் வெடிபொருட்கள் நிறைய இருக்கலாம்.
ஆபத்தான வெடிபொருட்களை அணுகக்கூடாது
அடையாளம் காணப்பட்டால் அதை அண்டக்கூடாது.
யுத்தம் எங்கள் மண்ணில் நின்று ஓய்ந்தபோதிலும்
அர்த்தமின்றி ஊனமாக்கும் பார்த்துப் போ தம்பி!

வ. நிலோஜன்,
யா/ நாவாந்துறை றோமன்
கத்தோலிக்க வித்தியாலயம்.


## பொது அறிவுத் தகவல்கள்

★இரண்டு நோபல் பரிசுகளைப் பெற்றவர் - மேரி கியூரி அம்மையார்
★ 27 தீவுகளைக் கொண்டது - லட்ச தீவு
★ஆங்கில எழுத்துக்களில் கூடுதலாகப் பயன்படுவது - E
★நதிகள் ஓடாத நாடு - சவுதி அரேபியா
★பூமிக்கு அருகே சூரியன் வந்து செல்லும் மாதம் - ஜனவரி
★உலகில் நாட்டின் பெயர் குறிப்பிடாது முத்திரை வெளியிடும் நாடு - இங்கிலாந்து
★இந்து மன்னனால் ஆளப்படும் ஒரே நாடு - நேபாளம்
★முதல் கின்னஸ் சாதனைப்புத்தகம் வெளிவந்த ஆண்டு -1955

## இவை உங்களின் ஓவியங்கள்



R.சாந்தினி
யா/இ. ம. ஆரம்ப பாடசாலை



சி. சிந்துஜா
கொக்குவில் இ. கல்லூரி



அ. சஞ்ஜவ்
யா/டிறிபேக் கல்லூரி

உயிர் குணமாகிய இலட்சியத்தை நோக்கி எவ்வளவு படி ஏறுகிறோமோ அவ்வளவு உயர்வை நாம் அடைகிறோம்.
- ஓர் அறிஞர்

## விடுகதைகள்

1. ஊசி போல வால் உருத்திராட்சம் போல வயிறு பாசி போல இறக்கை பந்து போல ஆட்டம். அது என்ன?
2. இரவும் பகலும் ஓய்வில்லை. படுத்தால் எழுப்ப ஆளில்லை. அது என்ன?
3. நூறு பேருக்கு ஒரு குடுமி. அது என்ன?
4. உப்பினை உண்டவன் உறங்காமல் அலைகிறான். அவன் யார்?
5. இருந்த இடத்தில் இருந்தபடி ஓடும். அது என்ன?
6. பொழுதுபோனால் பூந்தோட்டம். அது என்ன?
7. மஞ்சள் சட்டை மாப்பிளை மணமணக்கிறார் வீட்டிலே. அவர் யார்?
8. பூவில் பிறக்கும் நாவில் சுவைக்கும். அது என்ன?
9. வெள்ளைக் கத்தரிக்காய் கள்ளக் கூச்சல் போடுது. அது என்ன?
10. யானை படுக்க இடமுண்டு கடுகு மடிக்க இடமில்லை. அது என்ன?

G. சிந்துஜன். திருநெல்வேலி.

## கணக்குப் புதிர்

ஒருவன் சந்தைக்குப் போய் மாம்பழம், பலாப்பழம், வாழைப்பழம் ஆகியவற்றை 100ரூபாவுக்கு வாங்கினான். அப்பழங்களை எண்ணியபோது எல்லாமாக 100 பழங்கள் இருந்தன.

அவன் பலாப்பழம் 10ரூபா, மாம்பழம் 3ரூபா, வாழைப்பழம் 50 சதம் படி வாங்கினான். அப்படியாயின் எத்தனை ரூபாவுக்கு எத்தனை பலாப்பழம், மாம்பழம், வாழைப்பழங்கள் வாங்கியிருப்பான்?

## நிறந்தீட்டுவோம் வாருங்கள்

அன்புக் குழந்தைகளே!

உங்களுக்கு விதவிதமாக வர்ணம் தீட்ட ஆசைதானே.

இதோ இங்கு தரப்பட்டிருக்கும் படத்தில் உங்கள் கைவண்ணத்தைக் காட்டுங்கள் பார்க்கலாம.-



## அளவுக்கு மீறிய ஆணவம்



பள்ளிக்கூட விளையாட்டுத்திடலில் மாணவர்கள் நின்றுகொண்டிருப்பதைப் போல, ஊரின் வெளிப்பக்கத்தில் பல மரங்கள் இருந்தன. கோயில்க்கோபுரம் தலை தூக்கி நிற்பதைப் போல் அந்த மரங்களின் மத்தியில் ஒரு தென்னைமரம் மிகவும் உயரமாக இருந்தது.

அந்தத் தென்னைமரம் தான் மிகவும் உயரமாக வளர்ந்திருப்பதை எண்ணி எண்ணி மகிழ்ச்சிகொண்டது. தன்னைத்தானே பாராட்டிக்கொண்டது. அளவில்லாத தற்பெருமை கொண்டிருந்தது. அத் தற்பெருமை மெதுவாக வளர்ந்தது. அது 'நாமே உலகத்தில் உயரமான மரமாக இருக்கிறோம்' என்று எண்ணிக்கொள்ளும் ஆணவமாக மாறியது.

அந்தத் தென்னைமரம் தன்னைச் சுற்றியிருந்த மற்ற மரங்களை கேலி செய்யத் தொடங்கியது.

''குள்ளா குள்ளா...'' என்று அது பக்கத்திலிருந்த மரங்களைக் கூப்பிட்டு ஏளனம் செய்யும் பழக்கம் நாள்தோறும் அதிகரித்தது. அதனுடைய மட்டரகச் சொற்களைக் கேட்ட மற்ற மரங்களும், செடிகளும், புதர்களும் வேதனை கொண்டன. ஆனாலும் அவை பதில் பேசாமல் இருந்தன.

அந்தத் தென்னையின் அடிப்பாகத்தில் வயதான புதர் ஒன்று இருந்தது. அந்த மரத்தின் ஆணவப்போக்கைக் கட்டுப்படுத்தவேண்டும் என்று அது நினைத்தது. தென்னை மரத்தை அழைத்தது.

''நீ உயரமாக இருக்கலாம். அதற்காக மற்ற மரங்களைக் கேலிசெய்தால் அசு. உயர்ந்த பண்பாக இருக்காது'' என்று அறிவுரை சொன்னது.

அதைக் கேட்ட தென்னை மரம்,'' தன்னால் ஒன்றைச் செய்யமுடியாத கிழவர்கள் அறிவுரை கூறமட்டும் முன்வருவார்கள்'' என்று சொல்லி அந்தப் புதரையும் மட்டம் தட்டி விட்டது.

ஒருநாள் வானத்தில் மழை மேகங்கள் திரண்டன. இடியும் மின்னலும் போட்டி போட்டுக்கொண்டு வெளிப்பட்டன.. ஓர் இடி, மேகத்திலிருந்து வெளியே தாவியது. அதன் கண்ணில் மிக உயரமாக இருந்த தென்னைமரம் பட்டதால் அதன் மேல் அந்த இடி இறங்கியது. தென்னைமரம் கருகி அழிந்தது.

'' அளவுக்கு மீறிய ஆணவம் கொண்டதால் தென்னைமரம் அழிந்துவிட்டது'' என்று பக்கத்திலிருந்த செடியிடம் சொல்லி அதற்காக வருத்தப்பட்டது புதர்.

## ஜோக்



'' கதைப்புத்தகங்களைப் படிக்கும் போது வராத தூக்கம் பாடப் புத்தகத்தை எடுத்ததும் உடனே வருதே. ஏன்டா?''

'' கதைப்புத்தகங்களில் பரீட்சை வைக்கிறதில்லையே.... அதனால்தான்!''

## விடைகள்

### விடுகதைகள்

1. தும்பி
2. இதயம்
3. விளக்குமாறு
4. கடல்
5. கடிகாரம்
6. வானம்-நட்சத்திரம்
7. வாழைப்பழம்
8. தேன்
9. சங்கு
10. சவுக்குமரம்

### கணக்குப் புதிர்

5 பலாப்பழம் 50ரூபா
1 மாம்பழம் 3ரூபா
94 வாழைப்பழம் 47ரூபா



# மகளிர் உலகம்

## சமைத்துச் சுவைப்போம்

### மிக்ஸ் ரொபி



தேவையான பொருட்களை

| | |
|---|---|
| பேரீச்சம்பழம் | - 1/4Kg |
| உருளைக்கிழங்கு | - 1/4Kg |
| ரவை | - 150g |
| சீனி | - 350g |
| தேங்காய்ப்பு, | - பாதி தேங்காய் |
| வனிலா | - 1மே.கரண்டி |
| கஜு". | - 50g |
| ஏலப்பொடி | - அளவிற்கு |

செய்முறை:-

முதலில் றவையை துப்பரவாக்கி வறுத்தெடுக்கவும். தேங்காய்ப்பூவையும் பொன்னிறமாக வறுத்தெடுக்கவும். உருளைக்கிழங்கை அவித்து தோல் நீக்கி நன்கு மசிக்கவும். பேரீச்சம்பழத்தை துப்பரவாக்கி சிறுசிறு தண்டுகளாக்கவும். பின் 3/4 டம்ளர் நீரைக் கொதிக்கவைத்து சீனியைப் போட்டு பாணி காய்ச்சவும். பாணிபதம் வந்ததும் அதனுள் வறுத்த றவை, தேங்காப்பூ, உருளைக்கிழங்கு, பேரீச்சம்பழம் ஆகியவற்றைக் கொட்டி நன்கு கிளறவும். பின் அதனுள் கஜு", ஏலப்பொடி, வனிலா ஆகியவற்றையும் இட்டு நன்கு கிளறியபின் சட்டியில் ஒட்டாத பதம் வந்ததும் இறக்கி மாஜரின் பூசிய தட்டில்க் கொட்டி சமப்படுத்தி சிறிது நேரத்தின்பின் விரும்பிய வடிவில் வெட்டி பரிமாறலாம்.

## இன்றைய சூழலில் பெண் கல்வியின் முக்கியத்துவம்

(சென்றவாரத் தொடர்ச்சி....)

இன்று பெணகளின் முன்னேற்றத்துக்காக மகளிர் அபிவிருத்தி நிலையம் ஆரம்பித்து உடல்நலம், பிரசவ தாய்மார்களுக்கு உணவு ஊட்டம், பெண்கள், மாணவரின் கல்வி வசதிகு உதவுதல், பெண்களுக்கு பொருளாதாரத் திட்டங்களுக்கு மீளளிக்கபபடும் கடன் வழங்குதல், பெணகளுக்கு தொழில்நுட்பப் பயிற்சியளித்தல், நூலக சேவை போன்ற செயற்பாடுகளை அமுல்படுத்தும் திருமதி சறோஜா சிவசந்திரன் எமது நாட்டின் பெண்களின் உரிமைக்காக வன்முறைகளை எதிர்த்தும் பெண் உரிமை, மனித உரிமை மீறல்களைத் தட்டிக் கேட்கும் ஒரு புதுமைப் பெண்ணும் ஆவார். இந்தப் புரட்சிப் பாதைக்கு துணைநிற்பதும் அவர் பெற்ற கல்வியே. கல்வி அறிவு இருக்கும் ஒருவருக்குத்தான் எதையும் மற்றவர்களுக்கு எடுத்துக்கூறும் ஆற்றல் இருக்கும். எனவே பெண் கல்வி இங்கு பெருமைக்குரியதாகின்றது.

இந்தியா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் சமத்துவ அடிப்படையில் ஆண் - பெண்பாலார் உறவை மேம்படுத்துவதற்கான முறையில் பாடவிதான உபகரணங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. சீனாவில் தன்னம்பிக்கையுள்ள பெண்பிள்ளைகள் ஆண்களுடன் சமமாகப் படிக்கவும், வேலை செய்யவும் தேவை, திறன், மனப்பாங்கை வளர்க்கும் வகையிலே பாடநூல்கள் அமைந்துள்ளன. இலங்கையைப் பொறுத்தும் பால் வேறுபாட்டை கல்வியானது குறுகிய காலத்தில் குறைத்துவிட்டது. ஆனாலும் தோட்டப்பகுதிப் பெண்கள், கிழக்கில் கிராமப்புற முஸ்லிம் பெண்களும் கல்வி பயிலும் பெண்களுக்கே உரிய கட்டுப்பாட்டினால் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதை அறிக்கைகள் சுட்டுகின்றன. இந்நிலையும் மாறிப் பெண் கல்வியின் முக்கியத்துவம் புரிய வைக்கப்படவேண்டும்.

பெண்கள் சகல துறைகளிலும் காலடி பதித்து முன்னேற்றப் பாதையில் செல்லும் அதேவேளை, மறுபுறமாக பெண்கள் அந்தஸ்துக் குறைந்த நிலையிலே இன்றும் காணப்படுவதையும் மறுக்கமுடியாது.

☼ இன்றும் இந்தியாவிலே விதவை பெண்கள் ஒடுக்கப்பட்ட நிலையிலே வாழ்ந்து வருவது.

☼ உலகில் வேலை செய்யும் மக்கள் தொகையில் **1/3** பங்கினர் பெண்கள். எனினும் ஆண்களை விடக் குறைந்த சம்பளம் பெறும தொழில்களிலே அமர்த்தப்படுகின்றனர்.

☼உலகில ஆண்கள் பெறும் ஊதியத்தைவிட பெண்கள் பெறும் ஊதியம் 30 தொடக்கம் 40 சதவீதத்தால் குறைவானது.

☼ உலகில் 1.3 மில்லியன் ஏழைகளில் 70 சதவீதமானோர் பெண்கள் (வறுமையால் பீடிக்கப்படும் ஆபிரிக்க பெண்கள்).

☼ மகளிர் உலக உணவில் அரைவாசியை உற்பத்தி செய்கின்றனர். எனினும் அவர்களுக்குச் சொந்தமாக நிலம் இல்லை. கடன் வசதிகள் பெறுவது கூட கடினம்.

இவை போன்ற காரணங்களால் மகளிர் உரிமையைப் பெற போராட்டம் நடத்தியதன் விளைவாக 1975 இல் 'உலக மகளிர் தினம்' பிரகடனப்படுத்தப்பட்டது. 1976 - 1986 சர்வதேச மகளிர் தசாப்தமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. பெண்களின் பின்தங்கிய நிலையானது நாடொன்றின் பொருளாதார அல்லது அபிவிருத்திக்குத் தடையாக உள்ளதாகக் கருதப்பட்டு, பெண்கள் கல்வியை உயர்நிலைக்குக் கொணடுவருவதன் மூலம், சிசு மரணம், மந்தபோசணை நிலைமையைக் குறைத்துக்கொள்ளலாம.

ஆசியாவில் சிசு மரணம், மந்த போசாக்கு நிலைமைகள் மிகக் குறைந்த மட்டத்தில் இலங்கை, கொறியா இரு நாடுகளில் மட்டுமே காணப்படுவதாக குறிப்பிடபபட்டு இதற்குக் காரணம் இந்நாடுகளில் பெண்களது கல்வி உயர் நிலையில் காணப்படுவதே என விளக்கப்பட்டுள்ளது. எனவே பெண்கல்வி மூலம் மந்தபோசணை, சிசு மரணம் போன்றவற்றைக் குறைக்கலாம்.

பெண்களின் சிறப்பைப் பற்றி மார்க்ஸிம் கோர்க்கி,

'உலகிற்கு சகலத்திற்கும்
உணர்வினை அளிப்பது
சூரிய ஒளியும் அம்மாவும் ஆகும'

என்கிறார்.

இன்றைய சூழலிலே இயந்திரத்தன்மை கொண்ட மனித வாழ்விலே போட்டியும், பொறாமையும், பதவிமோகமும் அதிகரித்துள்ளது. மனிதப் பண்புகளை இழந்து ஆத்மீக சிந்தனைகளுக்கே மனதில் இடமில்லாமல் போய்விட்டது. கல்வியினால் பொருளாதாரம மட்டும் வளர்ந்தால் போதாது. சிறந்த விழுமியங்களும் பேணப்பட வேண்டும். ஆன்மீகம் என்றால் என்ன என்று கேட்குமளவுக்கு ஒழுக்கச் சீர்கேடுகள் மலிந்துள்ள இன்றைய சூழலிலே ஆன்மீக சிந்தனையை வளர்த்து, அறப்பண்புகளை ஊட்டி மக்கள் மனதிலே இறை எண்ணங்களை விதைத்து வளர்த்துவரும் சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி போன்றோரின் செயல்வடிவங்கள் பெண்களின் ஆன்மீக பெருமைக்கு ஒரு எடுத்துக்காட்டு. இந்த தெய்வீக நிகழ்வுகள்தான் மக்களை அறவழியிலே நடக்க வேண்டும் என்பதை ஞாபகப்படுத்தும் முன்மாதிரி. பட்டங்கள் பெறுவது சட்டங்கள் செய்வது மட்டுமன்றி ஆன்மீகப் பாதைக்கு வழிகாட்டவும் பெண்களுக்குக் கல்வி அவசியமானது.



கருத்துக்களைத் தொகுத்துப் பார்க்கும்போது நீண்டகால வரலாற்றுத் தொடர்ச்சியிலே சுரண்டப்பட்டு, அடிமைப்படுத்தப்பட்டு வந்த பெண்ணினம் கல்வியிலே சம அந்தஸ்துப் பெற்ற காரணத்தினாலே பல துறைகளிலும் ஆண்களுக்கு சரிநிகர் சமனாக செயற்படுவதனாலே ''எந்த ஒரு வளர்முக நாடும் தன் எதிர்கால நலனை மேற்கொள்ளக்கூடிய சிறந்த முதலீடு பெண்பிள்ளைகளுக்கு கல்வியுட்டலே'' என சர்வதேசமும் ஒப்புக்கொள்ளும் அளவிற்கு பெண்களுக்கு கல்வி வழங்குதல் முக்கியப்படுத்தப்பட்டுள்ளது. பெண்களுக்கு கல்வியுட்டுவதன் மூலம் உடல் நலம், உணவு ஊட்டம், நோய்த் தடுப்பு, வாழ்க்கை எதிர்பார்ப்பு, ஆக்கத்திறன் மேம்பாடு, அபிவிருத்தி அனைத்தையும் உயரச் செய்து சர்வதேசத்தையும் அபிவிருத்திப் பாதையில் கொண்டு செல்லலாம் என்பது உலகறிந்த உண்மை.

பெண், சமூகத்தில் தலைநிமிர்ந்து வாழவும், எந்தச் சூழ்நிலையிலும் ஏற்படும் சவால்களைச் சமாளிக்கவும், ஆணாதிக்க அடக்குமுறையிலிருந்து மீளவும், விழுமியங்களைப் பேணி வாழவும் இன்றைய சூழலிலே பெண்களுக்கு கல்வி ஒரு கவசமே எனும் அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது.

*நன்றி: நங்கை*

## மனதில் உறுதி வேண்டும்!

☼ சிறந்த பெர்சனாலிட்டி உடையவராக முதலில் தேவைப்படுவது பொசிட்டிவ் எண்ணம் 'ஆமா இதை செய்து என்ன ஆகப்போகிறது' என்று சலித்துக்கொள்ளும் பழக்கத்தைத் தூக்கி எறியுங்கள். இப்படிச் செய்தால் இது நடக்கும் என்று வழிகளை ஆராய்ந்து செயலில் இறங்குங்கள்.

☼ தேவையில்லாமல் பேசுவதை தவிருங்கள். பேசிக்கொண்டிருக்கும் நேரத்தில பல செயல்களை முடிக்கலாம். இது என்றால் எனக்கு ரொம்பப் பிடிக்கும் அது என்றால் போதும் வேறு எதுவும் வேண்டாம் என்று ஒவ்வொன்



றைப் பற்றியும் புராணம் பாடாமல் எல்லாவற்றையும் கற்றுக் கொள்ளுங்கள்.

☼ நேர்முகத் தேர்விற்கோ அல்லது வேலை விஷயமாக உயரதிகாரியைப் பார்க்கவோ போகும் போது கதவைத் தட்டி அனுமதி கேட்டு உள்ளே போகவும். அவர்கள் சொல்கிறவரை அமரவேண்டாம். வெளியேறும்போது சந்தேகத்தோடு திரும்பிப் பார்க்காதீர்கள்.

☼ மரியாதையை வெளிப்படுத்த இருக்கையின் நுனியில் உட்கார்ந்து பேசவேண்டியது இல்லை; நிமிர்ந்து கம்பீரமாக உட்காருங்கள். சரிந்து உட்காராதீர்கள். நேராகப் பார்த்துப் பேசுங்கள்.

☼மூளையை அடிக்கடி சேர்விஸ் செய்யுங்கள். என்ன குறை, ஏன், யாரால் தவறு நடந்தது என்று அலசி ஆராய்ந்து பழகுங்கள். உண்மை தெரியுமுன் உங்கள் கருத்தைச் சொல்லாதீர்கள்.

☼ பெரிய பதவிக்கு வரவேண்டுமென்று நினைத்தால் போதாது. இலக்கையடைய ஐந்தாண்டு இருந்தாலும், என்ன படிப்பது? எப்படிப் பழகுவதென இன்றே கற்றுக் கொள்ளத் தொடங்குங்கள்.

☼ இல்லத்தரசி என்றால் நேரத்தைப் பற்றி கவலைப்பட வேண்டாமா? நாள் முழுக்க வீட்டு வேலை பார்க்காமல் குறிப்பிட்ட நேரத்திற்குள் முடித்து, பத்திரிகை, புத்தகங்கள் படியுங்கள். அவை அறிவை மெருகேற்றுவதோடு விஷயம் தெரிந்தவளென்ற பெயரையும் வாங்கித்தரும்.

☼ வேலைகளைக் கவனித்துக் கொண்டு ரீ.வி பார்க்காதீர்கள். அது வேலையின் வேகத்தை, தரத்தைக் குறைக்கும். அது ரெலிவிஷனல்ல. செயல்களைக் கட்டிப்போடும் ரெலிவிஷம் என்பதை மனதில் வையுங்கள்.

☼ மாடு மாதிரி வேலைசெய்கிறேன் என்று புலம்புபவர்களுக்கு ஒரே தீர்வு மாடு மாதிரி வேலை செய்யாததுதான். இன்றைக்கு இவ்வளவுதான் முடியும் என திட்டமிடுங்கள். அதில் குறையில்லாமல் செய்து முடியுங்கள்.

☼ வீட்டிலோ நண்பரிடமோ பிரச்சினையென்றால் 24 மணி நேரத்திற்கு மேல் பேசாமல் இருக்காதீர்கள். சூழலைச் சரியாக கையாள்வதும், பிரச்சினையை நிதானமாகச் சமாளிப்பதும் உங்கள் மேல் நல்லாபிப்பிராயத்தை ஏற்படுத்தும்.

☼ கோபமாக இருக்கும்போது பேசுவதைத் தவிர்த்துவிடுங்கள். காரணம் கோபம் உங்கள் வார்த்தைகளை கூர் தீட்டித்தான் வெளியில் அனுப்பும்.

☼ வீடு என்பது மகிழ்ச்சியோடு வாழ்வதற்கான இடம். எல்லோரையும் சந்தோசமாக வைத்திருப்பது பெரிய கலை. சிரிக்கவையுங்கள் யாரையும் காயப்படுத்தாமல்.

☼ குரலிலிருந்து அதிகாரத்தை அகற்றுங்கள். இதை இப்படிச் செய்யாதே, எத்தனை தடவை சொல்லியிருக்கிறேன் என்று புலம்பாதீர்கள். நீங்களே அதைத் திருத்திவிட்டு புன்னகை செய்யுங்கள். கனிவு, அக்கறை, உரிமை சேர்ந்த புன்னகைக்கே நல்ல பலன் கிடைக்கும்.

☼இப்படித்தான் நடந்திருக்கும் என்று மூளையைக் கட்டிப் போடதீர்கள். கணவன் - மனைவியிடையே சண்டை வரக் காரணம் பிடிவாதம்தான். உங்கள் மேல் தவறிருந்தால் ஈகோவை கழற்றி வைத்துவிட்டு மன்னிப்புக் * கேளுங்கள்.

☼ 'அவகூட மனுஷர் பேசமுடியுமா' என்று சிலரைப் பார்த்தாலே ஓடத் தோன்றும். அவர்களிடம் காரியம் சாதிப்பதுதான் சாமர்த்தியம். எதையும் சவாலாக எடுத்து முடித்துக் காட்டுங்கள்.

☼ எந்தச் செயலையும் ஈடுபாட்டோடு செய்யுங்கள். திறமைக்கு மீறிய வேலைகளை இழுத்துப் போட்டு அவப்பெயர் வாங்கணுமா என்ன?

இவற்றைக் கருத்தில் கொண்டு மனதில் உறுதியோடு வாழ்க்கைப் பயணத்தில் கால் தடம் பதித்தீர்களானால் என்றும் வாழ்க்கை சொர்க்கமே.

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் தரும்

## மூலவுயிருருவை பேணி பாதுகாத்தல் மூலம் தாவர பிறப்புரிமை மூலவளங்களை பாதுகாத்தல்

**Germplasm preservation & conservation of plant genetic resources**

*(சென்றவாரத் தொடர்ச்சி...)*

### Recalcitrant type

இவ்வகை விதைகள் மிகவும் குறைந்த வெப்பநிலையிலோ அல்லது குறைந்த சார் ஈரப்பதனிலோ சேமிக்கமுடியாது. எனவே இவை **0-10⁰ c** வெப்பநிலையில் குறைந்த வருடத்திற்கு (1-5வருடம்) சேமிக்கப்படுகின்றது.

இடைப்பட்ட சேமிப்பு வகை (**orthodou** க்கும் **Recalatrant** இற்கும் இடையில்).

உதாரணமாக பப்பாசி ஆனது **10 - 12%** ஈரப்பதனில் சேமிக்கப்படுகின்றது.


விதை வங்கியில் விதைகள் ஆனது அலுமினியத்தால் செய்யப்பட்ட பைகளில் இடப்பட்டு சேமிக்கப்படும். இதனால் விதைகள் ஈரப்பதனை வளிமண்டலத்தில் இருந்து உறிஞ்சல் தடுக்கப்படும்.

பெருக்கமடையும் தாவரங்கள் உதாரணம் வேர், வேர்க்கிழங்கு, ஓர்கிட போன்றவற்றைப் பாதுகாத்தலில் பிரச்சினைகள் உள்ளன. மேறபடி தாவரங்களை அவற்றின் வேர், வேர்க்கிழங்கு, முகிழ், வெட்டுத் துண்டு, அரும்பு போன்றவற்றைச் சாதாரண சூழலில் வெளியே (**field**) பராமரித்தல் செலவுகூடிய முறையாகும்.

இழைய சேமிப்புமூலம் குறுகிய - மத்திம சேமிப்பை மேற்கொள்ளலாம். ஆனால் அதிதாழ் வெப்பநிலை பாதுகாப்பு (**Cryopreurvation**) மூலம் நீண்டகால சேமிப்பை மேற்கொள்ளலாம்.

ஜெயராணி நந்தகுமார்
சிரேஷ்ட விரிவுரையாளர்
தாவரவியல் துறை.
யாழ். பல்கலைக் கழகம்

**தாவர பிறப்புரிமை மூலவளநிலையத்தின் செயற்பாடுகள்**




### இளையவளர்ப்பு மூலவுயிருரு பாதுகாப்பு

மூலவுயிருரு பாதுகாப்பு மூலம் நீண்டகாலம் சேமிக்கமுடியாத விதைகளைக்கொண்ட தாவரங்கள் உதாரணம் **Coffee, oilpalm** மற்றும் பதியமுறைமூலம் இனப்

சேமிப்பின்போது வளர்ச்சியைத் தடுப்பதற்கு வளர்ப்பு நிபந்தனைகளை மாற்றிக் கையாள வேண்டும். ஆனால் அவை வாழ்தகவை இழக்காமல் இருப்பது முக்கியம். அத்துடன் அவை மிகக் குறைந்த வீத வளர்ச்சியைக் காட்ட வேண்டும்.

#### பிரதான அனுகூலங்கள்

கண்ணால் பார்த்து ஏற்படும் சேதங்களைத் தவிர்க்கலாம்.

நோயாக்கிகளுக்கான பரிசோதனையை மேற்கொள்ளலாம்.

சர்வதேச பரிமாற்றத்திற்கு மாதிரிகளை இலகுவாக உட்படுத்தலாம்.

இழைய வளர்ப்பு மாதிரிகளைச் சேமித்தலுக்கான இடம் குறைவாகத் தேவைப்படும். பெருக்கல் வீதம் கூடுதலாக உள்ளது. இயற்கை அழிவுகளால் சேதம் இல்லை.

இழையவளர்ப்பு புராமரிப்புக்குக் குறைந்த வளர்ச்சி வீத சேமிப்பு (**Reduced growth storage**) பாவிக்கப்படுகிறது.

**Plant let or shoot** (சிறுதாவர முதல் அல்லது அங்குரநுனி) ஆக சேமிக்கப்படும்.

செறிவைக் குறைத்தல் அல்லது **Sucrose** இன் செறிவை மிகையாக அதிகரித்தல் அல்லது குறைத்தல் அல்லது **Manitol** அல்லது **Sorbitol** (பிரசாரண செறிவாக்கிகள்) சேர்த்தல்.

**Whites medium (A low-salt medium)** ஆனது **Xanthosoma sagettifolium** சிறு தாவரமுதல் ஐ 80 கிழமைக்கு பாதுகாக்க பயன்பட்டது.

**(Acheampung & Hen shaw,**1984)

அடைகாக்கும் வெப்பநிலையைக் குறைத்தல் ஆனது **Subculture** எண்ணிக்கையைக் குறைக்கும். அடைகாக்கும் போது ஒளியின் செறிவைக் குறைத்தும் வளர்ச்சி வீதத்தை மிக வினைத்திறனுடன் குறைக்கலாம்.

*(தொடரும்)*

## இவ்வாரப் புதிர் இல:104

**உலகில் சிறிய நாடு எது?**

இப்புதிருக்கான சரியான விடையை கீழுள்ள கூப்பனில் எழுதி,

பத்திராதிபர்
யாழ். விஞ்ஞானச் சங்கம்
மே/பா. தாவரவியல் துறை
யாழ். பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு 15.07.2004 இற்கு முன்னதாகக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.

சரியான விடை எழுதுபவர்களில் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு தலா 100 ரூபா பரிசாக வழங்கப்படும்.

தவிர்க்கமுடியாத காரணங்களால் பரிசுபெற்றோர் பெயர்களை இவ்வாரமும் அறிவிக்க முடியவில்லை.

### புதிர் இல:102

**சரியான விடை:**

**Naga tree (நாகமரம்) மரக்கட்டை Iron Wood (இரும்பு மரக்கட்டை) என அழைக்கப்படும்.**

## விஞ்ஞானத் துளிகள்

**Reduced growth storage** (குறைந்த வளர்ச்சி சேமிப்பு) நான்கு முறைகளில் செய்யப்படுகின்றது.

1. அடைகாக்கும் வெப்பநிலையைக் குறைத்தல் (**Incubation temperature**)
2. இழையவளர்ப்பு ஊடகங்களை கையாளல்.
3. மேற்கூறிய இரு முறைகளின் சேர்க்கை.
4. வளிமண்டல சுற்றாடலை மாற்றியமைத்தல்.

குறைந்த வளர்ப்பைத் தூண்டும் ஊடகமானது அதில் உள்ள பதார்த்தங்கள் குறைந்த வளர்ச்சி %ஐ காட்டக்கூடியவாறு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. இதில் குறைந்த உப்பு செறிவுள்ளதாக அல்லது **Ms basal medium** இன்

**யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்**
**புதிர் இல. 104**

சரியான விடை :............................................
முழுப்பெயர் :............................................
முகவரி :............................................
............................................
கையொப்பம :............................................

## மஞ்சளின் மகிமை

❊ மஞ்சளை உணவில் சேர்த்தால் பசியை உண்டாக்கும்.

❊ மஞ்சளை உணவில் சேர்ப்பது வெறும் நிறத்திற்காக மட்டுமல்ல, மணத்திற்காகவும், உணவிலுள்ள தேவையற்ற கிருமிகளை அகற்றும் என்பதாலும்தான்.

❊ மஞ்சளைச் சுட்டு முகர மூக்கில் நீர் வடியும் ஜலதோஷம் நிற்கும்.

❊ அடிபட்டதினால் ஏற்பட்ட இரத்தக்கட்டு, உட்காயங்களை நக்க மஞ்சளைப் பற்றுப் போடலாம்.

❊ வெறும் மஞ்சள் பொடியை புண்கள் மீது தூவ புண்கள் ஆறும்.

❊ மஞ்சளுடன் வேபபிலையை அரைத்துப் பூச அம்மையினால் ஏற்பட்ட கொப்புளங்கள் ஆறும்.

❊ மஞ்சள், வேப்பிலையுடன் சிறிது வசம்பும் சேர்த்து அரைத்துப்பூச மேகப்படை, விஷக்கடிகள், வட்டமான படைகள் போகும்.



❊ மஞ்சளை இலுப்பை எண்ணெயில் குழைத்துத் தடவ கால் வெடிப்பு குணமாகும்.

❊ கஸ்தூரி மஞ்சளுடன் வெண்கடுகு, சாம்பிராணி சேர்த்தரைத்து சுளுக்குகளுக்கு பற்றுப் போட்டால் குணமாகும்.

❊ மஞ்சளும் கடுக்காயும் சேர்த்துப்பூச சேற்றுப்புண் போகும்.

❊ மஞ்சள், சுட்ட சாம்பலுடன் தேங்காய் எண்ணெய் சேர்த்துப் பூச ஆறாத புண்கள் ஆறும்.

❊ மஞ்சளுடன் சாம்பிராணி, ஏலம், சுக்கு சேர்த்து அரைத்து தலையில் பற்றுப் போட தலைவலி போகும்.

❊ மஞ்சளுடன் சுண்ணாம்பு, மூலிகையும் சேர்த்து மிகவும் கடினமான எலும்பு முறிவுக்கு கட்டப்படுகிறது.

❊ மஞ்சள் தூளுடன் சிறிது கற்பூரத்தூளையும் சேர்த்து கைகால் சில்லிட்டதற்கு பூச சூடேறும்.

❊ கஸ்தூரி மஞ்சள், சந்தனம் சம அளவு அரைத்துப் பூச முகப்பருக்கள் மறையும்.

❊ பெண்கள் முக்கியமாக முகத்தில் மஞ்சளைப் பூசுவதற்குக் காரணம் முகத்தில் முடி வளர்வதைத் தடுப்பதற்காகும்.

❊ பெண்கள் மஞ்சளைப் பூசிக குளிப்பதனால் அவர்கள் மேனி பொன்நிறம் பெறும்.

## உங்கள் எடை எவ்வளவு!

பலருக்கு தங்கள் உயரம், எடை கூடத் தெரியாது. உடல் நிலையை அளந்து காட்டும், எச்சரிக்கை செய்யும் அபாயமணி தான் எடை. எடை கூடிவிட்டது என்றாலே நாம் உஷாராக இருப்பது நல்லது.

சரியான எடை என்றால் என்ன? இதோ தெரிந்து கொள்ளுங்கள். நீங்கள் எவ்வளவு உயரம் இருக்கிறீர்கள் என்று அளந்துகொள்ளுங்கள். எவ்வளவு அடி, அங்குலம் இருக்கிறீர்கள் என்று தெரிந்தால், எவ்வளவு எடை இருக்கலாம் என்பதை இங்கே பார்த்துக்கொள்ளுங்கள்.

| உயரம் (அடி, அங்குலம்) | ஆண்களுக்கான எடை (கிலோ) | பெண்களுக்கான எடை (கிலோ) |
|---|---|---|
| 5’ | 50 முதல் 54 | 50 முதல் 54 |
| 5’1” | 51 முதல் 55 | 51 முதல் 55 |
| 5’2” | 56 முதல் 60 | 53 முதல் 56 |
| 5’3” | 57 முதல் 61 | 54 முதல் 58 |
| 5’4” | 59 முதல் 63 | 56 முதல் 59 |
| 5’5” | 60 முதல் 65 | 57 முதல் 61 |
| 5’6” | 62 முதல் 66 | 58 முதல் 63 |
| 5’7” | 64 முதல் 68 | 60 முதல் 65 |
| 5’8” | 65 முதல் 70 | 62 முதல் 66 |
| 5’9” | 67 முதல் 72 | 64 முதல் 68 |
| 5’10” | 69 முதல் 74 | 65 முதல் 70 |
| 5’11” | 71 முதல் 76 | 67 முதல் 71 |
| 6’ | 73 முதல் 78 | 68 முதல் 72 |

| | | | |
|---|---|---|---|
| | சந் ராகு | சுக் | சூரி சனி |
| | இராசி | | செவ் புதன் |
| | நிலை | | குரு |
| | | கேது | |

# இவ்வார இராசி பலன்கள்

## (12.07.2004 முதல் 18.07.2004 வரை)

### மேடம் (அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்)

இவ்வாரம் உங்களுக்கு தொழில் உயர்வு, மேன்மை, இலாபம் கூடும். செய்யும் கரும காரியங்கள் யாவும் வெற்றியளிக்கும். களத்திர சுகம், இல்லற நலம், குடும்ப சுகம், மனை விருத்தி ;உத்தியோகத்தருக்கு செல்வாக்கு, அதிகாரம் மிகும். உயர் அதிகாரிகளின் அனுசரணையை அடைய முடியும். வியாபாரிகள், விவசாயிகள் தத்தம் தொழில் முறையால் மேன்மை பெறுவர். மாணவர் கல்வியில் ஊக்கமும் விடாமுயற்சியும் அடைவர்.

### இடபம் (கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிடம் 1,2ஆம் பாதம்)

இவ்வாரம் தேகாரோக்கியம் இடையிடையே பாதிப்படையும். தனம், பொருள் வரவில் மந்தநிலை தோன்றும். வெளிநாட்டுச் செய்திகள், நிதி வரவுகள் தாமதமாகும். உத்தியோகத்தர்க்கு கணிசமான வேலைச்சுமையுண்டு. கன்னியரின் திருமண சம்பந்த நிகழ்வுகள் சாதகமாகத் தொடரும். விவசாயிகள் பயிர் உற்பத்திகளைச் சந்தைப்படுத்தலில் தாமதங்கள் ஏற்படும். மாணவர்க்கு கல்வியில் விடாமுயற்சியும் ஊக்கமும் அவசியம்.

### மிதுனம் (மிருகசீரிடம் 3,4 திருவாதிரை, புனர்பூசம் 1,2,3ஆம் பாதம்)

இவ்வாரம் ஆயுட்பலம், தேகாரோக்கியம் மிகும். தனம், பொருள், வாகன, குடும்பம் அபிவிருத்தியடையும். தர்ம காரியங்களில் ஈடுபாடும் ஆர்வமும் கிட்டும். தொழில் மேன்மை, இலாபம் அதிகரிக்கும். சத்துருத் தொல்லை, கடன்பழு நீங்கும். வர்த்தக நடவடிக்கைகள் சுமாராகவே இருக்கும். உத்தியோகத்தரின் செல்வாக்கு, அதிகாரம் கூடும். விவசாயிகளுக்கு கூலியாட்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும். மாணவர்க்கு கல்வியில் ஊக்கமும் விடாமுயற்சியும் தேவை.

### கடகம் (புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்)

இவ்வாரம் குடும்ப அங்கத்தவரிடையே நல்லுறவு வலுப்பெறும். சுப கருமங்கள் இல்லத்தில் நடைபெறும். உடல் ஆரோக்கியம் நன்றாகவிருக்கும். பணவருவாய் திருப்திகரமாகும். வர்த்தகர்களுக்கு எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். விவசாயிகள் சந்தைப்படுத்தலில் கணிசமான இலாபத்தை ஈட்டலாம். உத்தியோகத்தர்க்கு உயர் அதிகாரிகளின் செல்வாக்கு மிகும். மாணவர் கல்வியில் புது உத்வேகமடைவர். ஆசிரியரின் பாராட்டைப் பெற முயற்சி தேவை.

### சிங்கம் (மகம், பூரம், உத்தரம் 1ஆம் பாதம்)

இவ்வாரம் இல்லத்தில் நல்லுறவு ஓங்கும். தனம், பொருள், வெளிநாட்டுப் பணவரவு நன்றாகவிருக்கும். மனை, வாகன, குடும்பம் அபிவிருத்தியடையும். கணவன் – மனைவியிடையே அன்னியோன்னியம் கிட்டும். சிலருக்கு திருமணப் பேச்சுகள் சாதகமாகும். வர்த்தகர்கள் புதிய முலீடுகளை ஆரம்பிக்கலாம். உத்தியோகத்தர் ஏற்றம் காண்பர். விவசாயிகள் புதிய பயிர்ச் செய்கையைத் தொடங்கலாம். மாணவர் – ஆசிரியர் – பெற்றோர் உறவு வலுவடையும்.

### கன்னி (உத்தரம் 2,3,4 அத்தம், சித்திரை 1,2ஆம் பாதம்)

இவ்வாரம் குடும்பத்தில் வாக்குவிரோதம், சச்சரவுகள் நிகழ இடமுண்டு. வரவுக்கு மிஞ்சிய செலவுண்டு. உடல் ஆரோக்கியம் பாதிப்படையும். பெண்களுக்கு தெய்வ நம்பிக்கையும் நிதானமும் தேவை. வர்த்தகர்களுக்கு எதிர்பார்த்த இலாபம் கிடைக்காது. உத்தியோகத்தர்க்கு வேலைச்சுமையும் மேலதிகநேர வேலையும் கிடைக்கும். மாணவர்க்கு விடாமுயற்சியும் ஊக்கமும் அவசியம். நண்பர் சகவாசத்தை கட்டுப்படுத்தி படிப்பில் கவனம் செலுத்தினால் நல்லது.

### துலாம் (சித்திரை 3,4 சுவாதி, விசாகம் 1,2,3ஆம் பாதம்)

இவ்வாரம் குடும்ப வாழ்வில் நிம்மதி, அமைதி குன்றும். தேகாபிமானம் அவசியம். பணப்புழக்கம் சுமாராகவேயிருக்கும். உத்தியோகத்தர்க்கு உயர் அதிகாரிகளின் கெடுபிடிகள் தொடரும். வியாபாரம் மந்தநிலையிலிருக்கும். கொடுக்கல் வாங்கல்களில் நிதானம் அவசியம். விவசாயிகள் பயிர்ப்பாதுகாப்புகளை மேற்கொள்வதில் சிரமமேற்படும். மாணவர்க்கு விளையாட்டைப் போல் கல்வித் துறையிலும் நாட்டம் தேவை. ஆசிரியர் –மாணவர் –பெற்றோர் உறவு வலுவடையும்.

### விருச்சிகம் (விசாகம் 4, அனுசம், கேட்டை)

இவ்வாரம் குடும்பத்தில் சுப, சந்தோஷ நிகழ்ச்சிகள் நிலவும். தொழிலில் உயர்வு, மேன்மை உண்டு. ஈடுபடும் கரும காரியங்கள் தடை தாமங்களின் மத்தியில் நிறைவுபெறும். இல்லத்தில் வரவுக்கேற்ற செலவுண்டு. உத்தியோகத்தர்க்கு ஏற்றமுண்டு. வர்த்தகர்களுக்கு பழைய நிலுவைகள் வந்துசேரும். விவசாயிகளுக்கு சந்தைப்படுத்தலால் நிதி வசதிகள் அதிகரிக்கும். மாணவர் படிப்பில் மேலோங்க நண்பர்களின் சகவாசத்தைக் கட்டுப்படுத்தவேண்டும்.

த.சத்தியதாஸன்[சத்யா]

### தனுசு (மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் பாதம்)

இவ்வாரம் தனலாபம், வெளிநாட்டுப் பணம், பொருள்வரவு, மனை, வாகன, குடும்பம் அபிவிருத்தியடையும். குடும்ப அங்கத்தவரிடையே புரிந்துணர்வு நிகழும். இல்லத்தில் சுப கரும கொண்டாட்டங்கள் நடைபெறலாம். வர்த்தக நடவடிக்கைகள் விறுவிறுப்படைந்து வாடிக்கையாளர்களின் வரவு கூடும். விவசாயிகள் பயிர்ப் பாதுப்புக்களை மேற்கொள்ளலாம். மாணவர் சிலருக்கு புலமைப் பரிசில்களும் வெளிநாட்டுக்குரிய கல்வி வாய்ப்புகளும் கிட்டும்.

### மகரம் (உத்தராடம் 2,3,4 திருவோணம், அவிட்டம் 1,2ஆம் பாதம்)

இவ்வாரம் குடும்ப அமைதி குறையும். புத்திரர்களால் கவலை, செலவுகள் கூடும். தேகாபிமானம் அவசியம். குடும்பப் பெண்களுக்கு எதிலும் நிதானம் தேவை. வர்த்தகர்களின் நிதி வரவுகள் சுமாராகவேயிருக்கும். புதிய முதலீடுகளை அல்லது கூட்டு வியாபாரத்தை மட்டுப்படுத்தலாம். உத்தியோகத்தர்க்கு கணிசமான வேலைச்சுமையும் அதிகாரிகளின் அனுசரணையும் கிடைக்கும். மாணவர் விளையாட்டு, கல்வித்துறைகளில் ஆர்வம் கொள்வர்.

### கும்பம் (அவிட்டம், 3,4 சதயம், பூரட்டாதி 1,2,3ஆம் பாதம்)

இவ்வாரம் களத்திர நலம், இல்லற சுகம், குடும்ப அபிவிருத்தி உண்டாகும். கஷ்ட நஷ்டங்கள் ஆதவனைக் கண்ட பனிபோல விலகும். தேகம் புதுவீரியம் பெறும். பெரியோர், நண்பர் ஆதரவு கிட்டும். திருமணப் பேச்சுக்களில் சுமூகநிலை தோன்றும். வர்த்தகர்களுக்கு பழைய கடன் நிலுவைகள் வந்துசேரும். விவசாயிகளுக்கு புதிய பயிர்ச்செய்கை கைகொடுக்கும். நிதிவசதிகள் அனுகூலமாகும். மாணவர்க்கு படிப்பில் கூடுதல் உழைப்புத் தேவை.

### மீனம் (பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி)

இவவாரம் இல்லத்தில் நிம்மதி குறையும். வாக்குவிரோதங்கள், பிரச்சினைகள் தோன்றி மறையும். பொருளாதார நிலை மந்தநிலை பெறும். பெண்களுக்கு நாவடக்கம் நன்மை தரும். தெய்வ வழிபாடு, விரதம் அவசியம். வியாபாரிகள் புதிய முதலீடுகளை மட்டுப்படுத்தலாம். தொழிலாளர்களிடையே பிணக்குகள் தோன்ற வாய்ப்புண்டு. விவசாயிகளுக்கு உற்பத்திகளைச் சந்தைப்படுத்தலில் சிரமமுண்டு. மாணவர்க்கு கல்வியில் ஊக்கமும் விடாமுயறசியும் தேவை.

# எண்களால் ஏற்றமிகு வாழ்வு

## உடல் உண் 3 உயிர் எண் 6

3,12,21,30 போன்ற திகதிகளில் பிறந்தவர்களின் திகதி, மாதம், வருடம் ஆகிய மூன்றையும் கூட்டிவருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 6 வருமேயானால் குரு, சுக்கிரன் ஆதிக்கத்தில் பிறந்தவராவர். தேவ குருவாகிய குருவும், அசுர குருவாகிய சுக்கிரனும் ஒன்றுக்கொன்று ஒத்துப்போகாததால் குருவாகிய 3 உடல் எண்ணாக வருகின்றவர்களுக்கு சுக்கிரனாகிய 6 உயிர் எண்ணாக வருவது சிறப்பல்ல.

இவர்கள் தன் நடவடிக்கையாலும், தன் வாயாலும் தனக்குத் தீங்கைத் தானே தேடிக்கொள்வர். இவர்களுடைய பெயர் பிறந்த திகதிக்குப் பொருத்தமானதாக அமைந்தால் மிகவும் மேன்மையான நிலையை அடைவர். பொருத்தமற்ற பெயர் இருக்குமேயானால் காமவெறியாலும் பெண்களிடம் பழகுவதாலும் சிக்கல் ஏற்படும். சிலருக்கு உடன் பிறந்தவரிடத்தும், நண்பரிடத்தும், கருத்து வேறுபாடு உண்டாகும். தான் போட்ட திட்டங்கள் தோல்வியடையும்.

இந்த எண்ணிக்கையில் பிறந்த சிலர் அரசாங்க உத்தியோகத்தில் இருந்தும் நிம்மதியின்றி வாழ்கின்றனர். தொழில் செய்வோர் ஏறவும் இறங்கவுமாக இருக்கின்றனர். ஆனால் பெயர் தனது பிறந்த திகதிக்குப் பொருத்தமாக அமைந்துவிட்டால் எல்லா வளமும் பெற்றுச் சிறப்பாக வாழ்வர். இந்த எண்ணிக்கையில் பிறந்தவர்கள் பெண்ணாக இருந்தால் ஆண்களாலும் ஆணாக இருந்தால் பெண்களாலும் கவலைப்படும் சூழ்நிலை உருவாகிறது. இதனால் பார்ப்பதற்கு அழகாகத் தோற்றமளிக்கும் இவர்கள் காமத்தைக் கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டும்.

இவர்களுக்குத் தீர்க்கமான யோசனையும், நல்ல அறிவும் இருக்கும். தீய காரியங்களில் இறங்கிவிடுகின்றனர். சிலர் நல்லவர்களாக வாழ முயற்சி செய்தாலும் கெட்ட பெயரெடுக்கும் சூழ்நிலை அமைந்துவிடுகிறது. விதி சதா சதி செய்யும். இதனால் 46 எண் வருகிற மாதிரி பெயரை அமைத்துக் கொண்டால் வாழ்க்கை படிப்படியாக உயரும். பெயர் நன்றாக அமையப் பெற்றவர்களுக்கு மேற்குறிப்பிட்ட கெட்ட பலன்கள் குறையும். ஆடம்பரமான சாமான்கள் விற்கும் தொழிலாலும், கலைத் தொழிலாலும், கைத்தொழிலாலும் மேன்மையான நிலையை அடைவர். மலைப்பிரதேசங்களையும் இயற்கைக் காட்சிகளையும் கண்டு ரசிப்பர். ஆடம்பரப் பிரியராகக் காட்சியளிக்கும் இவர்கள் சிலநேரங்களில் வாழ்க்கையை வெறுத்தது போன்று இருப்பர். எதைச் செய்தாலும் திருப்தியாகச் செய்யாது குழப்பமாகவே செய்வர். இவர்கள் தன்னுடைய பெயரை கீழே குறிப்பிட்டபடி மாற்றியமைத்துக்கொண்டால் வாழ்க்கை சிறப்படையும்.

Dr. ஆர்.ஐ.துரைமுருகா

**தொழில்**

இவர்களுக்கு ஆடம்பரப் பொருட்களை வியாபாரம் செய்வதன் மூலம் செல்வம் சேரும். ஆடை, தொழிற்சாலை, கமிஷன் போன்ற தொழில்களாலும் லாபம் அடையலாம்.

**நோய்**

இவர்களுக்கு மனவியாதி, இருதயவலி, மூட்டுவலி, பல், கண்நோய் போன்றவைகள் வரும். பெயரைச் சிறப்பாக அமைத்துக் கொண்டால் நிவர்த்தியாகும்.

**பெயர் அமைக்கும் முறை**

இந்த எண்ணிக்கையில் பிறந்தவர்கள் 19,37,46,64,27,36,45 போன்ற சூரியன், செவ்வாய் ஆதிக்கத்தில் பெயரை மாற்றியமைத்துக்கொண்டு சிறப்பாக வாழலாம்.

**பின்பற்றவேண்டியவை**

யோகமான எண் - 1,9
யோகமான திகதிகள் -1,10,19,28; 9,18,27
யோகமான மோதிரக்கல் - தங்கபுஷ்பராகம், கனக புஷ்பராகம், வெள்ளை புஷ்பராகம்.
யோகமான நிறம் - வெளிர் நீலம், வெளிர் மஞ்சள்
ஆகாத நிறம் - இல்லை
ஆகாத திகதிகள் - இல்லை

(தொடரும்)



படத்தைப் பார்த்ததும் இவையென்ன செயற்கையாய் உருவாக்கப்பட்ட ரோஜாக்கள்தானே என எண்ணி விடாதீர்கள். பல ஆண்டு முயற்சியின் பயனாக உருவாக்கப்பட்ட இயற்கையான நீலநிற (?) ரோஜாக்கள்தான் இவை. டோக்கியோவிலேயே இந்த இயற்கையான நீலரோஜாக்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

இவை எந்தக் காலத்து கோட்டையின் சிற்பங்கள் என எண்ணுகிறீர்களா?

அண்மையில் உக்ரைன் தலைநகரில் மணல் சிற்பங்களுக்கான போட்டிகள் நடைபெற்றது. அப்போட்டியில் 20க்கும் மேற்பட்டோர் மணலில் சிற்பங்களைச் செய்து தமது கைவண்ணங்களை காட்டினர். அங்கு செய்யப்பட்ட ஒரு மணல் சிற்பத்தையே படத்தில் காண்கிறீர்கள்.



சுட்டெரிக்கும் வெயிலின் கொடுமை தாங்கமுடியாது பல்வேறு உயிரினங்கள் இறக்கின்றன.

பாகிஸ்தானில் வெயிலின் உக்கிரத்தால் பத்துப் பேருக்கு மேல் உயிரிழந்துள்ளனர். கொளுத்தும் வெயிலுக்கு கூலான குளிர்பானம் என்றால் சொல்லவும் வேண்டுமோ.

இங்கு ஓர் குரங்கார் எப்படி ஐஸ்கிறீமை ரசித்துக் குடிக்கிறார் பாருங்கள். இஸ்லாமாபாத்திலுள்ள உயிரியல் பூங்காவொன்றில் வளர்க்கப்படும் குரங்குகள் பார்வையாளர்களிடமிருந்து ஐஸ்கிறீமை வாங்கிக் குடிக்கும் காட்சி.





சீனத் தலைநகர் பெய்ஜிங்கில் நடைபெற்ற சிகை அலங்காரப் போட்டியில் பங்கேற்ற ஓர் சிகை அலங்கார நிபுணரின் கைவண்ணமே இக்கூந்தல் கிரீடம்.

இது ஒரு உலகசாதனை நிகழ்ச்சி. பெங்களூரில் 500 சி.சி திறனுள்ள ராயல் என் பீல்ட் மோட்டார் சைக்கிளில் 34 இராணுவவீரர்கள் ஒன்றாகச் சேர்ந்து 600மீற்றர் தூரம் பயணம்செய்து உலகசாதனை படைத்துள்ளனர்.

இதுவரை 30 இராணுவவீரர்கள் ஒன்றாகச் சென்றதே கின்னஸ் சாதனையாக இருந்தது. இதனை முறியடித்தே டோனர்ஸ் என்ற இக்குழுவினர் இச்சாதனையை நிலைநாட்டினர்.



யானையின் முகம் மட்டும் இப்படி தனியாக இருக்கிறதே என எண்ணுகிறீர்களா? இது யானையின் முகவடிவம்தான். ஆனால் இது ஒரு மலர்.

'புலி நகக் கொன்றை' என்ற இம்மலர் ஜுன், ஜுலை மாதங்களில் மாத்திரமே பெருமளவில் மலரும்.



## ஒலிம்பிக்

(05ஆம் பக்கத் தொடர்ச்சி.....)

இதுவரை இடம்பெற்ற ஒலிம்பிக் போட்டிகளிலேயே அதிக நாடுகள் கலந்துகொண்ட போட்டியாக 1964ஆம் ஆண்டு போட்டிகள் அமைந்தன. முதன் முதலாக இவ்வாண்டு ஒலிம்பிக் போட்டியில் அறிமுகப்படுத்தப்பட்ட ஜுடோ போட்டியில் போர்த்துக்கலைச் சேர்ந்த **ANTONIUS GEESINK** வெற்றிபெற்றார்.

1960ஆம் ஆண்டு ஒலிம்பிக்கில் வெறும்கால்களுடன் ஓடி மரதன் ஓட்டப்போட்டியில் சம்பியனாகிய எதியோப்பியாவின் **ABEBE BIKILA** இவ்வாண்டு போட்டிகளிலும் முதலிடத்தைப் பெற்றார். ஆனால் சப்பாத்துக்களுடன் ஓடியே அவர் வெற்றிபெற்றார்.

இவ்வாண்டு ஒலிம்பிக் போட்டியில் அமெரிக்க நீச்சல் வீரர் **DON SCHOLLANDER** நான்கு தங்கப்பதக்கங்களை வென்றமை குறிப்பிடத்தக்கது.

இவ் ஒலிம்பிக் போட்டியில் சோவியத்யூனியன் 30 தங்கம், 31வெள்ளி, 35வெண்கலம் உட்பட 96 பதக்கங்களைப் பெற்று பதக்கப்பட்டியலில் முதலிடத்தைப் பெற, மொத்தமாக 90 பதக்கங்களைப் பெற்று 2ஆம் இடத்தை அமெரிக்கா பெற்றது. அதேவேளை 18வது ஒலிம்பிக் போட்டியை நடாத்திய ஜப்பான் 16 தங்கம், 5வெள்ளி, 8 வெண்கலம் உட்பட 29 பதக்கங்களைப் பெற்று பதக்கப்பட்டியலில் நான்காம் இடத்தைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## கவலை எதற்காக?.....

(12ஆம் பக்கத் தொடர்ச்சி )

...ஆகவே ஒன்றில் இரக்கப்படக் காரணமாக இருப்பது பற்று. அதுவே கடமையில் இருந்து விலக வைப்பது. கும்பகர்ணன் இராவணன் மீது கொண்ட பற்றினால் தமையன் செய்வது தவறு எனத் தெரிந்தும் தமையனுக்காகப் போர்க்களம் சென்று உயிரை மாய்த்தான். விபீடனன் இராவணன் மீது பற்றுக்கொண்டாலும் நீதியில் நின்று விலகவில்லை. தவறு என்று தெரிந்ததும் அதில் இருந்து விலகிக்கொண்டான். நீதியை உணர்வது எளிது. அதன்படி செய்வது அரிது. கும்பகர்ணனால் குடும்ப வட்டத்தைத் தாண்டமுடியவில்லை. விபீடணன் தாண்டி உலகிற்கு வந்தவன். இப்படி எத்தனை பேரால் வரமுடிகின்றது?

இல்லறம் நல்லறம் ஆற்றத் தடையானதன்று. இல்லறத்தில் இருந்துகொண்டு எத்தனையோ நாயன்மார்கள் நல்லறங்களை புரிந்திருக்கிறார்கள். தமக்கென வாழாப் பெருந்தகைகள் அவர்கள்.

வயோதிபர்களைப் பார்த்து ''சும்மா இருக்காமல் நான்கு மாமரங்களையாவது வாங்கி வைத்து பராமரியுங்களேன். பொழுதும் போகும் பிரயோசனமாகவும் இருக்கும்'' என்று கூறினால் அவர்களிற் பலர் 'நாளைக்கு நாங்கள் இருக்கமாட்டோம், எதற்கு மாமரம்' என்பார்கள். இவர்கள் செயலாற்ற விருப்பமற்றவர்கள். சுயநலம் உடையவர்கள். தாங்கள் நாட்டிய மாமரம் தங்களுக்கு மட்டுமே கனி தரவேண்டும் என்று எண்ணும் இவர்கள் ஞானம் பெறுவது எப்போது? இளமையில் ஓடியோடி உழைத்தவர்கள் முதுமைக் காலத்தில் இயலுமானதைச் செய்வார்கள். சில முதியவர்கள் உழைப்பதைப் பார்த்து இளைஞர்களே கேட்பதுண்டு ''நாளைக்கு இருப்பீர்களோ என்னமோ? எதற்காக இந்தப்பாடு?'' என்று.

கர்மம்புரிய வயது தேவையில்லை. நாளைய உலகத்திற்காக இவர்கள் செயல்புரிவதை யார்தான் ஏற்கப்போகின்றார்கள்.

''செயலிற் செயலின்மையையும் செயலின்மையிற் செயலையும் காண்கின்றவன் எவனோ அவனே கர்மயோகி'' என்கிறது கீதை. எனவே செயல் என்பது கட்டாயம் நிகழ வேண்டிய ஒன்று. செயலிற்தான் தானமும் போகமும் இருக்கவேண்டும். இவையிரண்டும் வாழ்வின் அத்திவாரமும், கட்டிடமும் ஆகவே கடமையைக் கடமையாகச் செய்தால் 'கவலை' என்ற ஒன்று தோன்றமுடியாது. உயிரை வளர்ப்பதுதான் வாழ்வின் இலட்சியமேயன்றி உடலை வளர்ப்பதல்ல. ஆன்மாவின் உச்ச வளர்ச்சிக்குப் பற்றற்ற கன்மமே சாட்சி.

# இவரைத் தெரியுமா? பரிசுப்போட்டி இல -18

## படத்தில் இருப்பவர் யார் தெரியுமா?



கிரிக்கெட் டெஸ்ட் வீரர்களின் தரவரிசையில் முதலிடத்தில் உள்ளவரும், ஒரு அணியின் தலைவருமான இவரை உங்களுக்குத் தெரிந்தால் உங்கள் விடைகளை எழுதி எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும் நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:-

**இவரைத் தெரியுமா?**
**போட்டி இல:- 18**
**'சங்குநாதம'**
**இல:- 15, வெள்ளாந்தெரு,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

**குறிப்பு:-**
சரியான விடை எழுதுபவர்களில் மூன்று போட்டியாளர்களுக்கு குலுக்கல்முறை மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசு வழங்கப்படும். பரிசுபெறும் அதிஷ்டசாலிகள் தமக்குரிய பரிசுப்பணத்தினை 'வலம்புரி' காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும்.

**இவரைத் தெரியுமா? பரிசுப் போட்டி இல:- 18**

படத்தில் உள்ளவரின் பெயர் :-..........................

அனுப்புபவரின் முழுப்பெயர் :-..........................

அனுப்புபவரின் முகவரி :-..........................

..........................

..........................

**இவரைத்தெரியுமா? பரிசுப்போட்டி இல - 16 சரியான விடை.**





**நடிகை சாயாசிங்**

**இவரைத் தெரியுமா பரிசுப் போட்டி இல. 16 இல் பங்குபற்றிப் பரிசுபெறும் அதிஷ்டசாலிகளின் பெயர் விபரம்**

| | | |
|---|---|---|
| முதற் பரிசு | :- | S.தர்ஷிகா<br>4ஆம் வட்டாரம்,<br>நயினாதீவு. |
| இரண்டாம் பரிசு | :- | இ.சிவநாதன்<br>நாவலர் வீதி,<br>யாழ்ப்பாணம். |
| மூன்றாம் பரிசு | :- | ஞா.கிறிஸ்ரிராசா,<br>லூர்த்து மாதா கோவிலடி,<br>தும்பளை,<br>பருத்தித்துறை. |

**சரியான விடை எழுதிப் பாராட்டுப் பெறுவோர் பெயர் விபரம்**

வ.சிவாஜி, கரணவாய். R.ராஜசந்திரன், நாவாந்துறை. ச.யதுகுலன், தெல்லிப்பளை. பா.அன்பினி, சண்டிலிப்பாய். பா.செல்வராணி, வட்டுக்கோட்டை. க.சஷீலா, வட்டுக்கோட்டை. இ.சுவர்னா, மூளாய். வி.செல்வநாயகம், புத்தூர். பா.தர்சினி, சண்டிலிப்பாய். கோ.சத்தியப்பிரியா, யாழ்ப்பாணம். எம்.எஸ்.எஸ்.ராஜ்குமார், மானிப்பாய். இ.மாலதி, தம்பசிட்டி. T.S.சயந்தன், வட்டுக்கோட்டை. ந.நவஜீவன், மூளாய். K.புஸ்பராணி, தம்பசிட்டி. ம.கவிப்பிரியா, முல்லைத்தீவு. மு.ஜெயந்தி, சித்தன்கேணி. கே.இராஜகோபால், வட்டுக்கோட்டை. அ.கலைச்செல்வன், யாழ்ப்பாணம். லோ.கீர்த்திகா, வல்வெட்டி. T.துவாரகா, திருநெல்வேலி. சு. தர்ஷிகா, கொக்குவில். S.நித்தியா, யாழ்ப்பாணம். ப.லோகானந், சாவகச்சேரி. த.பிரதீபன், கரவெட்டி. L.சுவஸ்திகா, உடுப்பிட்டி. A.தமிழினி, மிருசுவில். க.சிவானி, இணுவில். ம.சிந்துஜா, மல்லாகம். சா.கஸ்தூரி, அளவெட்டி. K.அனுஷன், கரவெட்டி.




இ.சுவிதா
வயது:- 17
பொற்பதி,
குடத்தனை.
வழமையானவை.

ந.செந்தூரன்
வயது:- 19
நவாலி கிழக்கு,
மானிப்பாய்.
பத்திரிகை, வானொலி,
பேனாநட்பு.

ச.குட்டி
வயது:- 17
C/O தர்ஷன் வீடியோ,
7ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு.
T.V, வானொலி, கிரிக்கெற்

தி.தயாளினி
வயது:- 22
C/O தயானந்தன்,
புலவனார் லேன்,
கல்வியங்காடு.
வானொலி, பத்திரிகை,
பேனாநட்பு.

## தண்ணீரிலே...


(13ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் வேறு வழியின்றிச் சத்தியம் செய்தார்.

"நன்றி டொக்டர். நான் வருகிறேன்" என்று கூறிவிட்டுச் சென்றவனை இன்றுதான் அவனது உயிரற்ற உடலைக் கண்டார் டொக்டர் பல்லவகுமார்.

அவர்கள் இருவருக்கும் தெரிந்த உண்மை யாருக்கும் தெரியாமலே போக அவனது உடலுக்குச் செய்ய வேண்டிய இறுதிக்கடன்களையெல்லாம் தானே செய்துமுடித்தார்.

# குறுக்கெழுத்துப் போட்டி இல -18



அனுப்ப வேண்டிய முகவரி-

**குறுக்கெழுத்துப் போட்டி இல - 18**
**'சங்குநாதம்'**
**இல:- 15, வெள்ளாந்தெரு,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

முழுப் பெயர் :- ..........................

முகவரி :- ..........................

..........................

..........................

இங்கே வெட்டுக ..........................

## இடமிருந்து வலம்

(1)சிறந்தது இதனைக் குறிக்கும். (4)கிளி - இப்படியுமழைப்பர். (5) கண்ணகியும் இவளும் ஓர் இலக்கியத்தில் தொடர்புபட்டவர்கள். (7) பலமுள்ள காட்டு மரம். (9) மங்களப் பொருள் (மரத்தில் காய்ப்பது). (10) இலங்கையின் விளைபொருட்களில் முக்கியமானதும், அவசியமானதும். (11) ஒரு உலோகம்.

## மேலிருந்து கீழ்

(1) வடக்கு நோக்கிச் சென்ற ரயிலின் பெயர்களில் ஒன்று. (2) நம்மைப் பேணிப் பாதுகாக்கவேண்டியவர். (3)எந்தச் சக்தியாலும் அழிக்கமுடியாது. (5) 'இது ஒன்றே பெரிது எனக்கொண்டு வாழ்வது எமது சமுதாயம்' என்றொரு பாடல் அடி உண்டு. (கீ.மே) (6) விவாதம் - இதனைக் குறிக்கும். (8) கூடுகட்டத் தெரியாத பறவை.

## குறுக்கெழுத்துப் போட்டி இல.16இன் விடைகள்

### இடமிருந்து வலம்

(1) ஒப்பனை (4) பற்று (5) திருப்பணி (9) பரமானந்தம்.

### மேலிருந்து கீழ்


(1) ஒத்திகை (2) பருப்பு (3) வறுமை (4) பணிவு (6) வீரம் (7) மனம் (8) வதம்.

### பரிசு பெற்றோர் பெயர் விபரம்


| | | |
|---|---|---|
| முதற் பரிசு | :- | N.ராகவன்<br>திருவையாறு,<br>கிளிநொச்சி. |
| இரண்டாம் பரிசு | :- | H.சுகிதா<br>89/1, வண்ணார்பண்ணை,<br>யாழ்ப்பாணம். |
| மூனறாம் பரிசு | : | கே.அரசேஸ்வரன்<br>கலைமகள் வீதி,<br>நல்லூர் வடக்கு,<br>யாழ்ப்பாணம். |

**போட்டியில்கலந்துகொண்டுபாராட்டுப்பெறும் அதிஷ்டசாலிகளின் பெயர் விபரம்**

பா.அன்பினி, சண்டிலிப்பாய். பா.செல்வராணி, வட்டுக்கோட்டை. வே.குமாரசுவாமி, கரவெட்டி. சி.சியாமளா, சுன்னாகம். கே.இராஜகோபால், வட்டுக்கோட்டை. வெ.வாராஹி, சுழிபுரம். பா.தர்ஜினி, சண்டிலிப்பாய். க.சஷீலா, வட்டுக்கோட்டை. இ.இராஜேஸ்வரன், பண்டத்தரிப்பு. ச.திலீப்காந்த், சங்கானை. க.மலர், யாழ்நகர். வி.தர்மராஜா, பருத்தித்துறை. யோ.ஜெகதீஸ்வரி, சாவகச்சேரி. T.S.சயந்தன், வட்டுக்கோட்டை. வீ.செல்வநாயகம், புத்தூர். ஞா.இராஜதேவி, தெல்லிப்பளை. R.ராஜசந்திரன், நாவாந்துறை. பு.டிலக்ஷன், சுன்னாகம். ந.அபிராமி, மூளாய். V.இளங்கோ, கோப்பாய். ச.பிரபாகர், மல்லாவி. R.தர்சினி, யாழ்ப்பாணம். K.யாழினி, கொக்குவில். Y.சுகன்யா, சாவகச்சேரி. ஜெ.ஜெயமலர், இணுவில்.



# நயினாதீவு நாகபூசணி அம்மன்



# திருத்தேர்க் காட்சி –2004








இப் பத்திரிகை வலம்புரி அன் கோ ஸ்தாபனத்தாரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம். என்னும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.07.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது